# வரதானங்களின் மூலம் அவ்யக்த பாலனை

பிரஜாபிதா பிரம்மா குமாரிகள்


18-ஜனவரி-1995



ஓம் சாந்தி... பிரஜாபிதா பிரம்மாவின் 26வது அவ்யக்த ஆண்டினை முன்னிட்டு ஜனவரி 18-ம் தேதி வெளியிடப்பட்டது. தினமும் அமிர்த வேளையில் ஒரு வரதானத்தைப் படித்து ஆழமாய் சிந்திக்கும்போது அவ்யக்த வதனத்தில் இருந்து பாப்தாதா தனது வரதானக் கரங்களை நமது சிரத்தில் வைத்து தனக்கு சமான் வரதானி-மகாதானி மூரத் ஆக்குகிறார் என்பது நன்கு அனுபவமாகும்.

ஓம் சாந்தி . . .

பிரஜாபிதா பிரம்மா குமாரிகள்
ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்
Q-96, 3வது அவென்யு,
அண்ணா நகர், சென்னை-40
044-26267441
044-26266765


मैं हूँ ना

**கர்ம பந்தன் முக்த் பவ !**

ஒவ்வொரு கர்மத்தையும் செய்யும் பொழுது நான் உலக மங்களத்திற்காக நிமித்தமாய் இருந்து இக்காரியத்தைச் செய்கிறேன் என்கிற உணர்வு வேண்டும். நான் கர்ம பந்தனத்தில் வரக்கூடாது. கர்மயோகியாய் இருந்து காரியங்களை செய்ய வேண்டும். கர்ம இந்திரியங்களுக்கு எஜமானராகி கர்மங்கள் செய்யக் கூடிய கர்ம பந்தன் முக்த் (விடுதலை) ஆத்மா நான்.

## சர்வ சக்திகளும் நிரம்பப் பெற்ற மாஸ்டர் சர்வ சக்திவான் பவ !

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் தன்னைப் போன்று சர்வ சக்திகளும் நிரம்பப் பெற்ற மாஸ்டர் சர்வ சக்திவான் வரதானத்தை வழங்குகிறார். எனவே அனைத்து சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்தி பறந்து கொண்டே செல்ல வேண்டும். ஒரு சக்தியும் குறைவாக இருக்கக் கூடாது.

**சதா டபுள் லைட் பவ !**

ஒரே ஒருவரின் பலம், அவரின் மீது நம்பிக்கை. இந்த அனுபவத்தை செய்து கொண்டே டபுள் லைட் ஆகுங்கள். (ஏக் பாப் தூஸ்ரா ந கோயி) ஒரே ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த நினைவின் மூலம் 'எனது' என்பவைகளை 'உனது' என்பவைகளாக மாற்றுங்கள். அதாவது அனைத்து பாரங்களையும் பாபாவிடம் ஒப்படையுங்கள்.

**அந்தர்முகி சதா சுகி !**

அந்தர் முக்தா என்னும் குணமே அனைத்திற்கும் அடிப்படை. அந்தர்முக்தாவை பயிற்சி செய்வோர்கள் அனைத்து குணங்களாலும் நிரம்பி வழியப் பெறுகிறார்கள். எனவே இந்த அனுபவத்தை செய்து கொண்டே முன்னேறுங்கள். ஏனெனில் பிற குணங்களையும் அருகில் கொண்டு வருவதற்கு இதுவே சாதனம்.

**சதா யோகயுக்த், யுக்தியுக்த் நிறைந்த சிரேஷ்ட ஜீவன்தாரி பவ !**

யோகயுக்த், யுக்தியுக்த் மற்றும் ராஸயுக்த் ஆத்மா நான். இந்த நினைவின் மூலம் எளிதாக முன்னேறிச் செல்லுங்கள். ராஸயுக்த், யோகயுக்த் ஆவதன் மூலம் ஸித்தி நிலையை அடைந்தே தீருவோம்.

**சதா விஜய் பவ !**

என்னுடைய தலையில் பாபாவின் ஆசீர்வாதக் கரங்கள் உள்ளன; அவர் என் கூடவே இருக்கிறார் – இந்த அனுபவத்தை அதிகரித்துக் கொண்டே ஒவ்வொரு அடியிலும் வெற்றியைப் பெறுங்கள். பாபாவுடைய கரங்கள் அதாவது சிரேஷ்ட வழி மற்றும் துணை முன்னேறிச் செல்வதற்கான அனுபவத்தை எளிதில் தரும்.

### சதா திட சங்கல்பதாரி பவ !

எந்த ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னரும் தனது திட தன்மை என்னும் விசேஷத்தை வெளியே கொண்டு வாருங்கள். எங்கு திட தன்மையோ அங்கு வெற்றி நிச்சயம். திட தன்மை விருத்தியையும் (உள்உணர்வு) மாற்றி விடுகிறது. எனவே தினமும் ஏதேனும் ஒரு திட சங்கல்பம் என்னும் விரதத்தை மேற்கொள்ளுங்கள்.

**சர்வ சிரேஷ்ட பூஜ்ய ஆத்மா பவ !**

சதா இந்த வரதானத்தை நினைவில் கொண்டு ஆன்மீக போதையை அனுபவம் செய்தால் ஏதேனும் வஸ்து அல்லது தனி நபர் மீதான பிரபாவம் ஏற்படாது. ஏனெனில் எந்த வித கவர்ச்சியும் பூஜிக்கத் தக்க ஆத்மாக்களை தன் பக்கம் கவர்ந்து இழுக்க முடியாது.

**சதா சம்பன்ன மற்றும் சந்துஷ்ட பவ !**

பாப்தாதா விரும்பி, தேர்ந்தெடுத்து என்னை அவருடையவர் ஆக்கி இருக்கிறார். எனவே நன்றாய் இருக்கிறோம், நன்றாய் இருப்போம். நேற்று (சத்யுகத்தில்) விசேஷ ஆத்மாக்களாய் இருந்தோம். இன்று, நாளையின் நினைவு, அதாவது நாடகத்தின் தெளிவான நினைவின் மூலம் சம்பன்னம் (நிறைவு) மற்றும் சந்துஷ்டதா (திருப்தி) ஆகியவற்றின் அனுபவத்தைச் செய்யுங்கள்.

**பாப்சமான் சம்பன்னதாவின் வரதானி பவ !**

ஒவ்வொரு வார்த்தையும் பிரம்மாபாபாவைப் போன்று இருக்கட்டும். எழுவது, அமர்வது, பார்ப்பது, நடப்பது அனைத்துமே அவர் சமமாய் இருக்கட்டும். இம்மாதிரி பாபாவைப் பின்பற்றி உங்கள் கண்ணாடி மூலம் பிரம்மாபாபாவை வெளிப்படுத்துங்கள். இதுவே சம்பன்ன நிலையின் வரதானத்தைப் பெறுவதாகும். ஆக தனது ஒவ்வொரு செயலின் மூலம் பிரம்மாபாபாவின் செயலை வெளிப்படுத்தும் சிரேஷ்ட ஆத்மா ஆகுங்கள்.

**ஒவ்வொரு அடியிலும் பரமாத்ம பாலனையை அனுபவம் செய்யக் கூடிய பாக்யவான் ஆத்மா ஆகுக !**

என்னை வளர்ப்பவர் சுயம் பகவான் என்பதை பிரத்யக்ஷமாக அனுபவம் செய்யுங்கள். பிறவி எடுக்கும் போதே எல்லையற்ற பொக்கிஷத்தால் நிறைந்த ஆஸ்தியின் உரிமையாளர் நான் – இந்த பாக்யத்தின் சிரேஷ்ட உணர்வின் மூலம் சதா மலர்ச்சியுடன் இருங்கள்.

## திரிகால தரிசி பவ !

உண்மையான ஆசிரியர் மூலம் மூன்று காலங்களின் கல்வியைக் கற்கும் இறை மாணவன் நான். சிருஷ்டியின் முதல், இடை, கடை – மூன்று காலங்களின் ஞானத்தை தெரிந்து கொண்டு பல பிறவிகளுக்கு தனது சிரேஷ்ட பாக்யத்தை ஏற்படுத்திக் கொள்ளும் பாக்யவான் ஆத்மா நான். இந்த பாக்யமே முகத்திலும் நடத்தையிலும் தென்படட்டும். மனம் சதா பாக்யத்தின் அனுபவத்தை செய்து கொண்டே நாட்டியம் ஆடிக் கொண்டே இருக்கட்டும்.

**ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சம்பாத்தியத்தை சேமிக்கக்கூடிய பதமாபதம் பாக்யவான் ஆத்மா பவ!**

சத்குருவின் மூலம் அளவிட முடியாத வரதானங்களின் சிரேஷ்ட பாக்யம் ஆத்மாவாகிய எனக்கு கிடைத்துள்ளது. நான் சத்குருவின் மூலம் சிரேஷ்ட வழியை பெற்று ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சம்பாத்தியத்தை சேர்த்து வைக்கும் பதமாபதம் பாக்யவான் ஆத்மா. சதா இந்த குஷி மற்றும் போதையில் இருங்கள்.

**மாயாஜீத், நிர்விக்ன ஆத்மா பவ !**

எப்பொழுதும் யதார்த்தமான யோகம் மற்றும் சேவையின் மூலம் நிர்விக்ன ஸ்திதியை அனுபவம் செய்யக் கூடிய சிரேஷ்ட பாக்யவான் ஆத்மா நான். சுயநலமற்ற சேவை செய்து கொண்டே நினைவில் இருப்பது, இதுவே இரட்டை பூட்டாகும். இதன் மூலம் மாயை வருவதற்கான வாசல் பூட்டப்பட்டு விடுகிறது. எனவே இதன் வரதானத்தை நினைவில் கொண்டு மாயாஜீத், நிர்விக்ன ஆத்மா ஆகுக.

## விதியின் மூலம் அபிவிருத்தியை அடையக் கூடிய சிரேஷ்ட ஆத்மா பவ !

ஒவ்வொரு விஷயத்திலும் முன்னேறுவதற்கான மிக எளிய விதி யாதெனில் 'எனது பாபா' என்று மனதார நினையுங்கள். இந்த நினைவின் எளிய விதியின் மூலம் புருஷார்தத்தில் முன்னேற்றத்தை அடையுங்கள். அதாவது, பலவீனங்களை ஒழித்து விடுங்கள்.

**சதா அன்பான மற்றும் அன்பிலே மூழ்கிப் போகும் ஆத்மா பவ !**

கர்மத்தில், சொல்லில், தொடர்பு, சம்பந்தத்தில் அன்பாகவும் நினைவு மற்றும் ஸ்திதியின் அன்பிலே மூழ்கியும் இருங்கள். பாப்தாதாவின் அன்பு உங்கள் அனைவரையும் அவருடையவர்களாக்கி விட்டது. மேலும் அனைத்தையும் மறக்கச் செய்தது. தேகி அபிமானி ஆக்கியது. ஆக இந்த விசேஷ வரதானத்தை தாரணை செய்து பாபாவுக்கு சமமாக மாறுங்கள்.

## ஸ்வமான்தாரி – ஸ்வதர்ஷன சக்ரதாரி பவ !

ஸ்வமானத்தில் நிலைத்திருப்பதன் மூலம் தேக அபிமானம் விட்டுப் போய் விடும். மேலும் நிர்மாண் (பணிவு) தானாகவே வந்து சேரும். ஸ்வதர்ஷன சக்கரம் சுற்றிக் கொண்டே இருந்தால் பிற சிந்தனைகள் முடிவுக்கு வந்து விடும். எனவே இந்த வரதான நினைவின் மூலம் மாயாஜீத், ஜகத்ஜீத் ஆகி மகாதானி, வரதானி ஆகுங்கள்.

## சதா ஞான மூரத் பவ !

புத்தியில் சதா ஞானத்தின் சிந்தனை சுழன்று கொண்டே இருக்கட்டும். சொல்லின் மூலம் ஞானத்தின் வர்ணனையே செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு கர்மத்திலும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாகி சாட்சாத்கார் செய்வியுங்கள். ஞான மூரத் ஆகுங்கள், அதாவது வாழ்க்கையில் அஞ்ஞான இருள் அகல வேண்டும். ஞான மூரத் வரதானம் பெற்ற ஆத்மாவின் மூலம் எவ்வித யதார்த்தமற்ற சங்கல்பமோ, சொல்லோ, செயலோ நடக்கவே முடியாது.

## அனைத்து சுகங்களின் அனுபவம் செய்வதற்கு பலரூபதாரி பவ !

எப்படி இன்றைய உலகில் செய்யும் செயலுக்குத் தகுந்தாற்போல் வேடம் அணிந்து கொள்கிறார்களோ அப்படி குழந்தைகளாகிய நீங்களும் எந்த கர்மத்தைச் செய்ய விரும்புகிறீர்களோ அவ்வாறே வேஷத்தையும் மேற்கொள்ளுங்கள். உங்களது புத்திபலத்தின் மூலம் சாகார சரீரத்தை மறந்து சூட்சும சரீரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அப்போது சாகாரி மற்றும் ஆகாரி ரூபத்தை மேற்கொள்ளும் பல ரூபதாரிகளாகி சர்வ சொரூபங்களின் சுகத்தை அனுபவம் செய்து, பிறருக்கும் செய்வீர்கள்.

## அங்கதனுக்கு சமமாய் அச்சல்-அடோல் பவ !
## (அசையாமலும்-உறுதியாகவும்)

எப்படி ஆரம்ப காலத்தில் ஸ்தாபனக் கட்டத்தில் ஒரு பக்கம் முழு உலகம் நிற்க, மறுபக்கம் ஒரே ஒரு நிமித்த ஆத்மா (பிரம்மாபாபா) நின்றார் இல்லையா? இருப்பினும் நிச்சயத்தில் சதா அங்கதனை போன்று அசையாதும், உறுதியாகவும் நின்றார். எந்தவித பிரச்சினையும் அவரது புத்தி என்னும் பாதங்களை ஒரு போதும் அசைக்க முடியவில்லை. இம்மாதிரி அசையாத உறுதியான நிலையின் வரதானி ஆகுங்கள். அதாவது தந்தையைப் பின்பற்றுங்கள்.

**சதா சாட்சி திருஷ்டி பவ !**

நாடகம் என்னும் கேடயத்தின் துணையுடன் ஒவ்வொரு சங்கல்பமும், செயலும் நடைபெற வேண்டும். இவைகளின் மூலம் சாட்சிப்பார்வை மிக எளிதில் ஏற்படும். இவ்வாறு சாட்சிப்பார்வையில் வரும் போது நான் எனது என்பவைகள் மறைந்து போகின்றன. விஸ்தாரம் சுருங்கி சார சொரூபத்தின் ஸ்திதி எளிதில் நிலைக்கும். எனவே இந்த வரதானத்தை நடைமுறைப் பயிற்சியில் கொண்டு வாருங்கள்.

**தாரணா மூரத் மற்றும் குண மூரத் பவ !**

பரமாத்மா ஞானத்தின் அடையாளம் நடைமுறை வாழ்க்கை. எனவே தங்களின் நடைமுறை வாழ்க்கை சர்வ திவ்ய குணங்களின் மொத்த உருவாக தென்படட்டும். ஒரு பக்கம் சொற்பொழிவு (சொல்) இருக்கட்டும் மறுபுறம் நடைமுறை சொரூபமாக இருக்கட்டும். அப்பொழுதே வெற்றியாளர்களாக ஆக முடியும். அதாவது தர்மயுத்தத்தில் வெற்றி கிடைக்கும்.

**சுய கல்யாண்காரியின் கூடவே விஷ்வ கல்யாணகாரி பவ !**

எப்படி சுய முன்னேற்றத்திற்காக உடல் பொருள் சக்தி ஆகியவைகளை ஈடுபடுத்துகின்றீர்களோ அதே போன்று உலக மங்களத்திற்காகவும் உடல் பொருள் ஆவியை ஈடுபடுத்துங்கள். தனது கணக்கு வழக்குகளை தீர்ப்பதற்கு நிமித்தம் ஆகுங்கள். இதுவே மிக நுண்ணிய, ஆழமான புருஷார்த்தம் ஆகும்.

**நிராகாரி மற்றும் அசரீரி பவ !**

இப்பொழுது ஒட்டுமொத்தமான ரூபத்தில் இந்த வரதானத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். ஒரே விநாடியில் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே ஸ்திதியில் அதாவது நிராகார அசரீரி ஸ்திதியில் ஸ்திரமாகும் போது வெற்றியின் பேரிகை ஒலி ஒலிக்கும். எனவே ஒரே சமயத்தில் ஒரே கட்டளை பிரமாணம் அசரீரி ஆவதற்கான பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

## சதா சிரேஷ்ட துணையில் இருக்கக் கூடிய பதமாபதம் பாக்யசாலி ஆத்மா பவ !

யார் எவரது அருகில் இருக்கிறார்களோ அவர்களிடம் சமீபத்தில் இருப்போரின் குணம் தானாகவும் மிக எளிதாகவும் வந்து சேரும். எனவேதான் துணையின் சாயல் (சங் கா ரங்) என்று கூறப்படுகிறது. எனவே நாம் பாப்தாதாவின் சமீப சிரேஷ்ட துணையில் இருக்கக்கூடிய ஆன்மீக சாயலை வெளிப்படுத்தும் ஆத்மாக்கள். இந்த வரதானத்தை சதா நினைவில் கொண்டு தன் மூலம் பாப்தாதாவின் குணம் சம்ஸ்காரங்களை வெளிப்படுத்துங்கள்.

### சம்பூர்ண நஷ்டமோகா பவ !

எந்த பொருளோடு மோகம் அதாவது லகன் ஏற்படுகிறதோ அது அடிக்கடி தன் பக்கம் கவர்ந்து இழுக்கிறது. அனைத்திலும் அதிகமாக தேகத்தின் கணக்குவழக்கு, பாக்கி இருக்கும் கர்மபோக ரூபத்தில் வரக்கூடிய தொந்தரவுகள், தன் பக்கம் கவர்ந்து இழுக்கின்றன. எனவே இப்பொழுது விசேஷ ஆன்மீக ட்ரில் (பயிற்சி) மூலம் இந்த கவர்ச்சிகளை முடித்து சம்பூர்ண நஷ்டமோகாவின் வரதானத்தை வாழ்க்கையில் கொண்டு வாருங்கள்.

## சர்வ சக்திவானின் குழந்தை மற்றும் இயற்கையின் எஜமானன் பவ !

நாம் பாலகர்களிலிருந்து எஜமானர்களாகிறோம். இந்த ஸ்மிருதி சொரூபத்தின் வரதானத்தின் மூலம் இயற்கையின் எஜமானர்கள் ஆகுங்கள். பிறகு உலகத்தின் எஜமானர்கள் ஆவீர்கள். எவ்வளவு குழந்தை பருவத்தின் நினைவு இருக்கிறதோ அவ்வளவு எஜமான தன்மையின் போதை அல்லது குஷி நிறைந்து இருக்கும். சர்வ சக்திவான் பாபாவின் பாலகர்கள், அதாவது அதிகார உரிமை உடையோர் எவரது வசத்தின் கீழும் வருவது இல்லை.

### சதா எவரெடி மற்றும் தீவிர புருஷார்த்தி பவ !

எப்படிப்பட்ட சூழ்நிலை, பரிட்சையாயினும் சரி, ஸ்ரீமத்தின் ஆர்டர் பிரகாரம் எந்த நேரத்தில் எந்த ஸ்திதியில் நிலைக்க வேண்டுமோ அந்த ஸ்திதியில் ஒரு விநாடியில் நிலைத்திட வேண்டும். சிறிது கூட சங்கல்பங்களின் ஏற்றத்தாழ்வு கூடாது. இங்ஙனம் தீவிர புருஷார்த்திகளே எவரெடி வரதானத்திற்கு அருகதை ஆனோர். இதற்கு சப்தத்திற்கு அப்பாற்பட்ட ஸ்திதியில் நிலைத்திடும் பயிற்சியை அதிகரியுங்கள்.

**லக்கி மற்றும் லவ்லி பவ !**

பாபாவினுடையவர்களாவது என்றால் லக்கி ஆவதாகும். யார் லக்கியாக இருக்கிறார்களோ அவர்கள் லவ்லியாக (அன்பு நிறைந்தவர்) நிச்சயமாக இருப்பர். லவ்லி என்றால் அன்பு சிநேகத்தை கொடுத்து வணங்குவது. நமது எதிரில், சம்மந்தத்தில் யார் வந்தாலும் சரி அவர்களோடு சிநேகத்தின் கொடுக்கல் வாங்கல் செய்யுங்கள். இந்த தானத்தின் மகாதானி ஆகுங்கள். அப்போது அனைவரின் ஒத்துழைப்பு தானாகவே கிடைக்கும். கூடவே அனைத்து பலஹீனங்களின் கிரஹணமும் விட்டு போகும்.

**உங்களின் துல்லியமான (தவறில்லாத) படத்தை ஏற்படுத்துவதற்கு பரந்த மனப்பான்மை பவ !**

உங்களது எண்ணம், சொல், செயல், சமயம், சுவாசம் ஆகிய அனைத்து பொக்கிஷங்களையும் பரந்த உள்ளத்துடன் உபயோகியுங்கள். அதாவது சேவையில் ஈடுபடுத்துங்கள். அப்பொழுது உங்களுடைய சித்திரம் சிறப்பாக அமையும். யார் எவ்வளவு இந்த பரந்த உள்ளத்தின் வரதானத்தை நடைமுறையில் கொண்டு வருவார்களோ அவ்வளவு முதல் தரமாக ஆவார்கள்.

## பாப்தாதாவின் உதவியாளர்கள், உள்ள பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஆகுக !

யார் பாப்தாதாவின் காரியத்தில் உதவியாளர்களாகத் திகழ்கிறார்களோ அவர்களுக்கு பாபாவின் உள்ள பீடத்தில் அமரும் வரதானம் கிடைக்கிறது. யார் உள்ள பீடத்தில் அமர்கின்றனரோ அவர்களது நெற்றியில் சதா அவினாஷி ஆத்மாவின் ஸ்திதி என்னும் திலகம் மற்றும் சேவையின் பொறுப்பு கிரீடம் தூரத்திலிருந்து பிரகாசிக்கும்.

## எளிமையான உள்ளத்துடன் அனைத்து விஷயங்களிலும் ஆல்ரவுண்டர் பவ !

எளிமை என்றால் எந்த விஷயத்தை கேட்டோமோ, பார்த்தோமோ, செய்தோமோ அவை சாரம் நிறைந்ததாக இருக்கட்டும். என்ன பேச்சு பேசினாலும் என்ன செயல் செய்தாலும் அதில் சாரம் நிறைந்து இருக்கட்டும். இதன் மூலம் புருஷார்த்தம் எளிதாய் இருக்கும். மேலும் எளிமையான சரள புருஷார்த்தி அனைத்து விஷயங்களிலும் தேர்ந்தவராக, ஆல்ரவுண்டர் வரதானத்தையும் பெற்றவராக இருப்பார். அவரிடம் எவ்வித குறைபாடும் இராது. இதை நான் செய்ய முடியாது என்கிற வார்த்தை அவருடைய வாயில் இருந்து ஒரு போதும் வராது.

**அகால தக்த் நஷீன் பவ ! (ஆத்மீக ஸ்திதியில்)**

எப்படி சரீர நிர்வாகத்திற்காக அநேக சாதனங்களை அவசியம் என்று கருதுகிறீர்களோ, அதே போன்று ஆத்மீக முன்னேற்றத்திற்காக அகால்தக்த் நஷீன் ஆகுங்கள். இந்த அகால்தக்த் நஷீன் பவ என்னும் வரதானத்தை எவ்வளவு நடைமுறையில் கொண்டு வருவீர்களோ அவ்வளவு அகால மரணத்திலிருந்தும் மற்றும் பிற பிரச்சினைகளிலிருந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியும். மானசீக கவலைகளையும் பாதகமான சூழ்நிலைகளையும் தவிர்க்க மற்றும் தேக உணர்வை அழிக்க இந்த வரதானத்தை சதா நினைவில் இருத்துங்கள்.

## ஞானத்தில் சென்ட் (நறுமணம்) மாயாவிடம் இன்னோசன்ட் (அறியாதவர்களாக) பவ !

சத்யுக ஆத்மாக்கள் இங்கே வரும்போது விகாரங்களைப் பொறுத்த அளவில் ஒன்றுமே அறியாதவர்களாக இருக்கின்றனர். இப்படி மாயாவின் ஞானத்திலிருந்தும் விலகி ஒன்றும் அறியாதவர்களாக ஆகுங்கள். மேலும் ஞானம் அதாவது படிப்பில் தேர்ந்தவர்களாக ஆகுங்கள். இந்த வரதானத்தின் ஸ்திதி மூலம் தனது எதிர்கால சம்ஸ்காரங்களை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். அப்போது பலஹீனம், தொந்தரவு ஆகியவை விலகிப் போகும்.

**சாட்சாத் மற்றும் சாட்சாத்கார் மூரத் பவ !**

எப்படி உங்களது ஈஸ்வரிய சிநேகம் மற்றும் சிரேஷ்ட நடத்தைகளின் சாட்சாத்காரம்(வெளிப்பாடு) ஏற்படுகிறதோ(எல்லோருக்கும் தெரிய வருகிறதோ) அதே போன்று தற்பொழுது அவ்யக்த ஸ்திதியின் தெளிவான சாட்சாத்காரமும் ஏற்படும். இதற்கு உங்களுடைய சம்ஸ்காரங்களை 'சாட்சாத் மூரத்'திற்கு சமமாக ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த வரதான ஸ்மிருதி மூலம் நிற்கும் போதும் நடக்கும் போதும் ஆகாரி மற்றும் நிராகாரி அனுபவத்தை வழங்குங்கள்.

**சதா சம்ஹாரி (அழிக்கக்கூடிய) மற்றும் அலங்காரி பவ !**

தனது சக்தி சொரூபத்தின் ஸ்மிருதியின் மூலம் சம்ஹாரி மற்றும் அலங்காரி ஆகுங்கள். அதாவது இந்த வரதானத்தின் ஸ்மிருதியின் மூலம் தனது பழைய சம்ஸ்காரம் மற்றும் பலஹீனங்களின் மீது பயங்கர சம்ஹார ஸ்வரூபம் கொண்டு அவைகளை அழியுங்கள். மேலும் அலங்காரிகளாகி எனது ஆத்மீக ரூபம், ஆன்மீக திருஷ்டி மற்றும் கல்யாணகாரி விருத்தியின் (உள்ளுணர்வு) மூலம் பாபாவை வெளிப்படுத்துங்கள். அப்பொழுதுதான் பாபாவின் பிரத்யக்ஷதாவின் வெற்றிக் கொடியை ஒவ்வொரு ஆத்மாவின் உள்ளத்திலும் ஏற்ற முடியும்.

## கடமையின் விதி மற்றும் சங்கல்பத்தின் சொரூப பவ !

இந்த இரு வரதானங்களையும் பிறப்புரிமையின் ரூபத்தில் பெற வீணானவைகளை உற்பத்தி செய்வதை விடுத்து சக்தி வாய்ந்த சங்கல்பங்களை எண்ண வேண்டும். எப்பொழுது மாஸ்டர் திரிகால தர்ஷி நிலையில் ஸ்திரமாகி, முதல்-இடை-கடையினை உணர்ந்து சங்கல்பங்களையும் செயலையும் செய்தால், சங்கல்பத்தில் ஸித்தியும், கர்மத்தில் வெற்றியும் கிட்டும்.

**கவர்ச்சிகளிலிருந்து விடுபட சக்தி சொரூப பவ !**

தனது தேகம், சம்மந்தம், உறவு மற்றும் ஏதேனும் பொருட்கள் மீது கவர்ச்சி இருந்தால் மாயாவும் வரக்கூடும். எனவே சக்தி சொரூபத்தின் வரதானத்தை நினைவில் கொண்டு கவர்ச்சியை கவர்ச்சிக்கு அப்பாற்பட்டு இருக்குமாறு மாற்றம் செய்க. சக்தி சொரூபத்தின் வரதானி ஆத்மா தடைகளின் போது பயப்படுவதில்லை, கூச்சல் போடுவதுமில்லை. அத்தடையையே எதிர்கொண்டு நிற்கிறது.

**பொறுப்பின் கிரீடதாரி பவ !**

சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் எந்த ரூபத்தில் அடி எடுத்து வைக்கிறீர்களோ அந்த ரூபத்தில் அநேக ஆத்மாக்கள் பின்பற்றுகின்றனர். இவ்வளவு பெரிய பொறுப்பு உங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த பொறுப்பின் கிரீடதாரியாக உங்களை உணர்ந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வையுங்கள். இந்த வரதானம் உங்கள் நிலையை சிரேஷ்டமாக வைத்திருப்பதற்கு உதவுகிறது. எனவே இந்த வரதானத்தை ஸ்மிருதியில் வைத்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள்.

## அனைவரிடமிருந்தும் ஒத்துழைப்பைப் பெறும் யோகி பவ !

யோகி ஆவதன் மூலம் அனைவரின் ஒத்துழைப்பும் தாமாகவே கிட்டுகிறது. ஏனெனில் யோகி என்றால் விதையோடு சிநேகம் என்னும் நீரை ஊற்றுபவர்கள். அவர்களுக்கு அனைத்து ஆத்மாக்களின் மூலம் ஒத்துழைப்பின் பலன் கிட்டுகிறது. எனவே தொடர்பின் மீது கவனம் கொள்க. அதாவது யோகி பவ என்பதின் வரதானி ஆகுங்கள். அப்பொழுது அனைவரது ஒத்துழைப்பின் அதிகார உரிமை கிடைக்கும்.

## சங்கல்பங்களின் மீது வெற்றி பெறுவதற்கு மனோரீதியில் மஹாதானி பவ !

மனோரீதியில் மஹாதானி ஆவது என்றால் தனது திருஷ்டி-விருத்தி-ஸ்மிருதி சக்தியின் மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கும் சாந்தியின் அனுபவத்தையும் கொடுப்பதாகும். இப்படிப்பட்ட வரதானி ஆத்மாக்கள் சங்கல்பத்தின் வசமாவதில்லை. ஆனால் எங்கு விருப்பமோ அங்கு சங்கல்பங்களை நிலைநிறுத்த முடியும். அவர்களிடம் சங்கல்பங்களை படைப்பது-அழிப்பது-பாலனை செய்வதற்கான சக்தி இருக்கும். அவர்களது ஒவ்வொரு சங்கல்பமும் ஸித்தியாகுமாறே அமையும்.

## சதா குஷியின் பிராப்தியை அடைவதற்கு சொல்லின் மஹாதானி பவ !

சொல்லின் மூலம் ஞான ரத்தினங்களின் தானம் நடைபெற்று வந்தால் ஒவ்வொரு சொல்லும் அநேக ஆத்மாக்களின் தாகத்தை தீர்க்கக் கூடிய விலை மதிப்பற்றதாய் விளங்கும். இந்த வரதானத்தை காரியத்தில் கொண்டு வருவதின் மூலம் சொல்லில் அநேக குணங்கள் வந்து சேரும். உங்கள் சுய நிலையில் குஷியின் பிராப்தி எளிதாகக் கிட்டும். எங்கேனும் சுரங்கத்திலிருந்து பொருட்கள் வெளிப்படும்போது அதிக அளவில் வெளி வருகின்றன இல்லையா? அதே போன்று குஷிக்காகவும் மிகுந்த முயற்சி தேவைப்படாது, தானாகவே குஷி மற்றும் திருப்தியின் அனுபவம் ஏற்படும்.

**பரிஸ்தா ஸ்திதியின் அனுபவம் செய்வதற்கு கர்மத்தின் மூலம் குணங்களின் மஹாதானி பவ !**

ஒவ்வொரு வரதானத்தையும் காரியத்தில் கொண்டு வருவதின் மூலம் அதாவது கர்மத்தின் மூலம் குணங்களின் தானம் செய்வதின் மூலம் நடத்தை மற்றும் முகம் பரிஸ்தாவைப் போன்று தென்படும். அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியும் மென்மையாக இருக்கும். எந்தவித பாரமும் இருக்காது. ஏனெனில் இப்படிப்பட்ட ஆத்மா அனைவரது ஆசீர்வாதத்திற்கும் உரியதாகிறது. அவர்களது ஒவ்வொரு செயலிலும் பிறரது ஒத்துழைப்பின் அனுபவம் தெரியும்.

**மஹான் ஆத்மா ஆவதற்கு டபுள் அஹிம்சக் பவ !**

இந்த வரதானத்தை நினைவில் கொள்வதன் மூலம் எந்த வித ஹிம்சையும் ஏற்படாது. ஹிம்சை என்றால் அதன் மூலம் துக்கம் அசாந்தி ஏற்படுவது. ஏதேனும் ஒரு வார்த்தையின் மூலம், எவரது ஸ்திதியையேனும் குலைத்தீர்களாயின் இதுவும் ஹிம்சையே. இதே போன்று உங்களது உண்மையான ஈஸ்வரிய சம்ஸ்காரங்களை அழுந்தச் செய்து தேவையில்லாத பிற சம்ஸ்காரங்களை நடைமுறையில் கொண்டு வந்தால் இதுவும் ஹிம்சையே. எனவே டபுள் அஹிம்சக் எனும் வரதானத்தை நினைவில் கொண்டு மஹான் ஆத்மா பவ.

## தன்னுள் தனது ஒருங்கிணைக்கும் சக்தியின் மூலம் விஷ்வ கல்யாண்காரி பவ !

விஷ்வ கல்யாண்காரி பவ என்பதின் வரதானத்தை பிராப்தம் செய்வதற்கு மாஸ்டர் கடலாகி தன்னுள் அடக்கும் சக்தியை தாரணை செய்க. தன்னுள் அடக்குவது என்றால் சங்கல்பத்தில் கூட எவரது வீணான விஷயங்களோ பாவனையோ சிறிது கூட அமைந்திருத்தல் கூடாது. ஆனால் அவை மாற்றப்பட்டு விட வேண்டும். அகல்யாண்காரி பேச்சு, கல்யாண்காரி பாவனையில் மாற்றப்பட வேண்டும். நஷ்டம் லாபமாகவும், நிந்தனை ஸ்துதியாகவும் மாற்றப்படு வேண்டும். இம்மாதிரி திருஷ்டி மற்றும் விருத்தியை ஆக்குவதே விஷ்வ கல்யாண்காரி ஆவதாகும்.

## அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்வதற்கு சாந்த சொரூப பவ !

எவ்வளவு தூரம் இறுதி நிலை அதாவது கர்மாதீத் நிலை சமீபமாய் இருக்கிறதோ அவ்வளவு சம்பந்தத்தில் இருந்து அப்பாற்பட்டு செல்லும் சாந்த சொரூப ஸ்திதி மிகவும் பிடித்தமானதாய் இருக்கும். அதாவது இந்த வரதானத்தின் சொரூபமாகிக் கொண்டே செல்வீர்கள். எவ்வளவு தூரம் சாந்தி சொரூப ஸ்திதியின் பயிற்சி இருக்குமோ அவ்வளவு அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்படும். இந்த சுகம் நிறைந்த ஸ்திதி அநேக ஆத்மாக்களை எளிதாக அழைக்க முடியும்.

## பேலன்ஸ் (சமநிலை) மூலம் குறைந்த செலவில் நிறைந்த பயன் உண்டாகுக !

ஒவ்வொரு செயலிலும் சங்கல்பத்திலும் பேச்சிலும் சம்மந்தம் மற்றும் தொடர்பிலும் சமநிலை இருந்தால்தான் பேச்சு, செயல், சங்கல்பம், தொடர்பு, சம்மந்தம் ஆகியவற்றில் சாதாரண தன்மைக்குப் பதிலாக அலௌகீகத் தன்மை தென்படும். பிறகு சமயம், சக்தி, ஸ்தூல செல்வம் ஆகிய அனைத்திலும் ‘கம் கர்ச் பலா நஷீன்’ (குறைந்த செலவில் அதிக பலன்) என்பதின் வரதானி ஆவீர்கள்.

## லட்சியம் மற்றும் லட்சணத்தின் சமமான நிலையின் மூலம் அதிர்ஷ்டசாலி பவ !

தினமும் தனது எண்ணம், சொல், செயலை லட்சியம் என்னும் உறைகல்லின் மீது சோதனை செய்து லட்சியத்தின் பிரமாணம் லட்சணத்தை தாரணை செய்வீர்களாயின், அதிர்ஷ்டசாலிகள் ஆகி விடுவீர்கள். நான் யாரோ எப்படியோ எந்த பாபாவுடைய குடும்பத்தை சார்ந்தவனோ அதை அவ்வாறே உண்மையான ரீதியில் புரிந்து கொண்டு தனது அதிர்ஷ்டத்தின் சித்திரத்தை கவனியுங்கள். திவ்ய குணம் என்னும் செல்வம் இந்த போதை மற்றும் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் மூலம் லட்சியம்-லட்சணம் இரண்டையும் சமநிலையில் கொண்டு வாருங்கள்.

## கஷ்டப்பட்டு முயற்சி செய்யும் நிலையிலிருந்து விடுதலை பெறும் ஸ்மிருதி சொரூப பவ !

தற்பொழுது கஷ்டப்பட்டு முயற்சி செய்ய நேரம் இல்லை. இப்பொழுது ஸ்மிருதி சொரூபத்தின் வரதானி ஆகுக. எதனை அறிய வேண்டுமோ அதனை அடைந்தாயிற்று - இந்த நினைவு கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விடுதலை அளிக்கிறது. நான் மாஸ்டர் படைப்பவர் - இந்த நினைவின் மூலம் சிறு குழந்தைத்தன விஷயங்கள் முடிந்து போகும். சதா ஆர்வம் உற்சாகம் என்னும் நடனத்தை ஆடிக் கொண்டே இருப்பீர்கள். எந்த ஒரு விஷயத்திலும் பயப்படவோ, குழம்பவோ மாட்டீர்கள்.

**நான் பரம பூஜ்ய ஆத்மா...இந்த நினைவின் மூலம் சம்பூர்ண பவித்ர பவ !**

பாப்தாதா சதா பரம் பவித்ரமானவர். நான் ஆத்மாவும் பரம் பவித்ரமானவன். பவித்ரதாவே பாபாவுக்கு மிகவும் பிடிக்கிறது. எனவே பவித்ரதாவிற்கு சிறிதுகூட களங்கம் கூடாது. எப்போதாவது ஏதேனும் அபவித்ர சங்கல்பம் தோன்றினால், நான் பரம் பூஜ்ய ஆத்மா என்பதை நினைவிற்கு கொண்டு வாருங்கள். மனம்-சொல்-சம்மந்தம்-தொடர்பு அனைத்திலும் சம்பூர்ண பவித்ரதாவின் வரதான் ஆவதற்கு தனது பூஜிக்கத்தக்க சொரூபத்தை அடிக்கடி ஸ்மிருதியில் கொண்டு வாருங்கள்.

## ஒருங்கிணைக்கும் சக்தியின் மூலம் அகர்மி, அதாவது கர்மாதீத் பவ !

கர்ம இந்திரியங்களின் மூலம் செய்யத்தக்க கர்மங்களில் இருந்து விடுபட்டு ஒரே ஒரு ஆத்மீக சொரூபத்தில் நிலைக்கும் பயிற்சியை செய்யுங்கள். அப்போது அகர்மி அதாவது கர்மாதீத் பவ என்னும் வரதானி ஆகி விடுவீர்கள். ஒன்று கர்மத்திற்கு அடிமையான நிலை. அடுத்தது கர்மாதீத் அதாவது கர்மத்திற்கு அதிகாரியான நிலை ஆக, கர்மாதீத் பவ என்னும் வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். அதாவது அதிகார உரிமையுடையோர் ஆகி கர்ம இந்திரியங்களின் மூலம் கர்மங்களை செய்விக்க வேண்டும். எந்த ஒரு கர்ம இந்திரியம் என்னும் வேலைக்காரனும் உங்களை ஏமாற்றி விடக்கூடாது.

## இயற்கை என்னும் தாசியை (வேலைக்காரர்) கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய பிரக்ருதி ஜீத் (இயற்கையை வென்றவர்கள்) பவ !

அனைத்திலும் மேலான தாசி பிரக்ருதி. யார் இயற்கை என்னும் வேலைக்காரரை அடக்கி வேலை வாங்குகிறார்களோ அவர்களே பிரக்ருதி ஜீத் ஆகின்றனர். அனைத்து ராஜ்ய வேலைக்காரர்களையும் அதாவது அஷ்ட சக்திகளையும் கட்டளை பிரகாரம் காரியத்தில் கொண்டு வாருங்கள். எவரது ராஜ்ய தர்பார் சரியாக உள்ளதோ அவர்கள் தர்மராஜின் தர்பாரில் செல்ல மாட்டார்கள். தர்மராஜர்கூட அவர்களை வரவேற்பார்.

**சக்ரவர்த்தி ஆவதற்கு நித்ராஜீத் பவ !**

விநாஷ கால நினைவின் மூலம் சோம்பேறித்தன தூக்கத்திற்கு விடுதலை கொடுங்கள். நித்ராஜீத் பவ என்பதின் வரதானி ஆகுங்கள். அப்பொழுது பக்தர்கள் சாட்சாத்கார் மூர்த்திகளான உங்களை சாட்சாத்காரமாய் காண்பர். இப்பொழுது சக்ரவர்த்தி பக்தர்களுக்கு சாட்சாத்காரம் செய்வியுங்கள். துக்கமான ஆத்மாக்களின் துக்கங்களை கேளுங்கள், தாகமான ஆத்மாக்களின் பிரார்த்தனை என்னும் ஒலியைக் கேளுங்கள். அப்பொழுது தூக்கம் வராது.

**அஹம்(அகம்பாவம்) மற்றும் வஹம் (வெறுப்பு) ஆகியவற்றை அழித்து ரஹம்தில் (இரக்க உள்ளம்) படைத்த வரதானி பவ !**

அஹம் மற்றும் வஹம் ஆகியவற்றுக்குப் பதிலாக இரக்க பாவனையை தாரணை செய்க. எப்படி பாபாவுக்கு குழந்தைகள் மீது இரக்கம் வருகிறதோ அப்படியே தன்மீதும் பிறர்மீதும் இரக்க சிந்தனை கொண்டு வாருங்கள். தன்மீதும், ஞானத்தின் மீதுமான வஹம்பாவ்(வெறுப்பு) மனக்குழப்பம், மனச் சோர்வு அடையச் செய்கிறது. அதனை மாற்றி இரக்கம் உள்ளவர்களாகவும், உள்ளபீடத்தில் அமர்பவர்களாகவும் ஆகுக.

**சதா பாபாவின் குடை நிழலில் இருக்கக் கூடிய சிநேகி மற்றும் சக்திசாலி ஆத்மா பவ !**

சதா பாபாவின் நினைவு என்னும் குடை நிழலில் இருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மா நான். இந்த அனுபவத்தை அதிகரியுங்கள். இந்த குடை நிழலே பாதுகாப்பிற்கான சாதனமாகும். இந்த குடை நிழலில் இருந்து சங்கல்பத்தில் கூட பாதங்களை வெளியே வைத்தால் ராவணன் கவர்ந்து சென்று சோக வாடிகாவில் (துக்க உலகம்) அமர்த்தி விடுவான். எனவே சதா பாபாவினுடைய குடை நிழலில் இருக்கக் கூடிய பாபாவின் சிநேகி ஆத்மா நான் – இதே அனுபவத்தில் நிலைத்திருங்கள். இந்த அனுபவத்தின் மூலம் சதா சக்திசாலி ஆகி முன்னேறிக் கொண்டே செல்வீர்கள்.

## எல்லையற்ற வைராக்ய விருத்தியின் மூலம் தபஸ்வி மூரத் பவ !

பாபாவினுடைய சிநேகத்திற்குப் பதிலாக தபஸ்வி மூரத் ஆகுங்கள். தபஸ்யாவின் அஸ்திவாரம் எல்லையற்ற வைராக்ய விருத்தி. எல்லையற்ற வைராக்ய விருத்தி என்றால் நாலா புறங்களிலும் ஓரமாக கரையை விட வேண்டும். அதாவது அன்போடு கூடவே பற்றற்ற நிலையிலும் இருத்தல் வேண்டும். பற்றற்று இருத்தலே கரையில் இருந்து ஒதுங்குவதாகும். மேலும் கரையை ஒதுக்குவது வைராக்ய விருத்தியும் ஆகும்.

**வள்ளலின் குழந்தை மாஸ்டர் வள்ளல் பவ !**

எவரது தொடர்பில் நீங்கள் வந்தாலும் அவர்களுக்கு உங்களின் மூலம் ஏதேனும் அனுபவம் பிராப்தி ஆக வேண்டும். அது தைரியமாகவோ, உற்சாக ஆர்வமாகவோ, சாந்தி சக்தியாகவோ, சகஜ விதியாகவோ, குஷியாகவோ இருக்கலாம். இவைகளை கொடுப்பதில்தான் எடுப்பதும் அமைந்திருக்கிறது. ஆகவே நிறைந்த ஆத்மாவாகி மாஸ்டர் வள்ளல் என்பதின் வரதானி ஆகுங்கள்.

**சதா நத்திங்க் நியூ (எதுவும் புதிதல்ல) என்னும் ஸ்மிருதியின் மூலம் நிஷ்சிந்த் (கவலையற்ற) பவ !**

என்ன ஆனாலும் சரி, கவலையற்று இருக்க எளிய யுக்தி – நத்திங்க் நியூ. புதிய விஷயம் ஏதுமில்லை. ஆச்சரியமோ, கவலையோ ஏற்படுவது எப்போது என்றால் ஏதேனும் புதிய விஷயமாக இருக்கும் போது, ஏதேனும் நினைக்காத விஷயமாய் இருக்கும் போது, ஏதேனும் கேட்காத விஷயமாய் இருக்கும் போது, புரியாத விஷயமாய் இருக்கும் போது, திடீர் என நடந்தால் ஆச்சரியம் ஏற்படுகிறது. ஆனால் நத்திங்க் நியூ என்கிற நினைவின் மூலம் ஆச்சரியத்திற்குப் பதிலாக முற்றுப் புள்ளி வைப்பீர்களாயின் நிஷ்சிந்த் பவ வரதானம் கிடைக்கும்.

## சதா மன மகிழ்ச்சியை அனுபவிக்கக் கூடிய சிரேஷ்ட பாக்யவான் ஆத்மா பவ !

ஆஹா பாபா! என்னே என் பாக்யம்! என்னும் பாடலை சதா உள்ளத்தில் பாடிக் கொண்டே இருங்கள். எதைப் பார்க்கிறீர்களோ, கேட்கிறீர்களோ, பேசுகிறீர்களோ அனைத்திலும் 'ஆஹா ஆஹா' என்னும் அனுபவமே இருக்க வேண்டும். ஐயோ ஐயோ என்பது கூடாது. எவரேனும் ஏதேனும் தவறு செய்தால் நீங்கள் உங்களது பொறுமை சக்தி மூலம் கெட்டதைக் கூட நல்லதாக மாற்றுங்கள். ஏனெனில், பிராமண வாழ்க்கையில் கெட்டது கிடையவே கிடையாது. பிராமண வாழ்க்கை மன மகிழ்ச்சியான வாழ்க்கை – சிரேஷ்ட பாக்யவான் ஆத்மா நான்; இந்த வரதான ஸ்மிருதியின் மூலம் மன மகிழ்ச்சியை அனுபவம் செய்யுங்கள்.

**திவ்ய ஜீவன்தாரி சிரேஷ்ட ஆத்மா பவ !**

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் திவ்ய சங்கல்பம், திவ்ய பேச்சு, திவ்ய செயல் செய்யக் கூடிய திவ்ய மூர்த்தியாக ஆக்கியுள்ளார். திவ்ய வாழ்க்கையே பிராமண பிறவியின் விசேஷ வரதானம் ஆகும். தெய்வீக வாழ்க்கையுடைய சிரேஷ்ட ஆத்மா எவ்வித ஆத்மாவையும் தனது திவ்யமான கண்களின் மூலம் அதாவது திருஷ்டியின் மூலம் சாதாரணத்தில் இருந்து அப்பாற்பட்ட தெய்வீக அனுபவத்தை செய்விப்பர். சாதாரண ஆத்மாக்கள் அவர்களின் முன் வந்த உடனேயே தங்களது சாதாரண குணங்களை மறந்து போவார்.

**ஸ்திதியில் சதா சமீபம் மற்றும் சம்பன்ன பவ !**

எப்படி சந்திரன் முழுமையாக இருக்கிறதோ அப்பொழுது நிறைந்து காணப்படுகிறது. சம்பூர்ணமே அதன் சம்பன்ன நிலையின் அடையாளமாகும். சிறிதுகூட அதன் ஓரங்களில் குறைவு தென்படாது. ஆக ஞானம், யோகம், தாரணை, சேவை ஆகிய அனைத்திலும் நிறைந்து காணப்பட வேண்டும். இதுவே சம்பூர்ணம் என்று அழைக்கப்படுகிறது. யார் நிறைந்து விளங்குகிறார்களோ அவர்கள் சம்பூர்ணத்தில் அருகாமையில் இருப்பவர்கள் ஆவர். எனவே சதா சமீபமாயும் சம்பன்னமாயும் இருக்கும் வரதானங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

## ருஹானி நஷாவின் மூலம் அவிநாஷி குஷியின் வரதானி பவ !

ஆன்மீக போதை மூலம் அவிநாஷி குஷியை அனுபவம் செய்ய வேண்டும். இதுவே பிராமண பிறவியின் விசேஷ வரதானமாகும். எது நடந்தாலும் சரி, இந்த குஷியின் வரதானத்தைத் தொலைத்து விடக்கூடாது. பிரச்சினைகள் வரலாம் போகலாம் ஆனால் குஷி போகக் கூடாது. ஏனெனில் குஷி நமது பொருள். ஆனால் பிரச்சினை மற்றும் பரஸ்திதி வெளியிலிருந்து வருகிறது. வெளி விஷயங்கள் வரலாம் போகலாம் ஆனால் தனது பொருளை வெளியே போக விடக்கூடாது. இந்த சரீரமேகூட போய் விடலாம் ஆனால் குஷி மட்டும் போகக் கூடாது.

## நிர்பல்(பலமற்ற) ஆத்மாக்களுக்கு உபகாரம் செய்யக் கூடிய பரோபகாரி பவ !

தற்காலத்தில் அநேக ஆத்மாக்கள் உபகாரத்திற்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர். சுய உபகாரம் செய்வதற்கான ஆசை உள்ளது. ஆனால் தைரியமோ, சக்தியோ இல்லை. இம்மாதிரி பலமற்ற ஆத்மாக்களுக்கு உபகாரம் செய்யக் கூடிய நீங்கள் பரோபகாரி குழந்தைகள் நிமித்தமானவர்கள். விஷ்வத்தின் ராஜ அதிகாரி சுய உபகாரி ஆவது இல்லை, பரோபகாரி ஆகின்றனர். ஆனால் உபகாரம் என்பது உண்மையான தெய்வீகம் குடி கொண்டு இருக்கும். ஆதலால் உண்மையான உள்ளத்தில் தான் எழும். உண்மையான உள்ளம் படைத்தவர்கள் இடம், தான் உள்ளம் படைத்தோர் ஆகுங்கள்.

## பாபா நமது சர்வ சம்மந்தம் உடையவராவார் – இந்த நினைவின் மூலம் சகஜ யோகி பவ !

நினைவிற்கு ஆதாரம் சம்மந்தம். எங்கு சம்மந்தமோ அங்கு நினைவு தானாகவும் எளிதாகவும் ஏற்படுகிறது. ஆக சர்வ சம்மந்தங்களின் அனுபவத்தை ஒரே ஒரு தந்தையிடம் பெற்றுக் கொண்டு சகஜ யோகி பவ என்னும் வரதானி ஆகுங்கள். எப்பொழுது புத்தி அநேக பக்கங்களில் செல்கிறதோ அப்பொழுது கடும் உழைப்பு அவசியமாகிறது. மாயையும் சண்டையிடுகிறது. ஆதலால் எல்லா சம்மந்தமும் கொண்டு மாயைக்கு விடை கொடுங்கள். பாபாவின் நல்வாழ்த்துகளைப் பெறும் போது சகஜ யோகி ஆகி விடுவீர்கள்.

**உண்மையான உள்ளத்தின் மூலம் விசாலமான புத்தியின் லிஃப்டையடையும் சிரேஷ்ட ஆத்மா பவ !**

உலகில் மனித வாழ்க்கைக்காக உள்ளம் மற்றும் புத்தி, இவ்விரண்டும் சரியாக இருக்க வேண்டும். அதே போன்று இந்த பிராமண வாழ்க்கையிலும் உண்மையான உள்ளமும் விசாலமான புத்தியும் உடையோரே பாக்யசாலிகள். ஏனெனில் உண்மையான உள்ளம் படைத்தோர்க்கு புத்தியின் லிஃப்ட் கிடைத்து விடுகிறது. சத்தியத்தின் சக்தியின் மூலம் யுக்தி கூட சமயத்திற்கு தகுந்தாற்போல் யுக்தி யுக்த், யதார்த்தமான காரியத்தை தாமாகவே செய்கிறது.

## அனைத்து தொந்தரவுகளையும் விலக்கிக் கொள்வதற்கு சிரேஷ்ட பெருமையின் தக்த் நஷீன் (ஆத்ம உணர்வு) பவ !

நாம் நமது சிரேஷ்ட பெருமையில் இருக்கக் கூடியவர்கள். தொந்தரவு ஆகக் கூடியவர்கள் அல்லர். பிறரது தொந்தரவையும்கூட அகற்றக் கூடியவர்கள். சதா சிரேஷ்ட பெருமையின் சிம்மாசனத்தில் (தக்த் நஷீன்) வீற்றிருப்பவர்கள் மாஸ்டர் சர்வ சக்திவான். இந்த ஸ்மிருதியின் மூலம் ஒரு போதும் சொப்பனத்தில் கூட தொந்தரவு அடைவதில்லை. சதா சிரேஷ்ட பெருமையிலேயே இருப்பர்.

**சர்வ கஜானாக்களினால் நிறைந்து அச்சல்-அடோல் பவ !**

எந்தவித கஜானாவிலும் குறைவு என்பது சிறிதுகூட இருக்கக் கூடாது. அனைத்திலும் நிரம்பி இருக்க வேண்டும். காலியாக இருந்தால் தொந்தரவு ஏற்படும். நிறைவாக இருந்தால் உறுதியாக அசையாது இருக்க முடியும். ஆக இந்த வரதானத்தை சதா நினைவில் வைக்க வேண்டும். மாயாவை அசைக்கக் கூடியவன் நான். நான் அசைபவன் அல்ல, குழம்புபவனும் அல்ல. சதா மன மகிழ்ச்சியில் பறப்பவன்.

## மாஸ்டர் சர்வ சக்திவான் நினைவின் மூலம் சதா குஷி பவ !

யார் மாஸ்டர் சர்வ சக்திவான் அதாவது சக்திசாலி ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு முன்னர் மாயாவின் தடை வந்தாலும் சரி, தனி நபர் மூலமாகவும் இயற்கை மூலமாகவும் தடை வந்தாலும் சரி, அவைகள் எவ்வித பாதிப்பையும் அந்த ஆத்மா மீது ஏற்படுத்த முடியாது. இம்மாதிரி சக்தி நிறைந்த ஆத்மாக்கள் சதா குஷியுடன் விளங்குகின்றனர். பிறரையும் குஷியில் இருக்கச் செய்கின்றனர். எவ்வித பாதக சூழ்நிலையிலும் பயப்படுவதில்லை. எனவே நாம் சதா குஷியில் இருப்பவர்கள், மூர்ச்சிக்கக் கூடியவர்கள் அல்ல என்னும் வரதானம் சதா நினைவில் இருக்கட்டும்.

## சர்வ வரதானங்களினால் நிறைந்து வழிய ஏக்விரதா பவ !

அனைத்து வரதானங்களினாலும் எனது பையை நிரப்பிக் கொள்ள சர்வ சம்மந்தங்களின் மூலம் ஒரே ஒருவரை துணையாகக் கொள்க(ஏக்விரதா). இதுவே வரத்தை வழங்கும் வள்ளலை திருப்தி செய்யும் விதி ஆகும். ஏக்விரதா என்றால் சதா விருத்தியில் ஒரே ஒருவர் மட்டுமே இருத்தல் வேண்டும். எனக்கு ஒரே ஒருவரைத் தவிர வேறு எவரும் இலர். இதனை உறுதியான விரதமாகக் கொண்டிருக்க வேண்டும். சங்கல்பம், சொப்பனத்தில் கூட இரண்டாவதாக எவரும் இருக்கக் கூடாது. அப்பொழுதே வரத்தை வழங்கும் வள்ளல் வரதானங்களினால் நிரம்பச் செய்வார்.

**சர்வ பிராப்தியின் சொரூபத்தின் அனுபவத்தின் மூலம் சதா சந்துஷ்டதாவின் (திருப்தி) வரதானி பவ !**

சங்கமயுகத்தில் பாப்தாதாவின் மூலம் அனைத்து பிராப்திகளும் தானாகவே ஏற்படுகின்றன. கேட்காமலேயே அனைத்தும் கிடைத்து விடுகின்றன. கேட்பதற்கும் ஆசை கொள்வதற்கும் அவசியமே இல்லை. எனவே பிராப்தியின் அனுபவத்தை அதிகரித்துக் கொண்டே சந்துஷ்டதாவின் வரதானி ஆகுங்கள். பிராப்தி சொரூப ஆத்மாக்களுக்கு திருப்தியாய் இருப்பதற்கும் திருப்தி படுத்துவதற்கும் உரிய விசேஷ வரதானம் பிராப்தம் ஆகி விடுகிறது. திருப்தி இல்லாத தன்மை பெயர் அடையாளமே இருப்பதில்லை.

## சுய சேவையிலும் உலக சேவையிலும் சதா வெற்றி பவ !

சுய சேவை அதாவது சுய புருஷார்த்தத்தில் உண்மை உள்ளம் தேவை. அதன் மூலம் பாப்தாதாவிடம் இருந்து வெற்றியின் வரதானத்தை பெற்று தனது சம்ஸ்காரத்திடமும் பரிவாரத்திடமும் ராஸயுக்த் அதாவது திருப்தியுடன் இருக்க வேண்டும். உலக சேவையிலும் வெற்றியின் வரதான பிராப்தியை பெறுவதற்காக அனைவரின் மீதும் சுபபாவனை மற்றும் சக்திசாலி சங்கல்பம் வேண்டும். கூடவே ஏகாந்தம் மற்றும் ஏகாக்ரதாவின் அப்யாசத்தின் மீதும் கவனம் வேண்டும்.

## அலௌகீக வாழ்க்கையின் அனுபவம் செய்வதற்கு மர்ஜீவா பவ !

பிராமண வாழ்க்கை அலௌகீக வாழ்க்கையாகும். அலௌகீகத்தின் அர்த்தமே இந்த உலகத்தைப் போன்று அல்ல. உங்களது திருஷ்டி, விருத்தி, ஸ்மிருதி அனைத்தும் மாறிப் போய் விட்டது. இது நியாரா(பற்றற்ற) வாழ்க்கை ஆகும். மர்ஜீவா என்பதின் வரதானி ஆகும் போது சொப்பனத்தில் கூட பழைய வாழ்க்கை நினைவில் வர முடியாது. புதிய வாழ்க்கையில் அனைத்துமே புதிய விஷயங்களாகும். பழைய விஷயங்கள் அனைத்தும் முடிந்து போய் விட்டன. சிரேஷ்ட வாழ்க்கையை மறந்து சாதாரண வாழ்க்கையை நினைவு செய்ய முடியாது.

## அனைவரது சம்மானையும்(மரியாதை) பெறுவதற்கும் சுவமான்தாரி பவ !

எக்குழந்தைகள் இந்த பிறவியில் சுவமான்தாரியாக ஆகிறார்களோ அதாவது இந்த வரதானத்தை சதா ஸ்மிருதியில் வைக்கிறார்களோ அவர்கள் கல்ப முழுவதிலும் மரியாதையைப் பெறுகின்றனர். அரை கல்பம் ராஜ்ய அதிகாரி ஆவதால் பிரஜைகள் மரியாதை தருகின்றனர். மேலும் அரை கல்பம் பக்தர்கள் மூலம் மரியாதை கிடைக்கிறது. சங்கம யுகத்தில் இப்படிப்பட்ட சுவமான்தாரி குழந்தைகளுக்கு பாபாவும் மரியாதை தருகிறார். ஆனால் இந்த வரதானத்தை அடைவதற்கு தேக அபிமானத்தை முழுமையாக விட வேண்டும்.

## மாஸ்டர் படைப்பவரின் நினைவின் மூலம் மரியாதை வள்ளல் பவ !

பிரம்மாபாபா தன்னை உலகத்தின் கீழ்படிதலுள்ள சேவாதாரி என்று சொன்னார். குழந்தைகளுக்கு வணக்கமும் கூறினார். ஒவ்வொரு ஆத்மாவின் விசேஷத்தை பார்த்து அவர்களுக்கு மரியாதையும் வழங்கினார். எனவே நம்பர் ஒன் அழிவற்ற மரியாதைக்கு உரியவரானார். ஆட்சி நிலையிலான மரியாதையிலும் பூஜ்ய மரியாதையிலும் நம்பர் ஒன் ஆனார். இப்படி தந்தையை பின்பற்றுவீர்களாக! மாஸ்டர் படைப்பவரின் நினைவு மூலம் தனக்கு கஷ்டம் கொடுப்பவர்களையும் கூட நண்பர்களாக உணர்ந்து மரியாதை தாருங்கள். மரியாதை வள்ளல் ஆவதன் மூலமே அனைவரது மரியாதையும் கிடைக்கும்.

## விஷ்வ ராஜ்ய ஆட்சியின் அதிகாரத்தை அடைவதற்கு சுய ராஜ்ய அதிகாரி பவ !

சுய ராஜ்யம் பிராமண வாழ்க்கையின் பிறப்பு உரிமையாகும். சுயராஜ்யம் என்றால் அப்போது எப்படி விருப்பமோ அப்படி கர்ம இந்திரியங்கள் மூலம் கர்மங்களை செய்ய முடிய வேண்டும். மனம் புத்தி சம்ஸ்காரம் இம்மூன்றின் மீது ஆத்மாவிற்கு முழு அதிகாரம் வேண்டும். இப்படிப்பட்ட சுயராஜ்ய ஆட்சியின் அதிகாரியே விஷ்வ ராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். ஏனெனில் சுய ராஜ்ய அதிகாரியின் ஸ்திதியில் எவ்வித சக்தியின் குறையும் ஏற்படுவது இல்லை. அவர்கள் சதா தாரணா மூரத் மற்றும் சக்திசாலியாய் இருப்பர்.

## சம்பன்னதாவின் மூலம் பிரசன்ன மூரத் பவ !

சதா பிரசன்னமாய்(மகிழ்ச்சியாய்) இருப்பதற்கு தனது விசேஷங்களை காரியத்தில் கொணர பரமாத்மா பிராப்திகளின் சம்பன்னமாகுங்கள்(நிறைவு). எவர்கள் பிரசன்னத் திருப்தியாய் இருக்கின்றனரோ அவர்களே பிறர் மீதும் சேவையின் மீதும் திருப்தியாயும் சந்தோஷத்துடனும் இருக்க முடியும். அனைத்திலும் பெரிய சேவை பிரசன்ன மூரத் செய்விக்கிறது. எனவே பரமாத்மா பிராப்தியின் பிரத்யக்ஷ ஸ்வரூபம் சதா மகிழ்ச்சியான முகத்தின் மூலமே வெளிப்படுகிறது.

## புருஷார்த்தத்தில் தீவிர வேகத்தைக் கொண்டு வர டபுள் லைட் பவ !

டபுள் லைட் வரதான நினைவின் மூலம் புருஷார்த்தத்தில் வேகம் தானாகவே வருகிறது. இதற்கு ஒரே ஒரு வார்த்தையை நினைவில் கொள்க – அதுதான் 'எனது பாபா'. மலையை விட பெரிய விஷயமாய் இருந்தாலும் சரி 'பாபா' என்று சொன்ன உடனே அந்த மலையும் மடுவாகி விடுகிறது. 'இது எப்படி நடக்கும்' என்று உலகினர் எண்ணும் போது உங்களது புத்தியில் பாபா நினைவு வந்த உடனேயே 'இது இப்படியாகும்' என்று உங்களுக்கு உணர்வு ஏற்படுகிறது.

**யோக யுக்த் ஆவதற்கு சாரதி மற்றும் சாக்ஷி பவ !**

சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நாம் இந்த ரதத்தின் சாரதி ஆவோம். இந்த நினைவு தானாகவே இந்த தேக உணர்விலிருந்து விலகச் செய்கிறது. சாரதி என்று உணரும் போது அனைத்து கர்ம இந்திரியங்களும் நமது கட்டுப்பாட்டில் இருக்கும். கூடவே சாக்ஷி நிலையிலிருந்து பார்க்கும் போதும் எண்ணும் போதும் செய்யும் போதும் அனைத்தையும் செய்தும் கூட விலகி இருப்பர். எனவே இந்த இரண்டு வார்த்தைகளின் நினைவின் வரதானத்தின் மூலம் ஒவ்வொரு கர்மத்திலும் யோகயுக்த் யுக்தியுக்த் ஆகி விடுவர்.

**சதா நிர்பய (பயமற்ற) மற்றும் நிஷ்சிந்த் (கவலை அற்ற) வாழ்க்கை வாழ தில்தக்த் நஷீன் பவ !**

மாயாவிடமிருந்து சதா பாதுகாப்புடன் இருக்க உரிய இடம் (பாபாவின்) உள்ளம் என்னும் சிம்மாசனம். சதா தில்தக்த் நஷீன் ஆத்மா பயமற்றும் கவலை அற்றும் இருக்கின்றனர். தில் தக்த்தில் மாயா வருவதில்லை. அதுவே மிக பாதுகாப்பான இடமாகும்.

**சர்வ குணங்கள் மற்றும் சர்வ சக்திகளின் மூலம் சம்பன்ன சந்துஷ்டமணி பவ !**

ஞானி யோகியின் அடையாளம் திருப்தி. எங்கு திருப்தியோ அங்கு அனைத்து குணங்களும் சக்திகளும் இருக்கின்றன. பிராப்தியற்ற தன்மையின் அடையாளம் திருப்தியற்ற நிலையாகும். சந்துஷ்டமணி சதா ஆன்மீகத்தின் மூலம் பிரகாசிக்கக் கூடிய ‘இச்சா மாத்ரம் அவித்யா’ (இச்சை என்பதே இல்லாத நிலை) நிலையில் இருப்பதாகும். பாபா கிடைத்ததால் அனைத்தும் கிடைத்தது. எனவே எவ்வித இச்சையும் உற்பத்தி ஆக முடியாது. இப்படிப்பட்ட சந்துஷ்ட ஆத்மாக்களே நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் கண்டு ’ஆஹா டிராமா ஆஹா’ என்று கூறுவர். ஐயோ ஐயோ என்று கூற மாட்டார்.

## வரதான ரூபத்தில் மனோ தைரியத்தை அடைவதற்கு சதா ஆக்ஞாகாரி பவ !

சாதாரணமாய் உலகத்தில் இந்த மனிதருடைய கட்டளைப்படி நடந்தாலே அவர்களுக்கு ஆசீர்வாதம் நிச்சயமாய் கிடைக்கிறது. இங்கும் கட்டளைப்படி நடப்பதன் மூலம் அதாவது பாபாவின் ஒவ்வொரு அடியையும் பின்பற்றி அடி எடுத்து வைக்கும் போது பரமாத்ம ஆசீர்வாதம் கிடைக்கிறது. கூடவே ஆக்ஞாகாரி ஆத்மா கட்டளைப்படி நடப்பதால் அதற்கு பதிலாக பாபாவின் மூலம் வில்பவர் (மனோ பலம்) விசேஷ வரதானமாய் ஆஸ்தியின் ரூபத்தில் கிடைக்கிறது.

## மனதை சுறுசுறுப்பாய் வைத்திருக்கும் கலையின் மூலம் சதா சமர்த் (சக்தி நிறைந்த) பவ !

அமிர்தவேளையிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை மனம்-சொல்-செயல்-சம்மந்தம்-தொடர்பு ஆகியவற்றில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் – ஸ்ரீமத் அதாவது கட்டளை தந்துள்ளார். அந்த கட்டளை பிரமாணம் மனம் புத்தியின் தினசரி நடவடிக்கையை வைத்திருக்கும் கலையை முழுமையான ரீதியில் உபயோகித்தால் ‘சமர்த் பவ’ என்பதின் வரதானி ஆவீர்கள். சமர்த் ஆத்மாவின் பேச்சு-பார்வை-கேட்டல்-எண்ணுதல் வீணாக ஆவது இல்லை.

**சிரேஷ்ட சரித்திரத்தை ஒழுக்கத்தை ஆக்கக்கூடிய மிகப் பெரிய சித்திரக்காரர் பவ !**

அனைத்திலும் பெரிய சித்திரக்காரர் யார் என்றால் ஒவ்வொரு அடியிலும் ஒழுக்கத்தை சித்திரமாக ஆக்குவதன் காரணத்தினால்தான் உங்களின் ஜட சித்திரம் (கோவில் விக்ரஹங்கள்) அரை கல்பமாக மகிமைக்கு உரியதாகின்றன. ஆக நீங்கள் சித்திரக்காரர் ஆகி உங்களது சிரேஷ்ட ஒழுக்கத்தின் சித்திரத்தையும் பிற ஆத்மாக்களின் சிரேஷ்ட ஒழுக்கத்தையும் வடிவமைக்க நிமித்தமாகுங்கள்.

## அசுர சுபாவ சம்ஸ்காரங்களை பஸ்மமாக்கும் ஜுவாலா மூரத் பவ !

நீங்கள் சம்பூர்ணத்தின் சமீபத்தில் வரும் போது உங்களது சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் அன்பின் ஆழ அக்னி மற்றும் யோக ஜுவாலை கொழுந்து விட்டு எரியும் போது அனைத்து கிருமிகளும் அழுக்குகளும் அழிந்து போகும். எனவே பயமற்ற ஜுவாலா மூர்த்தியாகி இயற்கை மற்றும் ஆத்மாக்களிடம் இருக்கும் தமோ குணத்தை அழிப்பவர்கள் ஆகுக. பவித்ரதாவின் சக்தியின் மூலம் அபவித்ரதாவை விநாடியில் போக்கக் கூடியவர்களாகுக. ஏனெனில் பவித்ரதா ஒரே விநாடியில் உலகின் அபவித்ரதாவை அழிக்க வல்ல ஜுவாலை ஆகும்.

**விக்னங்களை அகற்ற சக்திசாலி ஆத்மா பவ !**

எவ்வளவு சக்திசாலி ஆத்மா ஆவீர்களோ அவ்வளவு தடைகள் அகன்று போகும். முதலில் தன்னை நிர்விக்னம் உடையவர்களாக ஆக்க வேண்டும். பிறகு பிறரையும் அங்ஙனம் ஆக்க வேண்டும். எனது சக்திசாலி ஸ்திதியின் மூலம் விக்னங்கள் பலஹீனம் அடையுமாறும் நீங்கள் சர்வ சக்திவான் நிலையில் இருப்பதற்கும் உரிய அளவு பாபாவின் மூலம் நீங்கள் அடைந்துள்ள சக்தியை வழங்கி சக்திசாலி ஆக்குங்கள். இதுவே சிரேஷ்டமான உண்மையான சேவையாகும்.

## பிராமண வாழ்க்கையில் சதா கவலையற்ற ராஜா ஆகுக !

சேவையின் சிரேஷ்ட காரியம் நடந்தே ஆக வேண்டும் என்கிற நிச்சயத்தன்மை என்கிற உறுதித் தன்மை சதா இருக்க வேண்டும். செய்விக்ககூடிய தந்தை சேவையை செய்வித்துக் கொண்டிருக்கிறார், செய்து கொண்டும் இருப்பார். இந்த நினைவின் மூலம் கவலையற்ற ராஜா ஆகுக. நிச்சய புத்தி உடைய குழந்தைகள் கவலையற்று இருக்கிறார்கள். சேவையில் வெற்றிக்கான எளிய சாதனம் 'செய்விப்பவரின் நினைவு'. எனவே கவலையற்ற ராஜாவாகி அடைய வேண்டியதை அடைந்து விட்டோம் என்ற பாடலை பாடிக் கொண்டே இருங்கள்.

## சேவைக்கான எளிய சாதனம் – சதா நிறைந்த குஷி பவ !

சதா குஷியில் நிறைந்து இருக்கக் கூடிய குழந்தைகள் தனது முகத்தின் மூலம் நிறைய சேவை செய்கின்றனர். வாயின் மூலம் ஒன்றும் பேசாவிட்டால் கூட அவர்களது முகம் ஞானத்தின் பலனை தாமாகவே வெளிக்காட்டுகிறது. அவர்கள் உள்ளக் களிப்பிற்கான மிட்டாய் அவர்களும் ருசித்து பிறருக்கும் தருகிறார்கள். குஷி நிறைந்த மிட்டாய் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஞானத்தை புரிந்து கொள்ளா விட்டால் கூட உங்களின் குஷி நிறைந்த வாழ்க்கையைக் கண்டு இவர்களுக்கு ஏதோ கிடைத்திருக்கிறது, எனவே தான் குஷியோடு இருக்கின்றனர் என்று மனது அளவில் நிச்சயம் அனுபவம் செய்கின்றனர்.

## முடியாததையும் நடக்கச் செய்விக்கும் தைரியம் உடையோர் பவ !

எங்கே தைரியம் இருக்கிறதோ அங்கு நடக்க முடியாததும் நடந்து விடுகிறது. தைரியம் வைப்பதால் பாபாவின் உதவியும் தானாகவே கிடைக்கிறது. மனதை ஒருநிலைப்படுத்துவது மிகக் கடினம் என்றும் நடக்க முடியாதது என்றும் கூறுகின்றனர். ஆனால் அதுவோ உங்களுக்கு ஒரு விநாடியின் விஷயமாகும். பாபா என்று நினைத்த உடன் விநாடியில் மனம் நிலைத்து விடுகிறது. ஆக தைரியத்தின் வரதானத்தின் மூலம் அசம்பவத்தை கூட (நடக்க முடியாதது) நடக்கச் செய்யும் சகஜ யோகி ஆகுக.

**மனதை இதமாக ஆக்ககூடிய சதா குஷ்நஸீப் பவ !**

பக்தி மார்க்கத்தில் மனதைக் கட்டுப்படுத்துகின்றனர். பிராணாயாமம் செய்வது, ஒரே சிலையை உற்று நோக்கிக் கொண்டே இருப்பது போன்றவை எவ்வளவு கடினமானவை. ஆனால் நீங்களோ உங்கள் மனதை மட்டும் பாபாவின் பக்கம் திருப்புகிறீர்கள். அதாவது மனம் குஷி நிறைந்ததாகி விடுகிறது. மனம் இங்கு அங்கு அலைவது நின்று போகிறது. சதா எல்லையற்ற குஷியின் பாடல் உள்ளிருந்து ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதுவே சிரேஷ்ட பாக்யத்தின் அடையாளமாகும்.

**துக்கத்தின் சக்கரத்தில் இருந்து விடுபட சதா சுதர்சன சக்ரதாரி பவ !**

அநேக விதமான துக்கங்களில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள உலகினர் இந்த பிறவிச் சக்கரத்தில் இருந்தே விடுபட நினைக்கின்றனர். ஆனால் இந்த சிருஷ்டிச் சக்கரத்தில் உங்களின் பாகத்தை நடித்துக் கொண்டே அநேக துக்கங்களின் சக்கரத்தில் இருந்து விடுதலை அடைந்து ஜீவன் முக்தி ஸ்திதியை பிராப்தம் செய்வதற்காக சதா சுதர்சன சக்கரதாரி ஆகுகிறீர்கள். இந்த வரதானமே கர்ம இந்திரியங்களின் ஏமாற்றுதலில் இருந்து காக்கிறது. பிறவற்றிற்கு அடிமை ஆவதற்குப் பதிலாக அதிகாரி ஆக்குகிறது. துக்கத்தின் சக்கரத்தில் இருந்து விடுதலை அளிக்கிறது.

**சதா நிர்லேப் அதாவது நியாரா மற்றும் அதி பியாரா பவ !**

இந்த வரதானத்தை நடைமுறையில் கொண்டு வருவதன் மூலம் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அசரீரி ஸ்திதியிலும் கர்மயோகி ஸ்திதியிலும் மாறிமாறி வர முடியும். சரீரத்தின் பந்தனம், கர்ம பந்தனம், தனி நபர்களின் பந்தனம், வைபோகங்களின் பந்தனம் மற்றும் சுபாவ சம்ஸ்காரத்தின் பந்தனம் ஆகியவை தன் பக்கம் கவர்ந்து இழுக்க முடியாது.

**சர்வ ஆத்மாக்களுக்கும் ஆசீர்வாதத்தை வழங்கக் கூடிய மாஸ்டர் சத்குரு பவ !**

சத்குருவின் மூலம் கிடைத்த ஸ்ரீமத்படி நடக்கக் கூடிய குழந்தைகளுக்கு சதா ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதே போன்று குழந்தைகளாகிய நீங்களும் உங்களது பறக்கும் கலை என்னும் விசேஷத்தின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுபபாவனை, சுபகாமனாவின் சுத்த அதிர்வலைகளை வழங்கிக் கொண்டிருங்கள்; அதாவது மனதின் மூலம் ஒவ்வொரு சமயத்திலும் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் ஆசீர்வாதம் தாமாகவே வழங்கிக் கொண்டிருந்தால் 'மாஸ்டர் சத்குரு பவ' என்பதின் வரதானி ஆகி விடுவீர்கள்.

## ஆன்மீக தோற்றப் பொலிவின் மூலம் சதா ஆகர்ஷண மூரத் பவ !

எப்படி சரீரத் தோற்றம் ஒவ்வொருவரையும் தன் பக்கம் கவர்ச்சிக்கிறதோ அவ்வாறே உங்களது ஆன்மீகத் தோற்றம் தூரத்திலிருந்தே ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அனுபவம் ஆக வேண்டும். இதற்கு யோக யுக்த்தாய் இருந்து கர்மம் செய்தல் வேண்டும். சொல், செயலில் சாதாரணத் தன்மை கூடாது. அலௌகீகத் தன்மை வேண்டும். ஆன்மீகத் தோற்றப் பொலிவின் மூலம் ஆகர்ஷண மூரத் ஆகி விடுவீர்கள்.

## பரஸ்திதிகளை எளிதில் கடந்து செல்ல ஸ்மிருதியின் மூலம் ஸமர்த்தி ஸ்வரூப் பவ !

ஸ்மிருதி சொரூபத்தில் இருந்து ஸமர்த் சொரூப ஆத்மாவிற்கு பாதக சூழ்நிலை, சோதனைகள், தடைகள் அனைத்துமே சாலை ஓரக் காட்சிகளே. இது நமது லட்சியப் பாதையின் பக்கக் காட்சிகள் என்பதும் அநேக முறை இவைகளைக் கடந்து சென்று உள்ளோம் என்றும், புதிது எதுவும் அல்ல என்பதும் ஸ்மிருதியில் உள்ளது. இந்த ஸ்மிருதியின் அஸ்திவாரத்தின் மூலம் குழப்பம் ஏற்படாது. ஸ்மிருதி சொரூப ஆத்மா ஸமர்த் ஆக இருப்பதன் காரணமாக பாதக சூழ்நிலையையும் விளையாட்டாக எண்ணி கடந்து செல்கிறது, பயப்படுவது இல்லை.

## பவித்ரதாவின் விசேஷத்தின் மூலம் புகழுக்குரிய தகுதி நிறைந்தவர்கள் மற்றும் சம்பூர்ண பவ !

புனித அன்ன ஆத்மாக்கள் சங்கம யுகத்தில் தூய்மையைக் கடைபிடிக்கிறீர்கள். அதாவது உடல்-பொருள்-உள்ளத்தால் கறைபடியாத தெளிவு உள்ளவர்களாக ஆகிறீர்கள். இந்த தெளிவு சம்பூர்ண தூய்மையை புகழுக்குரிய சம்பன்ன மற்றும் சம்பூர்ண பவ என்னும் வரதானிகள் ஆக்குகிறது. உடல்-பொருள்-உள்ளம்-சம்மந்தம் ஆகிய நான்கின் தூய்மையே பவித்ரதா என்று அழைக்கப்படுகிறது

## அனைத்து கர்ம இந்திரியங்களையும் குளிர்ச்சியாகவும் சாந்தியாகவும் ஆக்கக்கூடிய மென்மையான யோகி பவ !

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் யோகத்தின் மூலம் கர்ம இந்திரியங்களை குளிர்ச்சியாகவும் சாந்தமாகவும் ஆக்குகிறீர்கள். கர்ம இந்திரியங்களின் சஞ்சலம் முடிவுக்கு வருவது என்றால் குளிர்ந்த யோகி ஆவது என்பதாகும். இதன் நினைவார்த்தமாகவே சீதள (குளிர்ச்சி) தேவியின் ரூபத்தில் பூஜைகள் நடைபெறுகின்றன. எவர்கள் குளிர்ந்த யோகி ஆகின்றார்களோ அவர்களிடம் கோபத்தின் சம்ஸ்காரங்கள் சொப்பனத்தில்கூட வர முடியாது. எந்த கர்ம இந்திரியங்களும் ஏமாற்ற முடியாது.

## பகுத்தறியும் சக்தி மூலம் சம்மந்தம்-தொடர்பில் வெற்றி மூரத் பவ !

திவ்ய புத்தியின் வரதானத்தின் மூலம் பகுத்தறியும் சக்தியை யதார்த்தமாகவும், சிரேஷ்டமாகவும் ஆக்கும் பொழுது யதார்த்த நிர்ணயம் செய்ய முடியும். மேலும் யதார்த்த நிர்ணயத்தின் காரணமாக சம்மந்தம்-தொடர்பு-சேவையில் வெற்றி மூரத்தின் வரதானி ஆகி விடுவீர்கள். ஏனெனில் எந்த ஆத்மாவுக்கு விதிப் பூர்வமான உதவி தேவையோ, ஆன்மீகக் கல்வி வேண்டுமோ, சிநேகம் வேண்டுமோ அச்சமயத்தில் யதார்த்தமாக பகுத்து அறிந்து கொடுப்பதால் தொடர்பு சம்மந்தத்தில் வெற்றி நிச்சயம் கிடைக்கிறது.

**சக்தி வாய்ந்த பிரேக்கின் மூலம் முதல் பிரிவின் அதிகாரி பவ !**

உயரமான இடத்திற்குச் செல்லும்போது முதலில் பிரேக்கை நன்கு சோதிக்கின்றனர். குழந்தைகளாகிய நீங்களும் முதல் பிரிவில் வருவதற்கு வேகமான புருஷார்த்தம் செய்கிறீர்கள். அதாவது உயரமான இடத்தை நோக்கி செல்கிறீர்கள். எனவே பிரேக்கை அடிக்கடி சோதியுங்கள். சங்கல்பங்களின் போக்குவரத்தை ஒரு விநாடியில் எங்கு விருப்பமோ அங்கு நிலைநிறுத்துவதற்கு அதாவது மனம்-புத்தியை எங்கு விருப்பமோ அங்கு ஈடுபடுத்துவதற்கு உரிய முறையில் சக்தி வாய்ந்ததாக உங்கள் பிரேக் இருக்க வேண்டும். இதன் மூலம் முதல் பிரிவில் வருவதற்கான உரிமை கிடைத்து விடும்.

### தபஸ்வி மூரத் ஆவதற்கு சதா அந்தர்முகி பவ !

அந்தர்முகி பவ என்னும் வரதானத்தை நடைமுறைப் பயிற்சியில் கொண்டு வந்தால் தபஸ்வி மூரத் ஆவோம். அந்தர்முகி என்றால் பிருகுட்டி என்னும் குடிசையில் சதா சாந்த ஸ்திதியின் அனுபவத்தை செய்யக் கூடியவர்கள். அதிகமான பேச்சு சம்பாஷணைகளின் ரசனையில் வராதோர். எந்த சமயத்தில், எந்த இடத்தில், எந்த பேச்சு அவசியமோ யுக்தியுக்தாய் தனக்கும் பிற ஆத்மாக்களுக்கும் எது லாபகரமானதோ அம்மாதிரி பேச்சுக்களையே பேசுக. பேச்சில் கட்டுப்பாடு வைக்கும் பொழுது தபஸ்யாவின் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

**ராஸ்யுக்த் யோகயுக்த் ஆவதற்கு யுக்தியுக்த் பவ !**

சதா யதார்த்தமான சிரேஷ்டமான கர்மம் செய்வோரே யுக்தி யுக்தமானவர்கள். எந்தவித கர்மம் என்னும் விதையும் பலன் இல்லாமல் போகக்கூடாது. இந்த வரதானத்தை காரியத்தில் கொண்டு வருவது என்றால் எந்த சமயத்தில் எந்த எண்ணம்-சொல்-செயல் வேண்டுமோ அந்த சமயத்தில் அதனையே செய்வது என்பதாகும். இதன் மூலம் மிக எளிதில் ராஸ்யுக்த் மற்றும் யோகயுக்த் ஆக முடியும்.

## எனது என்பவைகளை உனது என்பதாக மாற்றும் விஷ்வ கல்யாணகாரி பவ !

எனது என்பவைகளை உனதில் சேர்ப்பது என்றால் எல்லைக்கு உட்பட்டவைகளை எல்லைக்கு அப்பாற்பட்டதில் சேர்ப்பது என்பதாகும். அனைவரின் சங்கல்பம், பேச்சு மற்றும் சேவையின் விதி ஆகியவை எல்லையற்ற அனுபவத்தை தரட்டும். உள்ளத்தில் சதா எல்லையற்ற பாவனை வேண்டும். எல்லைக்கு உட்பட்டவைகளே கூடாது. இடத்தின் எல்லைக்குட்பட்ட பிரபாவம் உள்ளத்தில் ஏற்படக் கூடாது. எல்லைக்கு உட்பட்டவைகளை அனைத்து விதத்திலும் அகற்றி விடுவதே விஷ்வ கல்யாண்காரி பவ என்னும் வரதானத்தை பிராப்தி செய்வதாகும்.

## மனம், புத்தியின் சமர்ப்பணத்தின் மூலம் சர்வ அம்ச தியாகி பவ !

மனம், புத்தியின் மூலம் சமர்ப்பணம் ஆவது முதலான தியாகம் ஆகும். யார் இவ்வாறு சமர்ப்பணம் ஆகி இருக்கின்றனரோ அவர்களிடம் ஒவ்வொரு சமயத்திலும் பாபா மற்றும் ஸ்ரீமத்தின் ஸ்மிருதி இருக்கும். அவர்கள் சதா தங்களை நிமித்தமாக உணர்ந்து ஒவ்வொரு காரியத்திலும் பற்றற்றும் அதே சமயத்தில் அன்பாகவும் (நியாரா-பியாரா) இருக்கின்றனர். தேக சம்பந்தங்களில் இருந்தும் நான் எனது என்கிற தியாகம் ஏற்பட்டு விடுகிறது. இதுவே சர்வ அம்ச தியாகமாகும். இது மனம் புத்தியின் மூலம் சமர்ப்பணம் ஆகக்கூடிய குழந்தைகளுக்கு வரதான ரூபத்தில் பிராப்தம் ஆகிறது.

## ஒவ்வொரு சங்கல்பத்திலும் பிரம்மாபாபாவைப் போன்று நேர்மையான பதிவிரதா பவ !

எப்படி கற்புடைய பெண்டீர் தனது கணவனைத் தவிர வேறு எவரையும் சொப்பணத்தில் கூட நினைக்க முடியாதோ அவ்வாறே ஒவ்வொரு சமயத்திலும் ஒரே ஒரு பாபா அவரைத் தவிர வேறு எவரும் இல்லை. இதுவே நேர்மையின் வெளிப்படையான சொரூபமாகும். எப்படி பிரம்மாபாபா இந்த நேர்மையின் சக்தி மூலம் ஒரே ஒருவரின் பலத்தாலும் நம்பிக்கையாலும் வெளிப்படையான கர்மத்தின் மூலம் பாதக சூழ்நிலையைக் கடந்து சென்றாரோ அவ்வாறே நீங்களும் ஒவ்வொரு சங்கல்பத்திலும் நம்பிக்கைக்கு உரியவர்களாக பாபாவைப் பின்பற்ற வேண்டும்.

## நிமித்த மற்றும் நிர்மாண் (பணிவு) பாவனையின் விசேஷத்தின் மூலம் ஸித்தி ஸ்வரூப் பவ !

சேவையின் வெற்றிக்கான விசேஷ ஆதாரம் பணிவுத்தன்மை, நிமித்த உணர்வு மற்றும் எல்லையற்ற பரந்த உள்ளம். இதே விதியின் மூலம் ஸித்தி சொரூபமாகுங்கள். ஒரு புறம் மிகவும் பணிவு மறுபுறம் புதிய ஞானத்தின் அதிகார உரிமை. பணிவுத் தன்மையின் கூடவே சத்தியத்தின் காரணத்தில் ஆன பயமற்ற தன்மை சேவையில் ஸித்தி சொரூபம் ஆக்குகிறது.

## மரியாதைக்கு உரியவர்களாக ஆவதற்கு சுவமான்தாரி நிர்மாண் பவ !

யார் சுவமான ஸ்திதியில் இருக்கின்றனரோ அவர்களுக்கு தானாகவே பிறர் மூலம் மரியாதை கிடைக்கிறது. நீங்கள் அழிவற்ற சுவமானமான பூஜிக்கத்தக்க ஆத்மாக்கள் ஆகிறீர்கள். எனவே இன்னும்கூட உங்களின் பூஜைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் எவ்வளவு தூரம் சுவமானதாரிகளோ அவ்வளவு தூரம் பணிவு. சுவமானத்தின் அபிமானம் கூட கூடாது. எப்படிபட்ட ஆத்மாவாயினும் சரி அனைவர் மீதும் இரக்கக் கண்ணோட்டம் வேண்டும், அபிமானம் கூடாது. அப்பொழுதே அனைவரிடம் இருந்தும் மரியாதை கிடைக்கும்.

**சதா பாதுகாப்பாய் இருந்திட தலையின் மீது பரமாத்மாவின் கரம் இருப்பதின் அனுபவம் செய்யும் சிநேகி பவ !**

ஒவ்வொரு கணத்திலும் உள்ளத்தில் பாபாவின் நினைவு நிறைந்திருக்கும் அளவு குறைவில்லா சிநேகம் நிறைந்து வழிய வேண்டும். ஒவ்வொருவருக்கும் திருஷ்டி, பேச்சு மற்றும் கர்மத்தின் மூலம் பரமாத்ம தந்தையின் சாட்சாத்காரம் ஏற்படும் அளவுக்கு உங்களின் தலைமீது பரமாத்மாவின் ஆசீர்வாதக் கரங்களின் அனுபவம் ஏற்பட வேண்டும். இந்த வரதானக் கரமே ஒவ்வொரு விஷயத்திலும் பாதுகாப்பிற்கான முக்கிய சாதனமாகும்.

## அனைத்து விசேஷங்களையும் கொண்டு வந்து விசேஷதா சம்பன்ன பவ !

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தையும் காண்கின்றனர். ஒவ்வொருவர் இடமும் தத்தம் விசேஷம் அமைந்துள்ளது. அந்த விசேஷத்தை உணர்ந்து காரியத்தில் ஈடுபடுத்தினால் அந்த விசேஷ தன்மை அதிகரித்துக் கொண்டே போகும். உலகத்திலோ பணத்தை செலவழிக்கும் போது அது குறைந்து கொண்டே போகிறது. ஆனால் இங்கோ விசேஷம் என்னும் செல்வத்தை எவ்வளவு உபயோகித்துக் கொண்டு போகிறீர்களோ அவ்வளவு அதிகரித்துக் கொண்டே போகும். அதாவது விசேஷதாவின் சம்பன்னம் ஆகிக் கொண்டே செல்வீர்கள்.

**பாபா மற்றும் நீங்கள் – இந்த ஸ்மிருதியில் சதா முன்னேறி செல்லக் கூடிய சிரேஷ்ட ஆத்மா பவ !**

பாபா மற்றும் நீங்கள் என்னும் கோட்டைத் தாண்டி வெளியே செல்லாதீர்கள். இதுவே பரமாத்ம பாதுகாப்பு குடை நிழலாகும். யார் இந்த பாதுகாப்பு குடை நிழலின் கீழ் உள்ளனரோ அவர்களின் அருகே வருவதற்கு மாயாவிற்கு தைரியம் வராது. இதன் மூலம் கஷ்டப்பட்டு முயற்சி செய்தல் மற்றும் விக்னங்கள் என்றால் என்ன என்பதே தெரியாமல் போகிறது. இந்த நினைவு சதா தீவிர புருஷார்த்தத்தின் மூலம் பறக்கும் கலையில் முன்னேறிச் செல்ல விடுவதாகும்.

## சந்துஷ்டதா (திருப்தி) என்னும் பொக்கிஷத்தின் மூலம் அனைத்து குணங்களினாலும் சம்பன்ன பவ !

சந்துஷ்டதாவின் கஜானா அழிவில்லாத கஜானா ஆகும். எவரிடம் திருப்தி என்னும் பொக்கிஷம் உள்ளதோ அவரிடம் பிற குணங்களும் நிச்சயம் இருக்கும். குணங்களின் சுரங்கமாகி விடுகிறது. என்ன விஷயமானாலும் எந்த வித பிரச்சினை வந்தாலும் சரி திருப்தி மட்டும் போய்விடக் கூடாது. விஷயங்கள் வரலாம் போகலாம் ஆனால் திருப்தி மட்டும் விலகிப் போய்விடக் கூடாது. அப்படி ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் நிறைந்த தன்மையின் அனுபவம் ஏற்படும்.

## உங்களின் பிரத்யக்ஷ வாழ்க்கையின் மூலம் சதா சிரேஷ்ட சேவாதாரி பவ !

எக்குழந்தைகள் தங்களது வாழ்க்கையை சதா காலமும் திருப்தியாகவும் குஷி நிறைந்தும் வைத்து இருக்கிறார்களோ அவர்கள் ஒவ்வொரு அடியிலும் சேவை செய்வதற்காக நிமித்தம் ஆகிறார்கள். சொல்லின் மூலம் சேவை என்னவோ நடக்கத்தான் செய்கிறது. ஆனால் வாணியின் கூடவே முகத்தின் மூலமும் நடத்தையின் மூலமும் நிரந்தரமாக சேவை நடைபெற வேண்டும். அவர்களது தொடர்பில் வரும் எவருக்கும் உள்ளத்திலிருந்து ஆஹா ஆஹா என்னும் கீதம் ஒலிக்க வேண்டும். உங்களின் வாழ்க்கையைப் பார்த்து வெற்றி அடைவதற்கான தைரியம் வர வேண்டும். இது மிகவும் சிரேஷ்ட சேவையாகும்.

## சோம்பேறித்தனத்தை அகற்றிவிட யதார்த்த ரஹம்தில் (இரக்க உள்ளம்) பவ !

நமது உள்ளத்தின் இரக்கம் சோம்பேறித்தனத்தை எளிதில் விரட்டி விடுகிறது. தனக்குத்தான் யார் இரக்கம் உள்ளவராக ஆகின்றார்களோ அவர்கள் பிறருக்காகவும் இரக்க சிந்தனை உள்ளவர்களாக ஆகிறார்கள். ஞான மார்க்கத்தில் யதார்த்தமான இரக்க சிந்தனையின் வரதானிகள் எவரோ அவர்கள் இடமிருந்து மூன்று விஷயங்கள் விலகி விடுகின்றன – சோம்பேறித்தனம், பொறாமை, வெறுப்பு. ஏனெனில் ஞானம் நிறைந்த இரக்கத்தில் ஆன்மீகத்தின் நடைமுறையும் நிச்சயம் உண்டு.

**சேவையின் எளிய சாதனம் லைட்-மைட் ரூப பவ !**

எவ்வித லைட்டும் தன் பக்கம் கவர்ந்து இழுக்கின்றது. அங்ஙனமே குழந்தைகளாகிய நீங்களும் லைட்-மைட் ரூபதாரிகளாகி ஒவ்வொருவரும் பாபாவின் பக்கம் கவர்ந்து இழுக்கப்பட வேண்டும். எந்த ஆத்மாவேனும் உங்களில் எவரையேனும் பார்க்க நேரிடும் பொழுது ஒவ்வொரு முகத்திலும் பாபாவிடமிருந்து கிடைத்த அவிநாசி குஷி, அதீந்திரிய சுகம் மற்றும் அவிநாசி சாந்தியின் பிரகாசம் தென்படட்டும். இதுவே சேவைக்கான எளிய சாதனமாகும்.

**உலகத்தின் முன் உதாரணமாகத் திகழ மாய புரூப் பவ !**

உங்கள் உதாரணத்தை பாப்தாதா அனைவருக்கும் காண்பிக்கும் அளவு மாயாபுரூப் ஆகுக. எவர்கள் சதா குஷியுடன் மலர்ச்சியாய் இருக்கின்றனரோ அவர்களே மாயா புரூப் ஆக முடியும். அவர்களது உள்ளத்தில் இருந்து 'அடைய வேண்டியதை அடைந்து விட்டேன்' என்கிற பாட்டு ஒலித்துக் கொண்டே இருக்கும். இந்த குஷியில் இருப்பதால் எவ்வித மனக்குழப்பமோ மனச்சோர்வோ வர முடியாது. அதாவது, மாயா புரூப், இந்த வரதானம் கிடைத்து விடுகிறது.

**சங்கல்பம் மற்றும் சொரூபத்தின் சமமான தன்மையின் மூலம் ஸ்காலர்ஷிப்பின் வரதானி பவ!**

எப்படி சங்கல்பம் எழுகிறதோ அப்படி ஸ்வரூபம் ஆகிக் கொண்டே செல்ல வேண்டும். சங்கல்பம் செய்த உடனேயே அசரீரி ஆகிவிட வேண்டும். மாஸ்டர் அன்புக் கடல் ஸ்திதியில் ஸ்திரமாகி விட வேண்டும். சங்கல்பத்தின் கூடவே அதன் சொரூபத்தில் ஆகி விட வேண்டும். இந்த பயிற்சியின் ஆதாரத்தில் ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது. எப்படி ஸ்தூல ஆடையைக் களைவது எளிதாகிறதோ அப்படியே தேக அபிமான ஆடையை விநாடியில் களைந்து விட வேண்டும். எப்போது வேண்டுமோ அப்போது உடுத்திக் கொள்ள வேண்டும்; வேண்டாத போது அப்பாற்பட்டு சென்று விட வேண்டும். இதற்கு எவ்வித பந்தனமும் கூடாது.

## நத்திங்க் நியூ'வின் ஸ்மிருதியின் மூலம் சதா அச்சல் (உறுதி) பவ !

விருத்தி சஞ்சலம் அடைவதற்குக் காரணம், ஏன்? மற்றும் என்ன? என்னும் இரு வார்த்தைகளே! இதன் மூலம் ஸ்திதி கீழ் மேலாகிறது. ஆனால் 'நத்திங்க் நியூ' என்னும் வார்த்தை உறுதியாக இருக்கச் செய்கிறது. எப்படிப்பட்ட விஷயம் எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும், சம்மந்தம், தொடர்பாலும் வந்தாலும் சரி, 'எதுவும் புதிதல்ல' என்பதில் உறுதி வேண்டும். நத்திங்க் நியூவில் எவ்வித கேள்வியும் இல்லை. ஆச்சர்யமும் இல்லை. இந்த பாடத்தை ரிவைஸ் செய்து உறுதி ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போது 'அச்சல் பவ' என்னும் வரதானம் கிடைத்து விடும்.

## ஞானம் நிறைந்த நிலையின் (KNOWLEDGEFUL) மூலம் சதா வெற்றி பவ !

மாயை உள்ளுக்குள் பார்த்தால் சக்தி ஒன்றும் இல்லை. இதன் வெளி ரூபத்தைப் பார்த்து பயப்பட வேண்டாம். அதனை உயிரோடு இருப்பதாகக் கண்டு மயக்கம் போட்டு விடாதீர்கள். மாயைதான் மயங்கி கிடக்கிறது. அதற்கு குஷியோடு விடை கொடுத்து அனுப்புங்கள். ஞானம் நிறைந்த நிலையில் இருங்கள். அப்போது ஏமாற்றம் அடைய மாட்டீர்கள். சதா வெற்றி பவ என்னும் வரதானி ஆகி விடுவீர்கள்.

### அமரத்துவத்தின் வரதானத்தை பிராப்தம் செய்யும் சதா மாயாஜீத் பவ !

சங்கம யுகத்தில் சத்குருவின் மூலம் மாயாஜீத் பவ என்னும் வரதானமும், எதிர் காலத்தில் திடீர் மரணத்தில் இருந்து விடுபடவும் வரதானம் கிடைக்கிறது. இம்மாதிரி அமரத்துவ ஆத்மாக்களை மாயை அசைக்க முடியாது. தூரத்தில் இருந்துகூட அதுவால் பார்க்க முடியாது. எவரிடம் இந்த வரதானத்தின் போதை உள்ளதோ அவர்கள் சொப்பனத்தில்கூட மாயாவினால் மயக்கம் அடைய மாட்டார்கள்.

**அனைத்து பொக்கிஷங்களையும் உலக சேவையில் அர்ப்பணம் செய்யக்கூடிய சம்பன்ன ஆத்மா பவ !**

எப்படி மனம் புத்தியின் மூலம் பாபாவின் முன்னர் சமர்ப்பணம் செய்து உள்ளீர்களோ அப்படி தற்பொழுது உங்களது சமயம் மற்றும் சர்வ பிராப்திகளாகிய ஞானம், குணம், சக்தி ஆகியவற்றையும் உலக சேவையின் பொருட்டு சமர்ப்பணம் செய்க. என்ன சங்கல்பம் செய்தாலும் அது உலக சேவையின் பொருட்டு உள்ளதா என்று சோதனை செய்யுங்கள். இவ்வாறு சேவையின் பொருட்டு அர்ப்பணம் செய்வதால் நீங்கள் சம்பன்னமாகி விடுவீர்கள். சேவையின் மீதான ஆவல் காரணமாய் சிறிய பெரிய சோதனைகள் அனைத்துமே விலகிப் போய்விடும்.

**சமீப ரத்தினங்களில் ஒன்றாக வருவதற்கு ஆன்மீக ஸ்திதியில் ஸ்திரமான சிரேஷ்ட ஆத்மா பவ !**

சதா ஆன்மீக ஸ்திதியில் ஸ்திரமாய் இருக்கக்கூடிய ஆத்மா சரீரத்தில் இருந்தாலும் அப்பாற்பட்ட ஸ்திதியில் ஸ்திரமாய் இருக்கும் அவர்களின் மீது சத்தியமான தொடர்பின் (பாபா) சாயல் படிந்து இருக்கும். சத்தியமான தொடர்பு எதுவென்றால் ஆன்மீக சாயலே. இதில் சதா மூழ்கி இருக்கக்கூடிய ஆத்மா சரீரத்தைப் பார்த்தபோதிலும் பார்ப்பதில்லை. அவர்களுக்கு பார்க்கக்கூடாதவை தெள்ளத் தெளிவாய் தெரிகின்றன. இங்ஙனம் ஆன்மீக போதையில் மூழ்கி இருப்பவரே பாபாவை தன் உடைய துணையாக்கிக் கொள்ள முடியும்.

**ஒரு விநாடியின் ஆச்சரியமான விளையாட்டின் மூலம் மதிப்புடன் தேர்வு பெறும் (PASS WITH HONOR) அதிகாரி பவ !**

ஒரு விநாடியில் விஸ்தாரத்தில் இருந்து சாரத்தில் வருவது மற்றும் ஒரே விநாடியில் சாரத்தில் இருந்து விஸ்தாரத்தில் செல்வது, இதுவே ஆச்சரியமான விளையாட்டு. எப்பொழுது விருப்பமோ, எப்படி விருப்பமோ அப்படி அந்த ஸ்திதியில் ஸ்திரம் ஆகும் அளவு இந்த விநாடி விளையாட்டில் பயிற்சி வேண்டும். ஏனெனில் கடைசி தேர்வு ஒரு விநாடி உடையதாகத்தான் இருக்கும். யார் அந்த விநாடி தேர்வில் பாஸ் ஆகின்றனரோ அவர்கள் மதிப்புடன் தேர்ச்சி பெறுவர். இதற்கு ஒருங்கிணைக்கும் சக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**துக்கத்தின் அலைகளில் இருந்து விடுதலை பெற சதா சுகதாயி (சுகத்தை வழங்குபவர்) பவ !**

உங்களுடைய கண், வாய் மற்றும் முகம் அனைவருக்கும் சுகத்தை கொடுப்பதாய் இருக்கட்டும். இப்படிப்பட்ட சுகதாயி வரதானி ஆகுங்கள். அப்பொழுது சங்கல்பத்தில் கூட துக்கத்தின் அலை வர முடியாது. சதா ஞானத்தை சிந்தனை செய்தவாறே அதீந்திரிய சுகம் என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். அதனைக் காணும் அனைத்து ஆத்மாக்களும் நீங்கள் சுகத்தில் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்து துக்கத்தில் இருந்து சுகம் உடையோராய் ஆகி விடுவர்.

**டபுள் லைட் மூலம் சதா அதக் ( களைப்படையாத) பவ !**

யார் எவ்வளவு தூரம் லேசாகி இருக்கின்றனரோ அவ்வளவு தூரம் களைப்பு அடையாதவராக இருக்கின்றனர். எப்படி சரீர ரீதியில் கனமாய் இருப்போர் களைத்துப் போய் விடுகின்றனர். ஒல்லியாய் இருப்போர் களைத்துப் போவதில்லை. இப்படி மன ரீதியான பாரமாய் இருந்தாலும் சரி, சம்மந்தம் தொடர்பு பாரமாய் இருந்தாலும் சரி, பாரம் என்றாலே களைப்பைக் கொண்டு வருவது ஆகும். எனவே அனைத்து பாரங்களையும் பாபாவிடம் கொடுத்து விட்டு லேசாய் இருந்தால் 'அதக் பவ' வரதானம் கிடைத்து விடும்.

**சதா ஒரே ஒருவரின் நினைவில் இருக்கும் உண்மை தபஸ்வி பவ !**

தபஸ்வியினுடைய தவம் என்பது வெறும் ஓர் இடத்தில் அமருவது மட்டும் அன்று. தபஸ்யா என்றால் ‘லகன்’ (ஆழ்ந்த அன்பு) நிற்கும்பொழுதும், நடக்கும்பொழுதும், உண்ணும்பொழுதும் அந்த லகனிலேயே மூழ்கி இருக்க வேண்டும். ஒரே ஒருவரின் நினைவில், அந்த ஒரே ஒருவரோடு கூடவே உணவு உண்ண வேண்டும், அந்த ஒரே ஒருவரின் துணையில் வாழ வேண்டும், அந்த ஒரே ஒருவரோடு உள்ளத்து விஷயங்களை பரிமாறிக் கொள்ள வேண்டும். ஒரே ஒரு பாபா, அவரைத் தவிர வேறு எவருமில்லை. இதுவே தபஸ்யா. இப்படிப்பட்ட தபஸ்வி பவ என்னும் வரதானத்தைப் பெற்று தானும் சம்பன்னம் அடைந்து பிறரையும் அடையச் செய்யுங்கள்.

**துக்கமான சூழ்நிலையிலும் கூட சதா சுகத்தை அனுபவம் செய்யக்கூடிய மஹாவீர் பவ !**

துக்கம், அசாந்தி என்னும் எப்படிப்பட்ட பாதக சூழ்நிலையிலும் சுய ஸ்திதியானது சுகமயமாகவும் ஒரே ஒருவரின் ரசனை உடையதாகவும் (ஏக்ரஸ்) இருக்கட்டும். ஞான சக்தியின் ஆதாரத்தில் மலை அளவு கஷ்டம் கூட கடுகு அளவு தோன்றட்டும். என்ன நடந்தாலும் சரி, எதுவும் புதிதல்ல – இந்த ஸ்திதியிலே இருக்க வேண்டும், அதாவது மாஹாவீர் பவ என்னும் வரதானத்தை அடைய வேண்டும்.

### சதா ஞான ரத்தினங்களோடு விளையாடக்கூடிய மாஸ்டர் ஞான சாகர் பவ !

அனைத்திலும் மேலான அழிவற்ற ரத்தினம் யாதெனில், அது ஞான ரத்தினமாகும். யார் சதா ஞான ரத்தினங்களோடு விளையாடுகிறார்களோ அவர்கள் மாஸ்டர் ஞானக்கடலாக ஆகி விடுகிறார்கள். அரை கல்பமாய் கல்லோடு விளையாடி வந்தீர்கள். எனவே கல்புத்தியாக துக்கம், அசாந்தி உடையோராய் ஆகி இருந்தீர்கள். இப்பொழுது மாஸ்டர் ஞானக்கடலின் வரதானத்தை நினைவில் கொண்டு கடந்து முடிந்து விட்ட வாழ்க்கை பிறர் எவருடையதாகவோ உங்களுக்கு அனுபவம் ஆகுமே தவிர உங்களுடைய வாழ்க்கையாகத் தோன்றாது.

**உங்களது ஒவ்வொரு செயலின் மூலமும் பாபாவை சாட்சாத்காரம் செய்விக்கக் கூடிய கர்ம யோகி பவ !**

எப்படி எல்லைக்கு உட்பட்ட ஆத்மாக்களோடு சிநேகம் வைத்திருக்கக்கூடிய ஆத்மாக்களின் முகம் மற்றும் நடத்தையில் இருந்து இவர்கள் எவரது சிநேகத்திலேயோ மூழ்கி இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறதோ, அதே போன்று உங்களுடைய ஒவ்வொரு செயலின் மூலம் பாபாவின் சிநேகம் மற்றும் உறவு ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சாட்சாத்காரமாய் தென்பட வேண்டும். அப்பொழுது தான் கர்ம யோகி பவ என்னும் வரதானத்தை அடைந்தவர்களாய் கூற முடியும். இப்படிப்பட்ட வரதானத்தை அடைந்து ஒவ்வொரு சங்கல்பம், சொல் மற்றும் கர்மத்தின் மூலம் பாபாவின் சிநேகம் மற்றும் சுகம், சாந்தியின் அலைகளை உலகெங்கும் பரப்புக.

## ருஹானி லைட் மூலம் வாயுமண்டலத்தை பரிவர்த்தன் செய்யக்கூடிய சேவையில் வெற்றி மூரத் பவ !

எப்படி ஸ்தூல ஒளியானது கண்கள் மூலமாகத் தெரிகின்றதோ அப்படி ஆன்மீக ஒளி அனுபவத்தின் மூலம் தெரிய வரும். தற்பொழுது ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சாந்தி, சுகம் மற்றும் பவித்ரதாவின் ஒளி சக்திகளின் அனுபவம் ஏற்படுமளவு உங்களது ஒளி சக்தி நிலையை சக்தி வாய்ந்ததாக ஆக்கிக் கொள்ளுங்கள். எப்பொழுது இம்மாதிரி ஆன்மீக சூழ்நிலை உருவாகுமோ அப்பொழுது ஆத்மாக்கள் தாமாகவே ஈர்க்கப்பட்டு சமீபத்தில் வரும். இப்படிப்பட்ட சேவையின் மூலமே வெற்றி மூரத் ஆவீர்கள்.

**சதா இறை மாணவ வாழ்க்கையின் (GODLY STUDENT LIFE) நினைவின் மூலம் நிஷ்சிந்த் மற்றும் நிர்விக்ன பவ !**

எந்த வித விஷயங்களும் தடை ரூபத்தில் வந்து புத்தியில் தொந்தரவு செய்யாதவாறு எப்படி மாணவர்கள் சதா சிரித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் படிக்கின்றனரோ அப்படி படிக்க வேண்டும். பிறருக்கு படிப்பிக்கவும் வேண்டும். மேலும் நிர்விக்னமாயும் இருத்தல் வேண்டும். பாபாவின் கூடவே எழ வேண்டும், அமர வேண்டும், உண்டு அருந்த வேண்டும், இதுவே மிகச் சிறந்த இறை மாணவ வாழ்க்கை. இதில் சதா மகிழ்ச்சியுடன் இருங்கள். பாடிக் கொண்டே இருங்கள் மற்றும் பாபாவிடம் கூடவே நடந்து கொண்டு இருங்கள். அப்பொழுது நிஷ்சிந்த் மற்றும் நிர்விக்ன பவ என்னும் வரதானி ஆகி விடுவீர்கள்.

## விதியின் மூலம் சுய புருஷார்த்தம் மற்றும் சேவையில் அபிவிருத்தியைக் காணும் சிரேஷ்ட ஆத்மா பவ !

அபிவிருத்தியின் (வளர்ச்சி) வரதானத்தை அடைவதற்கு சதா விதிப்பூர்வமாய் நடங்கள். பிராமணர்கள் என்றாலே விதிப்பூர்வமாய் நடப்பவர்கள். அமிர்தவேளையில் இருந்து இரவு வரை எண்ணம், சொல், செயல், தொடர்பு, சம்மந்தத்தில் விதிப்பூர்வமாய் நடந்தால் அபிவிருத்தி நிச்சயம் ஏற்படும். ஏதேனும் ஒரு விஷயத்தில் அபிவிருத்தி இல்லை என்றால் ஏதேனும் ஒரு விதியில் நிச்சயம் குறைவு என்றே பொருள். எனவே காரணத்தை கண்டுபிடித்து நிவாரணம் செய்தீர்களாயின், ஒருபொழுதும் மன உளைச்சலில் வர மாட்டீர்கள்.

## சதா விக்ன விநாசக் ஆவதற்கு நிரந்தர யோகி மற்றும் நிரந்தர சேவாதாரி பவ !

எப்படி பாபா அன்புடையவராய்த் திகழ்கின்றாரோ, பாபா இல்லாது வாழ்க்கையே இல்லையோ, அதே போன்று சேவை இல்லாத வாழ்க்கையும் இல்லை. தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது சேவை நடக்க வேண்டும். அதாவது, தூங்கிக் கொண்டிருக்கும்போது எவராவது கண்டால் உங்கள் முகத்திலிருந்து சாந்தி, ஆனந்தம் மற்றும் அருள் ஆகியவற்றின் பொலிவான அதிர்வுகளை அவர்கள் அனுபவம் செய்ய வேண்டும். ஒவ்வொரு சங்கல்பம், செயலிலும் சேவை நிறைந்து இருக்க வேண்டும். இவர்களையே நிரந்தர சேவாதாரி என்றழைக்க முடியும். இப்படிப்பட்ட நிரந்தர சேவாதாரி, நிரந்தர யோகி சதா விக்ன விநாசக் ஆக இருப்பர்.

## அனைத்து ஆத்மாக்களுக்கும் குடை நிழலின் அனுபவத்தை செய்விக்கக் கூடிய விஷ்வ கல்யாணகாரி பவ !

எந்த ஆத்மாக்கள் உங்கள் தொடர்பில் வந்தாலும் சரி அவர்களுக்கு சக்தி, சாந்தி ஆகியவற்றின் அனுபவம் ஏற்பட வேண்டும். மனச் சோர்வான ஆத்மாக்கள் உங்கள் முன் வந்த உடனேயே மலர்ச்சி அடைய வேண்டும். ஒவ்வொரு பேச்சின் மூலம் உற்சாகம், ஆர்வத்தை தூண்டக்கூடிய, கஷ்டத்தை எளிதாக்கக்கூடிய, அடிமைகளை அதிகாரிகளாக்கும் காரியமும் நடக்க வேண்டும். இப்படிப்பட்ட வரதானி ஆத்மாக்களின் தொடர்பு பிற ஆத்மாக்களுக்கு குடை நிழல் ரூப அனுபவத்தைத் தரும்.

**சங்கல்பம் மற்றும் சமயத்தின் மீது அதிகாரம் செலுத்தக்கூடிய விஷ்வ அதிகாரி பவ !**

தற்பொழுது தங்களது சங்கல்பம் மற்றும் சமயத்தின் மீது முழு கட்டுப்பாடு கொண்டிருப்பவர்களுக்கே ஆதி காலத்தில் (சத்யுகத்தில்) விஷ்வ அதிகாரி ஆவதற்கான வரதானம் கிடைக்கிறது. இப்படிப்பட்ட ஆத்மாக்களே உலக ஆத்மாக்களின் மூலம் சதோபிரதானமான ஆதி காலத்தில் (சத்யுகத்தில்) அனைவரது மரியாதையும் பெறுகிறது. தற்பொழுது சுய ராஜ்யம் செய்யக் கூடியவர்களே எதிர் காலத்தில் விஷ்வ ராஜ்ய அதிகாரி ஆகின்றனர்.

**சதா சமான நிலையின் மூலம் (பாப்சமான்) சதா சமீப நிலையை அனுபவம் செய்யக் கூடிய விசேஷ ஆத்மா பவ !**

தற்காலத்தில் பாப்தாதாவின் குணங்கள், ஞானம் மற்றும் சேவையில் சமான சமீப நிலையை அனுபவம் செய்வதே வரதானத்தை அடைவதாகும். தற்பொழுது உன்னோடு கூடவே உண்பேன், உறங்குவேன், ஒவ்வொரு விநாடியும் கழிப்பேன், ஒவ்வொரு செயலிலும் உன் துணையோடு இருப்பேன் – இப்படி உறுதிமொழியைக் காக்கக் கூடிய நல்ல குழந்தைகளுக்கு பாபாவும் ஜென்ம ஜென்மாந்திரமாய் கூடவே இருக்கும் வரதானத்தை அளிக்கின்றார். சாகார பாபாவுடன் ஞானி ஆத்மா மற்றும் பக்த ஆத்மா ஆவதில் சதா துணை மற்றும் தத்தத்வம் (நீயே அது நீயே சத்யுகத்திலும் ஆதியில் வரும் ஆத்மா) ஆகியவற்றின் வரதானம் இப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்களுக்கே கிடைக்கிறது.

## சம்பன்ன மூரத்தின் வரதானத்தின் மூலம் செல்வந்தர் பவ !

சதா செல்வந்தராய் விளங்கிட அனைத்து சக்திகளின் கஜானாவினாலும், சர்வ குணங்களின் பொக்கிஷங்களினாலும், ஞானத்தின் கஜானாவினாலும் சதா சம்பன்னமாய் விளங்கிடுக. என்ன செய்வேன், எப்படி செய்வேன், விரும்பினாலும் செய்ய முடிவது இல்லையே – இப்படிப்பட்ட சக்தியற்ற பேச்சு, சங்கல்பம் எழவே கூடாது. தன்னை சதா சம்பன்ன மூரத்தாக அனுபவம் செய்க. உங்களுடைய நிறைவுத்தன்மை மூலம் ஏழையான ஆத்மாக்களுக்கு (சுகம், சாந்தி, குணம், சக்தி இல்லாத) குடைநிழல் போல் இருந்து உற்சாகம் ஆர்வத்தை அனுபவம் செய்வீர்களாக.

**நிராசையான சூழ்நிலையில் குஷியின் பிரபாவத்தைக் கொண்டு வரக்கூடிய சதா ஹேப்பியின் (சந்தோஷம்) வரதானி பவ !**

எப்படிப்பட்ட துக்கத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையாயினும் சரி, அப்பிராப்தியின் அனுபவத்தை செய்விக்கும் நிராசையான சூழ்நிலையானாலும் சரி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் சதா குஷியாய் இருந்து துக்கம் மற்றும் சோர்வான சூழ்நிலைகளை, இருளை அகற்றும் சூரியனை போன்று மாற்ற வேண்டும். சதா மகிழ்ச்சியுடன் இருக்கும் வரதானத்தை அடைந்த ஆத்மாக்களே இந்தச் சேவையை செய்ய முடியும்.

**அனைவருக்கும் வரதானத்தை வழங்கும் வரதானி மூரத், காமதேனு, இஷ்ட தேவாத்மா பவ !**

ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களின் மன இச்சையின் பிரகாரம் வரத்தை வழங்கக்கூடிய வரதானி மூரத், காமதேனு ஆகி அவர்களுக்கு வரதானத்தை வழங்கிடும் பாப்தாதாவின் மிக சமீப துணையான இஷ்ட தேவாத்மாக்கள் ஆகுங்கள். சிலருக்கு பக்த ஆத்மாவின் வரதானத்தையும், சிலருக்கு ஆத்மஞானி பவ என்னும் வரதானத்தையும் வழங்குங்கள். யார் என்ன கேட்டாலும் அது அவர்களுக்கு கிடைக்கட்டும்.

**பவித்ரதாவின் பர்சனாலிடியின் (தோற்றப்பொலிவு) மூலம் ஆகர்ஷண மூரத் பவ !**

எந்த ஒரு பர்சனாலிடியும் மனிதனை தன் பக்கம் நிச்சயம் ஈர்க்கிறது. தற்சமயம் தூய்மையே அனைத்திலும் பெரிய பர்சனாலிடி ஆகும். ஒவ்வொருவரும் இதனையே அனுபவம் செய்ய விரும்புகின்றனர். எனவே இப்பொழுது உங்களது நடைமுறை வாழ்வில் இந்த தூய்மையின் பர்சனாலிடி தானாகவே அனைவரையும் கவர்ச்சிக்கும். மேலும் இவர்களே உலகத்தின் மேலான பர்சனாலிடி உடையோர் என்னும் அனுபவத்தையும் செய்விக்கும்.

**தனது பெயர், புகழ் இவைகளை தியாகம் செய்வதின் மூலம் அனைவரின் பாக்யத்தை ஏற்படுத்தும் பாக்ய விதாதா (வள்ளல்) பவ !**

அற்பகால பெயர், புகழ் இவற்றில் இருந்து விலகி இருந்தால் சதா காலத்திற்கும் அனைவரது அன்பிற்கும் பாத்திரமாவோம். பெயர், புகழை யாசிக்கும் அம்சத்தையே தியாகம் செய்து விடும் பொழுது அனைவரது பாக்யத்தையும் ஏற்படுத்தக் கூடிய உலகின் பாக்ய வள்ளல் ஆவீர்கள். கர்மத்தின் பலன் தானாகவே உங்கள் முன் சம்பன்ன சொரூபத்தில் வரும். ஆனால் அற்பகால இச்சைகளில் இருந்து இச்சா மாத்ரம் அவித்யா ஆகுக. தியாகம் செய்வீர்களாயின் பாக்யம் உங்கள் பின்னே வரும்.

## அநேகரின் கஷ்டத்தை நீக்கக் கூடிய சால்வேஷன் ஆர்மி (கஷ்டம் தீர்க்கும் சேனை) பவ !

அநேகருடைய கஷ்டங்களைத் தீர்க்கும் சேனைகளாக இப்பொழுது நீங்கள் ஆக வேண்டும். ஒவ்வொருவரின் கர்மத்தின் ஆழத்தினைப் புரிந்து கொண்டு சத்கதி வழங்கச் செய்யுங்கள். நீங்கள் அதற்கான வசதிகளை எடுத்துக் கொள்ளாதீர்கள். வள்ளலாகி பிறருக்கு வாரி வழங்குங்கள். ஏதேனும் சேவைக்காகவோ, தனக்காகவோ, தீர்வுகளையோ வசதிகளையோ எடுத்துக் கொண்டால் அற்பகால வெற்றி கிடைக்கும்தான். ஆனால் இன்று மஹானாக தென்பட்டாலும் நாளை மஹான் தன்மைக்காக தாகத்தோடு இருக்கும் ஆத்மாவாகி விடுவீர்கள். எனவே சால்வேஷன் எடுப்பதற்குப் பதிலாக சால்வேஷன் சேனை ஆகுங்கள்.

## நியாயம் மற்றும் உரிமை என்று கேட்பதற்குப் பதிலாக அனைத்து பிராப்திகளினாலும் திருப்தி ஆத்மா பவ !

மாஸ்டர் சர்வ சக்திவானின் கஜானாவில் கிடைக்காத பொருள் ஏதும் இல்லை என்பது பிராமண வாழ்வின் சுலோகன் ஆகும். சதா இந்த ஸ்லோகனை நினைவில் இருத்தி திருப்தியான ஆத்மாவாக இருங்கள். இது எனக்கு வர வேண்டிய நியாயம், இது எனது உரிமை என்று ஒருபோதும் உரிமை கொண்டாடுவோராக நீங்கள் ஆக வேண்டாம். நான் இதைச் செய்தேன், எனவே இது எனக்கு கிடைக்க வேண்டும், இந்த விஷயத்தில் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பவை கூடாது. எந்தவித ரீதியிலும் கேட்டுக் கொண்டே இருப்பவர்கள் சுயம் தன்னை திருப்தி ஆத்மாவாக அனுபவம் செய்ய முடியாது. ஏதேனும் இச்சை அச்சா (நல்ல) கர்மத்தை இல்லாமல் ஆக்கி விடுகிறது. எனவே சர்வ பிராப்தியின் சொரூபமாக ஆகுங்கள்.

**உலகத்தின் துக்கம், அசாந்தியின் பிரச்சினைகளை தீர்க்கும் துக்க ஹர்தா (துக்கத்தை அழிப்பவர்), சுக கர்த்தா (சுகத்தை கொடுப்பவர்) பவ !**

தற்பொழுது துக்கம், அசாந்தியின் அனுபவம் அளவு கடந்து சென்று கொண்டிருக்கிறது. அதனை இறுதி சம்பன்ன நிலையின் மூலம் முடித்து விடும் காரியத்தை வேகமாகச் செய்யுங்கள். உங்களுடைய படைப்பின் எல்லையற்ற துக்க அசாந்தியின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாஸ்டர் ரச்யதா (படைப்பவர்) நிலையில் ஸ்திரமாகி துக்கத்தை அழித்து சுகத்தை அளிக்கும் பாகத்தைச் செய்யுங்கள். உங்களது சுகம், சாந்தியின் கஜானாவின் மூலம் அவர்களுக்கு மஹாதானத்தையும் வரதானத்தையும் வழங்குக.

### துக்கம்-சுகம், நிந்தனை-ஸ்துதி ஆகியவற்றில் சமமாய் இருக்கக்கூடிய சம்பூர்ண யோகி பவ !

துக்கத்தைக்கூட சுகமாய் அனுபவம் செய்வோர்கள் என்று யோகிகளுடைய நிலை பற்றி வர்ணிக்கப்படுகிறது. எனவே துக்கம்-சுகம், நிந்தனை-ஸ்துதி அனைத்திலும் சமமான ஸ்திதி இருக்குமாறு சம்பூர்ண யோகி பவ வரதானி ஆகுங்கள். இது துக்கம், சுகம் என்கிற ஞானம் தெரிந்து இருந்தும் துக்கத்தின் பிரபாவத்தில் வரலாகாது. துக்கத்தையும் பழி வாங்கும் சுகமான நாட்கள் வந்து கொண்டே இருக்கின்றன என்று உணருங்கள். அப்பொழுதே சம்பூர்ண யோகி என்று கூற முடியும்.

**கஷ்ட காலத்திற்கும் கூட மன மகிழ்ச்சியான உருவம் தரக்கூடிய மாஸ்டர் ரச்யதா பவ !**

சதா இந்த வரதானத்தின் நினைவின் மூலம் மாஸ்டர் ரச்யதா நிலையில் ஸ்திரமாய் இருந்து விளையாட்டு வீரனாகி விளையாடுங்கள். அப்போது பெரும்பெரும் கஷ்டங்கள்கூட மன மகிழ்ச்சியான காட்சிகளாய் தோன்றும். எப்படி மஹாவிநாசம் கூட சொர்க்கத்தின் வாயில் திறப்பதற்கான சாதனம் ஆகிறதோ அப்படி சிறிய பெரிய பிரச்சினைகளும் ஆபத்துகளும் சந்தோஷத்தை கொடுப்பவைகளாகவே தென்படும். ஐயோ-ஐயோ என்பவைகளுக்குப் பதிலாக ஆஹா-ஆஹா என்ற ஒலிகளே எழும். இதுவே அங்கத சமமான அசையாத நிலையாகும்.

### புகழ்ச்சியின் ரூபத்தில் பிரத்யக்ஷ பலனை அடைவதற்கு சதா பிரசன்ன மூரத் பவ !

யார் சதா திருப்தியாகவும் மகிழ்வுடனும் இருக்கின்றனரோ அவரது புகழை ஒவ்வொருவரும் நிச்சயமாய் பாடுகின்றனர். மகிழ்ச்சி பிரத்யக்ஷ புகழ்ச்சியாகும். திருப்தியின் அடையாளமாக வெளி உருவில் மகிழ்ச்சி தென்படும். ஆனால் இந்த திருப்தி கூட மூன்று விதமாய் வேண்டும். <1> பாபாவுடன் திருப்தி, <2> சதா தன்னுடன் திருப்தி, <3> சர்வ சம்மந்தம் மற்றும் தொடர்புகளுடன் திருப்தி.

**சர்வ சக்திகளையும் தன் கட்டளைப்படி நடத்தக் கூடிய சதா நிர்பய (பயமற்ற) பவ !**

இந்த சர்வ சக்திகள் உங்களுடைய புஜங்களுக்கு சமமானவை. எஜமானர்களாகி கட்டளை இடுங்கள். அப்பொழுது அவை சேவாதாரிகளாகி சேவையில் ஆஜராகி விடும். ஆனால் ஏதேனும் பயமிருந்தால் அதாவது பொறுத்துக்கொள்ள முடியுமோ முடியாதோ, எதிர்கொள்ள முடியுமோ முடியாதோ என்ற நினைப்பு கட்டளையிட முடியாது தடுப்பவை ஆகும். எனவே மஹாகாலனுடைய குழந்தைகள் ஆகிய நீங்கள் பயமற்றவர்களாக ஆகுங்கள். அப்போது சர்வ சக்திகளும் சதா ஒத்துழைப்பை நல்கி வரும்.

## சதா சிரேஷ்ட பாவனை மற்றும் சுப பாவனையின் மூலம் புண்ணிய ஆத்மா பவ !

புண்ணிய ஆத்மா ஆவதற்கு வீணானவைகளைக் கேட்காதீர்கள்-கூறாதீர்கள்-நினைக்காதீர்கள். சதா சுப பாவனையுடன் எண்ணுங்கள். சுபமான பேச்சுக்களையே பேசுங்கள். வீணானவைகளை சுப பாவனையாக மாற்றி விடுங்கள். முதலில் தன்னை மாற்றுவதற்காக யோசியுங்கள். பிறருடைய மாற்றத்திற்காக நினைக்காதீர்கள். சுய மாற்றமே பிறருடைய மாற்றமாகும். இதில் முதலில் ‘நான்’ இந்த மறுபிறவி எடுப்பதில்தான் ஆனந்தம். இதுவே மஹாபலி என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு இறப்பதே வாழ்வதாகும். இதுவே உண்மையான உயிர்ப்பிச்சை ஆகும்.

## மன்மனாபவ என்னும் மஹா மந்திரத்தின் நினைவின் மூலம் சுக சொரூப் பவ !

இந்த மன்மனாபவ என்னும் மஹா மந்திரம் அனைத்து துக்கங்களையும் கடந்து சுக சொரூபம் ஆக்கக் கூடியதாகும். சொப்பனத்தில்கூட துக்கத்தின் அனுபவம் கூடாது. உடல் சுகமில்லாமலும் போகலாம், செல்வம் கீழே மேலே செல்லலாம், இப்படி என்ன நடந்தாலும் சரி துக்கத்தின் அலை மட்டும் உள்ளே வர முடியாது. மன்மனாபவ மந்திரத்தின் நினைவின் மூலம் கடலில் விளையாடுவது போன்று துக்கத்தின் அலைகளைக் கடக்க வேண்டும்.

## உங்களது ரிஜிஸ்டரை சுத்தமாக வைத்திருப்பதற்கு விருத்தியிலும் சதா பிரம்மச்சாரி பவ !

சதா பிரம்மச்சாரி என்றால் சங்கல்பத்தில் கூட எவ்வித அபவித்ர தன்மையும்கூட விருத்தியை சஞ்சலப்படுத்தல் ஆகாது. முதல் தோல்வி விருத்தியில்தான் ஏற்படுகிறது. பிறகு திருஷ்டியிலும் செயலிலும் ஏற்படுகின்றன. விருத்தியில் ஏற்படும் சஞ்சலமே ரிஜிஸ்டரில் கரும் புள்ளியை ஏற்படுத்தி விடுகிறது. எனவே விருத்தி அளவில் சதா பிரம்மச்சாரியாய் இருந்தால்தான் ரிஜிஸ்டர் சுத்தமாய் இருக்கும்.

## ஒரே ஒரு வழியின் மீதான நம்பிக்கை செறிந்த ஒற்றுமையின் ஆதாரத்திலான சாட்சாத்கார் மூரத் பவ !

சதா விசேஷ தன்மைகளை நினைவில் கொண்டு உங்களிடையே ஒருவர் மற்றொருவர் மீது நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். ஒவ்வொருவரின் விசேஷத்தைக் காணும் பொழுது அநேகராய் இருக்கிற பொழுதிலும் ஒருவராய்த் தென்படுவீர்கள். மேலும் ஒரே வழியின் அடிப்படையிலான ஒற்றுமை பிறக்கும். எவரேனும் எவரது குறை பற்றிய விஷயங்களைக் கூறினால் அதை கேட்பதற்குப் பதிலாக அதை கூறுபவரின் ரூபத்தையே (உரையாடலின் போக்கை) மாற்றி விடுங்கள். வீணான சூழ்நிலைகளை மாற்றி அவர் மீதும் சுபம் மற்றும் மங்கள பாவனை வையுங்கள்.

## சதா சிநேகம் மற்றும் சக யோகத்தின் கொடுக்கல்-வாங்கல் முலம் ராயல்டியின் உண்மையான சம்ஸ்காரங்களின் சம்பன்ன பவ !

ஈஸ்வர்ய ராயல்டியின் உண்மையான சம்ஸ்காரங்களைக் கொண்டிருக்கும் ராயல் ஆத்மாக்கள் தங்களிடையே ஒருவர் மற்றவரின் விசேஷ குணங்களையே வர்ணனை செய்வர். சதா சகயோகம், சிநேகத்தின் புஷ்பங்களையே கொடுத்து வாங்கி ஆன்மீக விருத்தியின் மூலம் ஆன்மீக அலைகளை பரப்புகின்றனர். அவர்கள் பிறரால் தூக்கி எறியப்பட்ட நல்ல பொருட்களைகூட தொடுவதில்லை. எனவே எந்த அவகுணம்-பலவீனத்தை ஒவ்வொரு ஆத்மாவும் விட்டு விடுவதற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கிறதோ அதனை சங்கல்பத்தில் எடுத்துக் கொண்டாலும் மஹாபாவமே என்பதில் கவனமாய் இருத்தல் வேண்டும்.

**முட்களை மலராக மாற்றும் சதா பரோபகாரி பவ !**

ஒவ்வொரு ஆத்மாவின் பலவீனங்களை தெரிந்து கொண்டு அவைகளை தன்னுள் எடுத்துக் கொள்வது அதாவது வர்ணனை செய்வதற்குப் பதிலாக, அந்த பலஹீனங்கள் என்னும் முட்களை கல்யாண்காரி சொரூபத்தின் மூலம் நீக்கிவிட வேண்டும். அதாவது முட்களை மலராக்கிவிட வேண்டும். இதுவே பரோபகாரி ஆவதாகும். இம்மாதிரி பரோபகாரி ஆத்மா நம்பிக்கை இழந்த நிலையிலும் நம்பிக்கையை ஏற்படுத்தி விடும்.

## தன்னுடைய எல்லா இச்சைகளையும் தியாகம் செய்யும் இடையறாத தானி பவ !

சாகார்பாபா (பிரம்மாபாபா) தான் பணிவுடன் இருந்து குழந்தைகளுக்கு மதிப்பு அளித்தார். செயல் மூலம் வரும் நற்பயன்களையும் தியாகம் செய்தார்; தன்னை சதா சேவாதாரி ஆக்கினார். எஜமான் என்ற உரிமை, மதிப்பு, அந்தஸ்து ஆகியவைகளையும் குழந்தைகளுக்கே கொடுத்தார். இச்சை எது என்பதே அறியாமல் இருந்து, சதா இடையறாத தானியாக விளங்கினார். தியாகத்தினால் சதா காலமும் பாக்யசாலியாக விளங்கினார். இப்படி தந்தையைப் பின்பற்றி இடையறாத தானியாகி தியாகத்தினால் அதிர்ஷ்டம் என்ற கோட்டை ஒளி வீசச் செய்யுங்கள்.

## ஒவ்வொரு மஹாவாக்கியத்தின் அர்த்தத்தைப் புரிந்து நிச்சய புத்தி மற்றும் கவலையற்று இருப்பாய் !

நிச்சய புத்தியின் முதல் அடையாளம் சதா கவலை அற்று இருப்பது. பாபா மங்களம் செய்பவர், வாழ்க்கையும் மங்களமானது. எனவே பகவான் உடைய எந்த மஹாவாக்கியத்திலும் அநேக விதமான மங்களம் அடங்கி இருக்கிறது. ஏன், எப்படி, எங்கே என்ற எண்ணங்கள் மூலம் நம்பிக்கை என்ற அஸ்திவாரத்தை அசைக்கக் கூடாது. ஒவ்வொரு மஹா வாக்கியத்தின் அர்த்தத்தைப் புரிந்து கல்யாண்காரி தந்தை மற்றும் கல்யாண்காரியான நேரத்தினால் கிடைக்கும் நன்மைகளை ஒவ்வொரு செகண்டிலும் எடுத்து சதா சக்தி உள்ள ஆத்மா ஆகுக.

## எல்லா பாக்யத்தின் அனுபவத்தைக் கொண்ட ராயல் ஆத்மா ஆகவும் !

உதாரணமாக இன்றைய ராஜ குலத்தைச் சேர்ந்த ஆத்மா சதா நிரம்பி இருப்பதால், இங்கும் அங்கும் அடிமை ஆவதில்லை. அதுபோல ராயல் ஆத்மாவான நீங்களும் சர்வ பாக்யத்தின் அனுபவம் மூலம் ஒவ்வொரு கஜானாவையும் பெற்றிடுங்கள். அதன் மூலம் அற்பமான கொஞ்ச நேரம் சுகம் தரும் மனிதர், ஆடம்பரம் மீது பார்வை செல்லாமல் இருக்கட்டும். சதா கண்களில் ஒரு ஜோதி புள்ளி சொரூப பாபாவே நிலையாக இருக்கட்டும். இதுதான் ராயல் தன்மை அதாவது சரியான நிலை.

## முதல் வகுப்பின் உரிமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு குணம், சக்தியின் அனுபவம் நிறைந்த ஆத்மா பவ !

சங்கம யுகத்தில் ஒவ்வொரு குணம், சக்தி ஆகியவைகளை அனுபவம் செய்வதுதான் முதல் வகுப்பில் வர உரிமையைப் பெறுவதாகும். சாந்தியின் அனுபவத்தைப் பெற்று அதி இந்திரிய சுகத்தின் அனுபவத்தைப் பெறவில்லை, குஷியைப் பெற்று சக்தி ரூபம் அடையவில்லை என்றால் இரண்டாவது வகுப்புக்குச் சென்று விடுவீர்கள். ஆகவே முதல் வகுப்பில் வர, வரதானம் வாங்கிட எல்லா பாக்யங்களையும் அனுபவம் செய்தால் தான், இயற்கையின் சதோபிரதான சுகத்தை அனுபவிக்க முடியும்.

## ஒவ்வொரு செயல் மூலம் உண்மையின் கௌரவத்தை அனுபவம் செய்ய வைக்கும் உயர்ந்த ஆத்மா பவ !

ராயல்டி (கௌரவம்) என்பது ஒரு பாபாவைத் தவிர வேறு எவரும் இல்லை என்ற நினைவில் இருப்பதால் வரும் ராஜலட்சணமாகும். அப்படிப்பட்டவருடைய ஒவ்வொரு செயலும் சத்தியமாக அதாவது சிறந்ததாக இருக்கும். அவர் தொடர்பில் வரும் ஆத்மா அவரை பாபாவுக்கு நிகராக நினைப்பார். அவருடைய ஒவ்வொரு சொல்லும் சக்திசாலியாக அதாவது பயன் தரக் கூடியதாக உண்மையான மொழியாக இருக்கும். அவருடைய சம்மந்தம் பாரஸ்மணியாக இருக்கும். அதாவது, பலவீனர்களைக்கூட பலம் உள்ளோர் ஆக்கும். இப்படி உண்மை மூலம் ராஜலட்சணத்தை வெளிப்படுத்தும் உயர்ந்த ஆத்மா ஆகுக.

## ஒரே வழி, ஒரே ரசனை என்ற ஸ்திதியின் வரதானம் மூலம் சதா மலச்சி பவ !

எந்தக் குழந்தை ஒரே வழி, ஒரே ரசனை, ஒரே உயர்ந்த காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாரோ, அவர் முகம் சதா மலர்ந்து இருக்கும். மலர்ந்திருக்கும் காரணத்தால் சேவையில் பலாபலனை உற்பத்தி செய்கிறார். நிலமும் விளைச்சல் தரும் நிலம் ஆகிறது. எவ்வாறு பொறுப்பு வகிக்கும் ஆத்மா இருக்கிறாரோ அவ்வாறு வாயுமண்டலம் இருக்கும். சதா ஒரு பாபாவின் ஆர்வத்தின் போதையில் இருப்பவருக்குத் தடை வராது. தன் தொடர்பில் வரும் ஆத்மாவையும் அவர் தடை இன்றி இருக்கச் செய்கின்றார்.

**தன்மீது சதா பாபாவின் வரங்கள் என்னும் கரங்களை அனுபவிக்கும் இரக்கமுள்ள ஆத்மா பவ !**

பாப்தாதாவின் வரதானம் என்னும் கரங்கள் சதா குழந்தைகள் மீது இருக்கின்றன. ஆனால் தன்மீது இரக்கம் கொண்டு, ஒவ்வொரு செயலிலும் அதை அனுபவம் செய்யவும். இப்போதும் மாற்றம் செய்ய இடைவெளி உள்ளது. மிகத் தாமதமாகி விட்டது என்ற போர்டு போடவில்லை. இரவு பகல் ஒரே உறுதியான எண்ணம் என்ற முயற்சியால் ஹைஜம்ப் செய்ய முடியும். தன்னுடைய பாக்யத்தை முதல் நம்பரில் கொண்டு வரும் முயற்சி என்ற லாட்டரி எடுக்கும்போது நம்பர் வந்து விடும். எனவே நடந்ததை நடந்து முடிந்து விட்டதாக எண்ணி தன்னுடைய எதிர் காலத்தை உயர்ந்ததாக மாற்ற இரக்க மனம் கொள்க.

**சேவைக்காக அவதாரம் செய்திருக்கும் அவதார ஆத்மா நான் என்ற நினைவில் விலகி இருப்பாய் !**

அவதாரம் செய்பவருக்கு தான் எதற்காக அவதாரம் செய்திருக்கிறோம் என்பது சதா நினைவில் இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் சக்தி அவதாரம். நாம் இந்த மரண லோகத்தைச் சேர்ந்தவர் அல்ல, நாம் அவதாரம் எடுத்தவர். இப்படி சதா நினைத்து இருந்தால், மனோநிலை விலகி இருக்கும், எந்த பாரமும் அனுபவம் ஆகாது. சதா விலகி இருந்து சங்கம யுகத்தில் சிரேஷ்ட சுகமான வாழ்க்கையை அனுபவம் செய்து கொண்டு இருக்கலாம். ஒருபோதும் தன் நேரத்தை அவதாரம் எடுத்ததாக நினைப்பவர் வீணாக்க மாட்டார்.

## சக்திசாலி நிலையை அனுபவம் செய்திட சதா டிரஸ்டி என்றிருப்பாய் !

டிரஸ்டி சதா கவலையில் இருந்து விடுபட்டிருப்பார். அவருக்குத்தான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற போதை இருக்கிறது. எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் அவர் லேசாக, விலகி இருக்கின்றார். கொஞ்சம்கூட சூழ்நிலையின் பிரபாவத்தில் வருவது இல்லை. குடும்பஸ்தன் என்று நினைத்தால், என்ன-ஏன் ஆரம்பித்து விடுகிறது. ஆனால் டிரஸ்டியாய் இருப்பவருக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிகிறது. முற்றுப்புள்ளி வைப்பது என்றால் சக்திசாலி ஸ்டேஜின் அனுபவம் பெறுவது.

## ஆசையற்ற இரக்க மனம் என்ற சிறப்பு மூலம் இஷ்ட தேவ் பவ !

இரக்கம் என்னும் சிறப்பை வைத்து இஷ்ட தேவதை ஆகவும். அந்த நிலை மூலம் துடிக்கும், கெஞ்சும் ஆத்மா மீது இரக்கம் கொள்க; இரக்கம் உள்ள எண்ணம் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் ஆன்மீக ரூபம் என்ற குறிக்கோளை நினைவு படுத்தவும், கெஞ்சும் ஆத்மாவுக்கு சர்வ கஜானாவின் பிரகாசத்தைக் காட்டவும், துடிக்கும் ஆத்மாக்களுக்கு முக்தி-ஜீவன் முக்தியின் குறிக்கோளைக் காட்டவும், அனைவருக்கும் சுகம் தருபவராகவும், அனைவருடைய துக்கத்தை நீக்குபவராகவும் விளங்குங்கள். அப்பொழுது உங்களை இஷ்ட தேவன் என்னும் ரூபத்தில் நினைப்பார்கள்.

## காட்சி கொடுப்பதற்கு சுத்தம், பயமின்மை என்ற குணங்களால் நிரம்பி இரு !

பரமாத்மாவின் காட்சி கொடுப்பதற்கு ஆதாரம் குழந்தைகளுடைய சுத்தம் மற்றும் பயமின்மை என்னும் குணங்களாகும். இந்த இரு விஷயங்களில் இப்பொழுது முழுமை பெறவும். அதாவது எண்ணத்தில்கூட எந்த வித அசுத்தமும் தொடக் கூடாது. தன் பழைய தமோ குண சம்ஸ்காரத்தின் மீது வெற்றி கொள்ளவும், மற்ற ஆத்மாக்களின் சம்ஸ்காரங்களை மாற்றவும், தைரியசாலி ஆகவும், கூடவே சத்திய ஞானத்தை அச்சமின்றி மெய்ப்பிக்கவும் பரமாத்மா என்னும் குண்டை வீசவும். அப்போது காட்சி ஏற்படும்.

## வரதான மூர்த்தி ஆவதற்கு அமிர்த கலசத்தை வைத்திரு !

தன்னை அமிர்த கலசத்தால் நிரப்பவும். அதன் மூலம் வரதான மூர்த்தி என்னும் நடிப்பை நடிக்க முடியும். ஏனென்றால் இப்பொழுது கேட்கும் சக்தியும் தாரணை செய்யத் துணிவும் இல்லை. ஏதாவது கிடைக்காதா என்னும் தாகம் மட்டும் இருக்கிறது. இப்படி அநேக ஆத்மாக்கள் உலகில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நடக்க காலை அதாவது துணிச்சலை நீங்கள் தான் கொடுக்க வேண்டும். எனவே அனைவர்பாலும் இப்பொழுது வரதானி மூர்த்தி ஆகவும். அதாவது அமிர்த கலசம் ஏந்தி வரதானம் என்னும் மழையைப் பொழியும் சொற்பொழிவைச் செய்யுங்கள். எல்லோருக்கும் எண்ணம், சொல்லால் வரதானம் கொடுக்கவும்.

## எண்ணம் சக்தியின் சொரூபத்தில் இருந்து வெற்றியின் கொடியை ஏற்றும் உண்மையான சோஷியல் ஒர்க்கர் (சமூக சேவகர்) பவ !

ஸ்தூல கரங்களால் அல்லாமல் எண்ணம், சக்தி சொரூபத்தின் மூலம் சதா வெற்றிக் கொடியை ஏற்றிடும் உண்மையான ஆன்மீக சேவகர் ஆகவும். சதா வாயிலும் எண்ணத்திலும் பாபா,பாபா என்ற நிரந்தர மாலை சமமாக நினைவில் இருக்கட்டும். சதா கர்மத்திலும், சொல்லிலும் இடையறாமல் இதே தொனி உச்சரிக்காத ஜபமாக இருந்தால், மற்ற விஷயங்கள் தானே தீர்ந்து போய் விடும். அப்பொழுது அனைவருடைய பார்வையும் இப்படிப்பட்ட விசேஷ ஆத்மா மீது தாமே செல்லும். அனைவரும் அவருடைய பார்வையில் திருப்தியாகி விடுவார்கள்.

**கடைசி நிலையான பரிஸ்தா வாழ்க்கை என்ற லட்சியத்தினை அடையும் எல்லா பந்தனத்தில் இருந்தும் விடுபட்ட ஆத்மா ஆகவும் !**

ஏதேனும் ஒரு பொருள் செய்யப்பட்ட பிறகு அல்லது அது தயாரான பிறகு தன் ஆதாரங்களை நீக்கி விடுகிறது. அதுபோல எவர் சம்பன்ன நிலை அதாவது பரிஸ்தா நிலைக்கு சமீபத்தில் வருகிறாரோ, அவர் தன் உள்நோக்கம் மூலம் எல்லா பந்தனங்களில் இருந்தும் விலகிக் கொள்கிறார். எவர்மீதும் கவர்ச்சி இராது துடிப்பதும் நின்று விடும். குறிக்கோள் கிடைத்து விடுகிறது. சகல உறவுகளையும் ஒருவரிடம் மட்டும் வைத்து இருக்கிறார்.

## நிரம்பிய நிலையை அடைய சதா ஒத்துழைப்புதாரி ஆகவும் !

எந்த ஆத்மா உள்ளம், உயிர் மற்றும் அன்பு மூலம் யக்ஞத்திற்கு கவனிப்பு தருகின்றாரோ, சந்தர்பத்திற்கு ஏற்றபடி ஒத்துழைப்பு என்ற சுண்டு விரலைத் தருகின்றாரோ அவருக்கு ஒன்று பல மடங்கு ஆகிறது. ஸ்தாபனை காரியத்தில், தேவையான நேரத்தில் எந்த ஆத்மா மதிப்பில்லாத அளவு ஒத்துழைப்பைத் தந்தாரோ அந்த ஆத்மா பதிலுக்கு நிரம்பி வழிய வரம் பெறுகிறார். இந்த விதியை நினைவில் வைத்து சதா நிரம்பி வழிய வேண்டிய வரத்தை அடைக.

### சர்வ சம்பந்தங்களின் ரசனையை ஒரு பாபாவிடம் நஷ்ட மோஹறாவாகி நினைவு சொரூப பவ !

தினமும் அமிர்த வேளையில் சர்வ சம்பந்தங்களின் சுகத்தை பாப்தாதாவிடம் இருந்து வாங்கி மற்றவர்க்குத் தானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொள்ளவும். ஒவ்வொரு சம்பந்தத்தின் சுகத்தைப் பெறு; சர்வ சுகத்தையும் பெற உரிமை உடையவனாகு, மற்றவரையும் அப்படி மாற்று. எந்த ஒரு வேலை முன் வந்தாலும் ஸ்தூல துணைகளின் நினைவு வரலாகாது, பாபா நினைவு வரட்டும். இப்படி உண்மையான துணைவரின் துணையைக் கொள். ஒரு பாபா தவிர வேறு எனக்கில்லை – இந்த மனோ நிலையை அனுபவம் செய்தால் சுலபமாக மோஹம் வென்ற நிலையை அனுபவம் செய்யலாம்.

## சுத்தப்படுத்தும் விதி மூலம் சதா வெற்றியும் தடை அற்ற ஸ்திதியும் பெறுவாய் !

எந்த காரியத்தை ஆரம்பிக்கும் போது சுத்தப்படுத்தும் விதியை அனுசரிக்கின்றீர்கள். அதுபோல எந்த இடத்திலாவது விசேஷமாக ஒரு சேவையை ஆரம்பிக்கும்போது மெள்ளமெள்ள சேவையில் ஏதேனும் தடை தோன்றும். அப்பொழுது குழுவாக அமர்ந்து நான்கு பக்கத்திலும் சிறப்பாக யோக தானம் வழங்கவும். அனைவருக்கும் ஒரே சுத்த எண்ணம் மட்டும் இருக்கட்டும், அது வெற்றி. இது சுத்தப்படுத்தும் விதி. இதன் மூலம் அனைவரும் வெற்றி அல்லது தடையில்லாத நிலை அடைவீர்கள். கோட்டையும் பலமாகி விடும்.

## முதல் பிறவியில் கூட வருவதற்கு தடையற்ற அவிபசாரி ஆவாய் !

தடையற்ற நிலை என்றால் வரும் தடைகளை குதித்து தாண்டுவது, தடைகளுக்கு வசம் ஆகாமல் தடைகளை அழிப்பது, தடைகள் மீது வெற்றி பெறுவது. அவிபசாரி என்றால் உன்னுடன் மட்டும் பேசுவது, உன்னுடன் மட்டும் விளையாடுவது, உன் துணையுடன் இருப்பது என்ற, குழந்தைக்கு முதல் பிறவியில் கூட வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. யார் இங்கு சர்வ சம்மந்தங்களையும் பாபாவுடன் அனுபவம் செய்கின்றாரோ அவரே அங்கு அரச குலத்திலும் சமீபத்தில் வருவார்.

## அநேக ஆத்மாக்களுடைய ஆசியை அடையும் உண்மையான உலக சேவாதாரி ஆகவும் !

நாம் உலக சேவாதாரி, உலக மங்களம் என்னும் காரியத்தில் கருவிகள். காரியம் எப்படியோ தாரணமும் அப்படி இருக்கிறது. உலக மங்களம் என்னும் காரியம் நினைவில் இருந்தால் நீங்கள் சதா இரக்கத்துடன் மஹா தானியாக இருப்பீர்கள். ஒவ்வொரு அடியிலும் கல்யாண்காரி விருத்தி இருக்கும். மற்றவரும் அப்படி நடப்பார்கள். எனது என்ற அகந்தை முடிந்து போகும்; கருவி என்பது நினைவுக்கு வரும். பிறகு சேவை செய்யும் பொழுது பாபாவின் நினைவு தன்னைத் தானே வரும். யாருக்கு சேவை செய்வீர்களோ அவர்களுடைய ஆசிகளும் கண்டிப்பாக கிடைக்கும்.

### பத்மாபதம் பாக்யசாலி ஆவாய் !

சங்கம யுகத்தில் ஒவ்வொரு அடியிலும் கோடான கோடி வருமனத்தைச் சேர்க்கும் பத்மாபதம் பாக்யசாலி ஆகி விடும் வரம் கிடைத்திருக்கிறது. யார் ஒவ்வொரு அடியிலும் கோடி கோடியான வருமானத்தைச் சேர்க்கின்றாரோ அவருடைய முகத்தில் சதா பாக்யம் அடைந்த ஒளி தெரியும். அவருடைய தொடர்பில் வருவோருக்கும், இவருக்கும் ஏதோ கிடைத்திருக்கிறது என்ற எண்ணம் உண்டாகிறது. முழுமையான அவருடைய முகம் சேவைக்கு கருவியாக அமைந்து விடுகிறது.

## நினைவு, சேவை என்ற இரட்டைப் பூட்டு மூலம் மாயாவை வெல்லக் கடவீர் !

மாயா என்ற கதவைப் பூட்ட இப்போது இரட்டைப் பூட்டைப் பூட்டவும். அதாவது நினைவு சேவையில் சுறுசுறுப்பாக இருங்கள். சேவை இன்றி நினைவில் மட்டுமிருந்தால் மாயா வரும். இரட்டைப் பூட்டில் மாயா வராது, சண்டையிட முடியாது. ஆகவே நினைவுடன் சேவையையும் செய்து வரவும். அதனால் மாயாவின் கதவு மூடி விடும். அது உங்களுடைய கஜானாவை கொள்ளை அடிக்க இயலாது.

## சேவைக்குரிய சுலபமான சாதனம் சகஜ யோகியாக இருப்பதாகும் !

ஏதேனும் ஒரு விஷயம் கடினமாகத் தோன்றினால், கடினமானதை பாபாவிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் சதா சகஜ யோகியாய் இருங்கள். இதன் மூலம் சேவை சுலபமாக நடக்கும். ஏனென்றால் சகஜ யோகத்தின் சூட்சுமமான சக்தி தானே மற்ற ஆத்மாக்களை தன் வசம் இழுக்கும். ஆகவே எந்த விஷயத்திலும் மனம் ஓடியக் கூடாது. ஏனெனில் எந்த செயலுக்கும் பலன் இல்லாமல் போகாது.

## சதா பத்திரமாக இருப்பதாக உணரும் இணைந்த சொரூபதாரி பவ !

எங்கிருந்தாலும், என்ன காரியம் செய்தாலும் சதா பாபாவுடன் இணைந்த வடிவமாக இருக்கிறேன், தனியே இல்லை, பாபா என்னுடன் இருக்கின்றார் என்பது நினைவில் இருக்கட்டும். எங்கே குழந்தைகள் இருக்கின்றார்களோ, அங்கே பாபா குழந்தைகளுடன் இருப்பார். சதா பாபாவின் நினைவு என்ற குடை நிழலுக்குள் இரு, மாயா எந்த விதத்திலும் குடை நிழலுக்குள் வர முடியாது. சதா நான் பத்திரமான ஒரு கருவிக்குள் இருப்பதாக உணருவாய்.

## இரட்டை சேவை மூலம் இரட்டைக் கிரீடத்துக்கு அதிகாரி பவ !

உடல் மூலம் ஸ்தூல சேவை செய்யும் பொழுது, மனம் மூலம் உலக மாற்றம் என்ற சேவையில் ஈடுபடு. ஒரே சமயத்தில் இரண்டும் நடைபெற்றால், இரட்டை பலன் ஏற்படும். கர்மம் செய்யும்போது, இரட்டை சேவைக்குப் பதில் ஒன்று மட்டும் நடைபெறவில்லையே என்பதை சோதனை செய். மனம், செயல் இரண்டின் மூலம் இணைந்து சேவை செய்பவர் இரட்டை கிரீடதாரி ஆக முடியும். ஆகவே பயிற்சியை நேச்சுரலாக நிரந்தரமாக செய்து வரவும்.

**எல்லா பாக்யத்தின் அனுபவத்தால் வெற்றி மூர்த்தி பவ !**

ஒவ்வொரு நாளும் அநேக விதமான ஆசைகளுடன் அநேக ஆத்மாக்கள் முன் வருவார்கள். எப்பொழுது உங்களிடம் எல்லா பலனையும் அடைந்த அனுபவம் இருக்குமோ அப்பொழுது எல்லோருடைய இச்சைகளையும் பூர்த்தி செய்ய முடியும். ஒருவரிடம் சர்வ சக்திகளுடைய ஸ்டாக் இருந்து, கூடவே யோகி வாழ்க்கையின் அனுபவமும் இருந்தால், அவர் அனைவரையும் திருப்திபடுத்தி வெற்றி மூர்த்தி ஆக முடியும்.

## அன்பில் மூழ்கிடும் ஸ்திதி மூலம் இயல்பான யோகி பவ !

எவர் ஒரே பாபாவின் அன்பில் சதா மூழ்கி இருக்கின்றாரோ அவருக்கு நினைவு செய்ய முயற்சி தேவைப்படாது. அவர் இயல்பான யோகியாகி விடுகின்றார். அவருக்கு பாபா, சேவை தவிர வேறு எதுவும் தென்படாது. புத்திக்கு ஒரே ஒரு இடம் (குறி) கிடைத்து விட்டால் புத்தி அலையாது. அவர் சுலபமாக மாயாவை வென்றவர் ஆகின்றார்.

## பாபாவை காட்சி கொடுக்க அன்பு மற்றும் பாக்யத்தில் ஆழ்ந்திரு !

உலக வாழ்க்கையில் கூட ஒருவருக்கு ஒருவரிடம் ஆழ்ந்த அன்பு இருந்தால் அந்த ஆழ்ந்த அன்பு அவருடைய முகத்தில், கண்ணில், சொல்லின் மூலம் இவருக்கு அவரிடத்தில் அன்பு உள்ளது, அவருக்கு விருப்பமானவர் என்பது புரியும். அதுபோல, குழந்தைகளாகிய நீங்களும் பாபா மீதும், அவர் தரும் பாக்யத்தின் மீதும் சதா அன்பு கொண்டு இருங்கள். உங்களுடைய பேச்சு, தோற்றம் மூலம் பாபாவின் அன்புக்காட்சி கிடைக்கும். பேச்சில் சத்யம், சொரூபத்தில் பணிவு இருக்கட்டும். இதே விதியுடன் நீங்கள் பாபாவைக் காட்சி கொடுக்க முடியும்.

## ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேறிடும் ஞானாயுதம் பெற்ற மஹாவீர் பவ !

மஹாவீரரிடம் சதா ஞானம் என்னும் ஆயுதத்தைக் காட்டுகிறார்கள். மாயாவை வெல்லவும் அதாவது ஆயுதங்களை தக்க சமயத்தில் பயன்படுத்தி ஒரு செகண்டில் வெற்றி அடைவாய். மஹாவீரர் என்றால் ஒவ்வொரு செகண்டிலும் கவனம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேர்வு பெறுகிறவர்தான் முதல் நிலையில் தேர்வு ஆக முடியும். எனவே சதா ஞானம் என்னும் ஆயுதம் மூலம் ஆயுதபாணி ஆக இருங்கள்.

**சதா தன் மனதில் தன் பாக்யத்தின் கீதத்தைப் பாடும் சுக சொரூப ஆத்மா பவ !**

பாப்தாதா மூலம் சங்கம யுகத்தில் எல்லா குழந்தைகளுக்கும் அழியாத உயர்ந்த பாக்யம் கிடைக்கிறது. வீட்டில் இருந்தபடியே எனக்கு பகவான் கிடைத்து விட்டார் என்ற கீதத்தை மனதில் இசைத்துக் கொண்டிரு; சுக சொரூப நிலையின் அனுபவம் கிடைக்கும். துக்கத்தின் வாசல் மூடி விடும். சொர்க்கம் அல்லது சுகம் என்ற வாசல் திறந்து விடும். ஒருபோதும் குழப்பத்தில் வர முடியாது.

**சுயநிலை என்ற ஆசனத்தின் மூலம் சூழ்நிலையை (பரிஸ்திதி) வெல்வாய் !**

எந்த சூழ்நிலையும் இயற்கை மூலம் வருவதால் அது படைப்பு. சுயநிலையில் இருப்பவர் படைப்பவர், அதாவது மாஸ்டர் சர்வ சக்திவான். படைப்பின் முன் தோற்பதில்லை; அது நடக்காது ஏனென்றால் ஆசனத்தில் அமர்ந்து இருப்பவரிடம் சக்தி இருக்கிறது. ஆகவே சதா சுயநிலை என்ற ஆசனத்தில் பொருந்தி இருந்தால், ஒவ்வொரு சூழ்நிலையிலும் வெற்றி அடைய வரதானம் கிடைக்கிறது.

## ஞான ரத்னங்களால் விளையாடக் கூடிய மறுபிறவி எடுத்த உயர்ந்த பிராமண ஆத்மா பவ !

பிராமணர் என்றால் மறுபிறவி எடுத்தவர். முன் பிறவியான சூத்திரப் பிறவியை மறந்தவர். பிராமணர் ஒரு போதும் தேக அபிமானம் என்ற சேற்றில் விளையாடுவதில்லை. அவர் சதா பாபா நினைவு என்னும் மடியில் இருப்பவர். மண்ணில் இறங்குவதில்லை. மண்ணில் விளையாடுவோர் ராஜ குடும்ப வகையைச் சேர்ந்தவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆகவே உயர்ந்த பிராமண பிறவி என்ற நினைவுடன் ராஜ லட்சணம் உள்ள தந்தையின் குழந்தையாக ராஜ லட்சணத்துடன் இரு. அதாவது சதா ஞான ரத்னங்களுடன் விளையாடு.

**சட்டம், அன்பு என்ற இரண்டின் சமநிலை மூலம் சதா உலக மங்களம் புரியும் இரக்கமுள்ள மனம் கொள்ளும் ஆத்மா பவ !**

ஒருவர் எப்பேற்பட்ட அவகுணம், கடின சம்ஸ்காரம், மந்த புத்தி, திட்டும் பழக்கம் கொண்டவராக இருப்பினும் இரக்கமுள்ள வரம் தரும் மனமுள்ள எல்லையற்ற வள்ளல், உலக நன்மை விருப்பம் கொண்ட ஆத்மா அவர் மீதும் சட்டம், அன்பு கொண்டு பழகுவார். அவரது கெட்ட தன்மையை, பலவீனத்தை முதலில் மன்னிப்பார். அவருக்கு தனது சிறப்பைப் புரிய வைப்பார்; பிறகு போதனையும் செய்வார்.

## அனைவருக்கும் உல்லாசம், ஊக்கம் கொடுக்கும் சுப சிந்தனையாளர் பவ !

ஒருவர் எவ்வளவு பலவீன ஆத்மாவாக இருப்பினும் சுப சிந்தனை கொண்ட ஆத்மாவாகிய உங்களுடைய வாயில் இருந்து சுபமான சொற்கள் மட்டும் வெளிப்படட்டும். மனதை முறிக்கும் சொற்கள் வெளிப்படலாகாது. எவருக்கேனும் போதனை தரும் முன்னர், அவரை சக்திசாலியாக்கிய பிறகு போதனை கொடுங்கள். முதலில் (மனம் என்னும்) பூமியில் துணிவு உற்சாகம் என்ற ஏரால் உழவு செய்யவும்; பிறகு விதை விதைக்கவும். பிறகு அந்த விதையால் நல்ல பயன் கண்டிப்பாகக் கிடைக்கும்.

**பாபாவின் அருகாமையை உணரும் தாமரை மலர் போன்ற அன்புடன்-விலகி இருக்கும் ஆத்மா பவ !**

யார் சதா தாமரை மலர் போல சதா அன்பாகவும் விலகியும் வாழ்கின்றாரோ அவர்தான் பாபாவுக்கு அருகில் இருக்கிறார். இப்படி சமீபத்தின் அனுபவத்தை அடையும் குழந்தை சதா ஒவ்வொரு சூழ்நிலையிலும் பாப்தாதாவின் குடை நிழல் என்ற அனுபவத்தைப் பெறுகின்றார். பாபா சேவாதாரியாகி சதா குடை நிழல் வடிவத்தில் குழந்தைகளுக்குச் சேவை செய்கின்றார். தேகம், தேக உறவுள்ள உலகத்தில் இருந்து விலகி, பாபாவுக்கு அன்பராகி, நினைவு செய்தால், ஒரு செகண்டில் பாபா சேவைக்காக ஆஜர் ஆகி விடுகின்றார்.

## மனன சக்தி (சிந்திப்பது) என்ற டானிக் மூலம் சதா சக்திசாலி பவ !

மனன சக்தி திவ்ய புத்தியின் டானிக். இந்த டானிக்கை சதா சாப்பிடு, புத்தி சக்திசாலி ஆகி விடும். தினம் தனது ஒரு பட்டத்தையாவது நினை, பின் சிந்தி. அதனால் சதா சக்திசாலி ஆவாய் என்னும் வரம் பெறுவாய். சக்திசாலி புத்தியுடன் மாயா ஒருபோதும் போர் செய்ய முடியாது. அவர் அடிமை ஆவதில்லை.

**உலகம் முழுவதுக்கும் சுகம் என்னும் கதிர்களைப் பரப்பும் மாஸ்டர் ஞான சூரியன் பவ !**

தந்தை ஞானக்கடல், சுகக்கடல்; அப்படி நீயும் ஞான சொரூபம் சுக சொரூபத்தை அனுபவம் செய். சுக சொரூபம் ஆகும் போது உன் ஆத்மா மூலம் சுகத்தின் கதிர்கள் உலகின் எல்லா பக்கங்களுக்கும் பரவும். சூரியனுடைய கதிர்கள் உலகின் எல்லா பகுதிக்கும் செல்வதை போல மாஸ்டர் ஞான சூரிய குழந்தையின் ஞானம், சுகம், ஆனந்தம் இவற்றின் கதிர்கள் சர்வ ஆத்மாக்களுக்கும் சென்று அடையும்.

**மாயாவின் முத்திரை மற்றும் கவர்ச்சியில் இருந்து விலகி இருந்த ஆத்ம அபிமானி பவ !**

ஆத்ம அபிமானி ஸ்திதி ஒட்டாத ஸ்திதி. அதில் மாயாவின் அச்சு, கவர்ச்சி வர முடியாது. ஒட்டாத என்றால் விலகிய நிலை. இந்த நிலையில் இருக்கும் போது மாயா எந்த விதமான யுத்தமும் செய்ய முடியாது. ஏனென்றால் ஆத்ம அபிமானி நிலையில் இருக்கும் பயிற்சி, கர்மம் செய்யும் போதும் சாட்சி மற்றும் துணையின் அனுபவத்தைத் தருகின்றது. இப்படிப்பட்ட வரதானி ஆத்மா எல்லாம் பார்த்த போதும், தொடர்பில் வரும் போதும் சதா விலகியும் அன்புடனும் இருக்கிறது.

## எண்ண சக்தி மூலம் ஒவ்வொரு செயலிலும் வெற்றி அடையும் ஸித்தி சொரூப பவ !

ஒரு ஆத்மாவை அல்லது ஸ்தூல காரியங்களை அல்லது தொடர்பில் சாதனங்கள் மூலம் மாற்றும் பொழுது சம்பூர்ண வெற்றி கிடைக்காவிடில் நம்பிக்கை என்ற எண்ணசக்தி மூலம் அவைகளை மாற்றும் காரியத்தில் முழு வெற்றி அடைய முடியும். ஏனென்றால் வாய் மூலம் வரும் ஒலிசக்தி மூலம் வெளிப்படும் வேகத்தை விட அதிக வேகத்தில் எண்ணசக்தி வேலை செய்கிறது. எண்ணசக்தியை சுத்தமாக மட்டும் வைத்து இருந்தால் போதும், கொஞ்சம்கூட வீண் தன்மை இருக்கக்கூடாது, அப்போது ஸித்தி சொரூபம் ஆக முடியும்.

## தேக சுமையை அர்ப்பணம் செய்யும் மற்றும் செய்விக்கும் திவ்ய கண்ணாடி ரூப பவ !

இப்போது உங்களுடைய ஆன்மீகக் கண்ணை அல்லது ஆன்மீக உருவத்தை கண்ணாடி போன்று வைக்கவும். அப்பொழுது அந்த கண்ணாடியில் ஒவ்வொரு ஆத்மாவும் உழைப்பு ஏதுமின்றி தன் ஆத்மீக சொரூபத்தைப் பார்த்து 'ஆஹா பிரபுவே' என்ற பாட்டைப் பாடி தன் தேகச் சுமையை அர்ப்பணம் செய்து விடுவார். ஆஹா, உங்கள் பாக்யம், ஆஹா என் பாக்யம் என வியப்படைவார். இப்பாக்யத்தின் அனுபவம் மூலம் தன் தேகம், தேக உறவுகளின் நினைவுகளைத் தியாகம் செய்வது அவருக்கு சுலபமாகி விடும். ஏனென்றால் பாக்யத்தின் முன்னால் தியாகம் செய்வது எளிது ஆகிறது.

## தியாகம் தபஸ்யா மூலம் சதா தடைகளை வென்றிடும் ஆத்மா பவ !

சேவாதாரி என்றால் சதா தியாகம், தபஸ்யா மூர்த்தி. எங்கே தியாகமும் தபஸ்யாவும் இருக்கிறதோ, அங்கே பாக்யம் அவர் முன் அடிமையைப் போல வந்து கொண்டிருக்கிறது. எங்கே தியாகம் தபஸ்யாவின் சூழ்நிலை இருக்குமோ, அங்கே இருப்போர் சுலபமாகத் தடையைத் தாண்ட முடிகிறது. ஏனென்றால் பிராமணர் ஆன பிறகு மிகப் பெரிய தடை – பெயர், புகழ், ஆசனத்தை அடைவது என்ற சூட்சும ஆசை. தன்னை சேவாதாரி என்று நினைத்தால் தடைகள் என்னும் இந்த வேர்கள் சுலபமாக நீங்கி விடுகிறது.

## எல்லோருக்கும் ஆசீர்வாதம் வழங்கிடும் உயர்ந்த சக்திசாலி ஆத்மா பவ !

சாகார் பிரம்மாபாபாவின் கடைசி கர்மாதீத் நிலையில் பார்த்த சிறப்பு இது – சம நிலையில் இருந்து அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்குதல். தந்தையைப் பின்பற்றவும். உயர்ந்த ஆத்மாக்களின் பங்கு அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்குவது. கண்ணால் கொடுங்கள், நெற்றிமணியால் கொடுங்கள். இதுவே சுலபமான சக்திசாலியான சேவை. இதில் சமயமும் கம்மி, உழைப்பும் கம்மி. சக்திசாலியானால் போதும், ஆத்மீக நினைவில் இருந்து அனைவருக்கும் ஆசீர்வாதம் கொடுங்கள்.

**புறப் பார்வையால் விளையும் கணக்கை நீக்கிடும் பந்தனம் நீங்கிய யோகமுள்ள ஆத்மா ஆகவும் !**

பாப்தாதா தற்சமயம் குழந்தைகளுடைய பழைய புறப் பார்வையால் விளைந்த கணக்கு வழக்குகளை சுத்தம் செய்திட விரும்பிகின்றார்கள். பழைய கணக்கு எண்ணம், சம்ஸ்காரத்தில் கொஞ்சம் கூட இருக்கலாகாது. இதற்காக சதா விடுபட்ட, யோக நிலை என்னும் வரம் பெறு; உள்நோக்கி இரு. சேவை செய், ஆனால் புறத்தைப் பாராமல் அகத்தைப் பார்த்து சேவை செய். சேவை மூலம் புகழ் கிடைத்திருக்கிறது. இனி அகம் நோக்கிய முகத்தினால் பாபாவின் பெயரை உயர்த்தவும்.

## உற்சாகம் மூலம் உற்சவம் கொண்டாடும் சுமங்கலி அல்லது பாக்யசாலியின் அடையாளமான திலகத்தை அணிந்திரு !

பிராமண வாழ்வில் எந்தக் குழந்தைக்கு சதா பாபாவிடம் சந்திப்பு மூலமும், பறக்கும் கலை மூலமும், ஒவ்வொரு விதமான சேவை மூலமும் சதா உற்சாகம், ஊக்கம் இருக்கிறதோ, அவருக்கு எதிர் காலத்தில் ஒவ்வொரு நாளிலும் உற்சவம் கொண்டாடப்படுகின்றது. சங்கமயுகத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவர்களுக்கு எல்லாம் தேவரின் சுமங்கலி மேலும் ஈஸ்வரிய குழந்தை என்னும் பாக்யத்தின் திலகம் கிடைத்திருக்கிறது. யார் இங்கே (இப்பொழுது) சதா திலகம் அணிந்து இருக்கின்றனரோ அவருக்கு எதிர் காலத்தில் ஒவ்வொரு பிறவியிலும் ராஜ திலகம் பெறும் விழா நடைபெறும்.

## புத்தி ஒரே ரசனையில் இருக்கும் அனுபவத்தைப் பெறும் உண்மையான டிரஸ்டி ஆகவும் !

டிரஸ்டி என்ற நினைவு மூலம் ஒரே ரசனையை அனுபவம் செய். ஏனென்றால் குடும்பஸ்தன் என்ற நினைவு இருந்தால் அநேக ரசனைகள் வருகின்றன; என்னுடையது என்னுடையது என்ற நினைவும் அதிகம். குடும்பஸ்தன் என்றால் அநேக ரசனைகளில் அலைவது. டிரஸ்டி என்றால் ஒரு ரசனை மட்டும். இப்படி டிரஸ்டியாயிரு என்ற வரத்தைப் பெற்றவர் என்னுடையது என்னும் மோஹத்தை விட்டு, சதா லேசான தன்மையுடன் ஏறும் கலையை அனுபவம் செய்கிறார். அவரது மனோ நிலை ஒரே ரசனையுடன், சுக சொரூபத்தில் இருக்கிறது.

**நினைவு என்ற ஆர்வத்தால் பிராமண நிலையில் இருந்து பரிஸ்தா ஸ்வரூபம் ஆகவும் !**

உதாரணமாக எந்தப் பொருளையும் நெருப்பில் வைத்தால், அதன் பெயர், உருவம், குணம் எல்லாம் மாறி விடுகிறது. பச்சை மண் கூட சூளையில் வைத்த பின் செங்கல்லாக மாறி விடுகிறது. அதுபோல, பாபா நினைவு என்ற ஆர்வம்கூட நெருப்பு வடிவம் கொண்டு, மனிதனை மாற்றி பிராமணரை தேவதையாக்கி விடுகிறது. அதாவது என்னுடையது என்பது மறைந்து விடுகிறது. எனவே இப்படிப்பட்ட நினைவு தான் ஜுவாலா ரூபம் என்று கூறப்படுகிறது.

**எல்லா சூழ்நிலைகளையும் சுலபமாக தாண்டிடும், பரிஸ்தாவில் இருந்து பறக்கும் பறவை ஆகவும் !**

லௌகீக, அலௌகீக சம்பந்தங்களின் வழியாக, தனது பிறருடைய சம்ஸ்காரங்களின் வழியாக, ஏதேனும் சோதனை வந்தால், அதை கடக்க எளிய வழி என்னவென்றால் பரிஸ்தா ஆவது; அதாவது பறக்கும் பறவை ஆவது. இதன் மூலம் சூழ்நிலை கீழே வந்து விடும், நீங்கள் மேலே செல்வீர்கள். தனது அனாதியான சம்ஸ்காரத்தை நினைவில் கொண்டு வாருங்கள். போதும் 'என்னைப் போல் நீ' (தத்தத்வம்) என்னும் வரம் பெறு. இது சுலபமான முயற்சி.

## சதா உயர்ந்த அதிர்ஷ்டசாலி ஆவதற்கு சதா உயர்ந்த செயலைப் புரிவாய் !

உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்க எளிய சாதனம் சிரேஷ்ட செயலாகும். எந்தக் குழந்தை சதா உயர்ந்த கர்மத்தை செய்கிறாரோ, அவருக்கு பத்மாபதம் பாக்யசாலி என்னும் அதிர்ஷ்டம் கிடைக்கிறது. ஆனால் சிரேஷ்ட செயலின் ஆதாரம் சிரேஷ்ட நினைவு. யார் உயர்ந்தவரில் எல்லாம் உயர்ந்த பாபாவின் நினைவில் இருக்கின்றாரோ அவரிடம் இருந்து எப்போதுமே சிரேஷ்ட செயல் வெளிப்படும். மேலும் சிரேஷ்ட செயல் மூலம் அநேகப் பிறவிகளுக்கு அதிர்ஷ்டம் என்னும் ரேகையை நீண்டதாக்க முடியும்.

**சதா சக்திசாலியான உணவை செறிக்கும் மாஸ்டர் சர்வ சக்திவான் பவ !**

தினசரி கிடைக்கும் முரளி புதியது, சக்திசாலியானது. எந்த சக்தி வேண்டுமோ, அவை எல்லாம் முழுமையாக இந்த தினசரி உணவில் கிடைத்து விடுகிறது. யார் தினமும் இந்த சக்திசாலியான உணவை எடுத்து (கேட்டு) மனன சக்தி மூலம் செறிக்கிறாரோ அவர் ஒருபோதும் பலவீனம் அடைவதில்லை. இந்த உணவுக்கு விரதம் அனுசரிக்க தேவை இல்லை. தினம் இந்த உணவை உண், செறி, பிறகு மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விடுவாய்.

## எல்லா பிரச்சினைகளையும் தீர்க்கும் தயாளம், இரக்க மனம் கொள்ளுங்கள் !

உங்களுடைய அனாதி ஆதி அவிநாசியான சம்ஸ்காரம் வள்ளல் தன்மை. யார் தயாளனோ, இரக்கம் உள்ளவனோ அவரே வள்ளலாக முடியும். யாரிடம் தயை பாவனை உள்ளதோ அவர் சதா நிராகாரி, நிர்விகாரி, நிரஹங்காரியாக முடிகிறது. இப்படி தயவால் நிரம்பிய ஆத்மா தனது தயா பாவனையில் சிறிது வழங்கி எந்த விதமான பிரச்சினையையும் தீர்த்துக் கொள்ள முடியும். ஏனெனில் தயை அல்லது கிருபை என்ற பாவனை எதிர்ப்போரையும் இணங்க வைத்து விடும்.

**ஜீவன் முக்தி நிலையை அனுபவம் செய்யக்கூடிய சதா சுதந்திரமான, விடுதலை பெற்ற நிலையில் இருப்பாய் !**

யார் பறக்கும் பறவையோ, அவருக்கு கீழே உள்ள எந்த ஒரு பொருளும் அவரைக் கவர இயலாது. ஆனால் கூண்டு எவ்வளவு அழகாக இருந்தாலும் அது சிறை தான். இந்த அலௌகீக சம்பந்தம் கூட தங்கக் கூண்டு தான். இதில் மாட்டிக் கொள்ளக் கூடாது. சதா சுதந்திரமாய் இருக்கும் விடுதலை பெற்ற வரம் பெற்றிடு. அப்போதுதான் ஜீவன்முக்தி என்ற ஸ்திதியின் அனுபவம் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

## ஆன்மீகப் பயிற்சி மூலம் அன்பானவரை (பாபா) போல இரட்டை லைட் பெறுவாய் !

ஸ்தூலத்தில் கூட லேசாவதற்கு தேகப் பயிற்சி ஒரு சாதனம் என்று கூறுகின்றனர். இங்கும் ஆன்மீகப் பயிற்சி மூலம் இரட்டை லைட் அடைவாய். திடீரென்று நிராகாரி, திடீரென்று உலக சேவாதாரி. ஒரு செகண்டில் சொரூபத்தை மாற்றுவது ஆன்மீகப் பயிற்சி. இதன் மூலம் வீணானவை என்ற சுமை தீர்ந்து விடும். மேலும் அன்பானவரை போல இரட்டை லைட் வடிவமாகி சம நிலை மற்றும் சமீப நிலையின் அனுபவத்தைப் பெறுவீர்கள்.

## இயற்கையை அடிமைப்படுத்தும் இயற்கையை வென்ற ஆத்மா பவ !

இயற்கை அதாவது நேச்சரின் சுகத்தை எடுப்பதற்கு, உங்களுடைய ஒரிஜினல் நேச்சர் எதுவோ அதை தாரணை செய்க. நேச்சுரலான நேச்சர் எது என்றால் அனாதியான சம்ஸ்காரம். அதை சொரூபத்தில் கொண்டு வரும் பொழுது, உழைப்பு எதுவும் இன்றி, நேச்சுரலான நேச்சர் மூலம் எல்லா பாக்யங்களையும் நேச்சுரலாகக் கிடைக்கப் பெறலாம். இந்த இயற்கை அடிமையாகி விடும். (அதாவது இங்கே ஆத்மாவின் அனாதி ஆதி நிலையை தாரணை செய்தால் இயற்கையிலிருந்து அங்கே எல்லா பாக்யங்களையும் சுலபமாகப் பெறலாம்). சூரியனுடைய கதிர்கள் கூட வெவ்வேறு விதமான அதிசயங்களைக் காட்டும், செய்யும். அங்கே கேஸ், நிலக்கரி, விறகு போன்றவைகளை எரிக்க அவசியம் இராது. இந்த உழைப்பில் இருந்து விடுதலை பெறுவீர்கள். ஆனால் இப்போது இயற்கையை வெல்ல வேண்டும்.

## அனைவரையும் முன்னேற்றும் பாவனையின் மூலம் பிரம்மாபாபா சமமாக ஆவாய் !

பிரம்மாபாபா சுப சிந்தனை என்ற பாவனையுடன் முதலில் 'நீங்கள்' என்றார். குழந்தைகளை ஒவ்வொரு விஷயத்திலும் தன்னைவிட முன்னால் வைத்தார். இப்படி தந்தையைப் பின்பற்று. நான்தான் முன்னேறுவேன்-இல்லை. மற்றவரை முன்னேற்றி நீயும் முன்னேறு. இந்த பாவனை ஒவ்வொருவர் இடமும் வந்து விட்டால் பிரம்மாபாபாவின் செராக்ஸ் காப்பி ஆகி விடுவாய். பிறகு உங்களுடைய ஒவ்வொரு கர்மமும், ஸ்திதியும், பிரம்மாபாபாவை காட்சி கொடுக்கும்.

## தபஸ்யா மற்றும் சேவை என்னும் ஆசனத்தில் அமர்ந்து ராஜ சிம்மாசன அதிகாரி ஆவாய் !

யார் இங்கு சதா தபஸ்யா, சேவை என்ற ஆசனத்தின் மீது அமர்ந்து இருக்கின்றனரோ, அவரே சதா சிம்மாசன அதிகாரி. இங்கு சதா சேவையில் கூட இருப்பார். யார் ஒவ்வொரு செயலிலும் பாப்தாதாவுக்கு துணையாக இருக்கிறாரோ, அங்கே குழந்தைப் பருவம் முதல், அரசாட்சியில் ஒவ்வொரு செயலிலும் துணையாக இருப்பார். இங்கே யார் சதா சமீபத்தில் சதா துணையில் ஒத்துழைப்பு தந்து, தபஸ்யா, சேவை என்ற ஆசனத்தில் இருப்பாரோ அவர் அங்கேயும் சதா கூடவே இருக்கிறார்.

## ஒரு செகண்டில் சம்ஸ்காரத்தை அழித்துவிடும் அல்லது இணைத்துவிடும் எவர்ரெடி ஆத்மா பவ !

ஸ்தூல சேவையில் எவர்ரெடியாக இருப்பதைப் போல மனதிலும் என்ன எண்ணத்தை தாரணை செய்ய விருப்பமோ அதில் சதா எவரெடியாகு. எதை எண்ணுகிறாயோ அதை செய், அதே நேரத்தில் செய். சம்ஸ்கார மாற்றத்தில், ஆன்மீக உறவு, ஆன்மீக தொடர்பு இவைகளை நிறைவேற்றுவதிலும் எவர்ரெடி. பாபாவின் சம்ஸ்காரத்துடன் இணைப்பதிலும், நமக்குள் உயர்ந்த சம்ஸ்காரங்களுடன் ஒத்துப் போய் நாட்டியம் (ராஸ்) ஆடுவதிலும் எவர்ரெடி ஆகவும்.

## வாயுமண்டலம், சூழ்நிலை ஆகியவற்றை மாற்றும் மாஸ்டர் ஞான சூரியன் பவ !

மாஸ்டர் ஞான சூரியன் ஆகி வாயுமண்டலம், சூழ்நிலை ஆகியவற்றை மாற்றி தடையை விநாசம் செய்பவர் ஆகவும். எப்போது ஞானம் நிரம்பி புரிந்து கொண்டு செயல்படுவீரோ அப்போது எந்த சூழ்நிலையிலும் தடைகளை விநாசம் செய்ய முடியும். யாரேனும் தடை சொரூபம் என்றால் நீங்கள் தடைகளை அழிப்பவர் ஆகவும். இந்த மாதிரி சூழ்நிலை இருந்ததால் இந்த மாதிரி செய்ய நேர்ந்தது – இந்த மதிரி ஒரு சொல் தடைகளைத் தாண்டும் மாஸ்டர் ஞான சூரியன் குழந்தைகளிடம் இருந்து வரலாகாது.

## சேவை மூலம் இரட்டை வருமானம் செய்யும் தடையற்ற இடைவிடாத சேவாதாரி பவ !

யார் மனம், செயல் இரண்டின் மூலம் சேவை செய்கின்றாரோ அவர் இரட்டை வருமானம் சேர்க்கின்றார். ஆனால் சேவையின் இடையில் வாயுமண்டலத்தின், சுகவாசத்தின், சோம்பலின் இன்ன பிற தடைகள் வரக்கூடாது. சதா தடையற்ற சேவை நடைபெற வேண்டும். இதில்தான் பெருமை உள்ளது. இப்படிப்பட்ட இடைவிடாத சேவாதாரி ஒருபோதும் மற்றவருடைய வீணான வளையத்துக்குள் வருவது இல்லை. ஆகவே அவருடைய சேவை பயன் தருகின்றது. செழிப்படைய லாட்டரி கிடைத்து விடுகிறது.

**இந்த அலௌகீக வாழ்வில் சதா அலௌகீக செயல் புரியும் உயர்ந்த சற்குணவான் ஆவாய் !**

பிரம்மாபாபாவின் ஒவ்வொரு செயலையும் சற்குணம் வாய்ந்தது என்று வருணனை செய்கின்றாய். ஏனென்றால் அவருடைய ஒவ்வொரு செயலும் உயர்ந்தது. அதுபோல நீங்களும் அலௌகீக தந்தையின் அலௌகீக வாழ்வு வாழ்பவர்கள். ஆகவே அலௌகீக தந்தை, அலௌகீக குழந்தை, அலௌகீக கர்மம். அலௌகீக கர்மத்தைத்தான் சற்குணம் என்கிறோம். எனவே அமிர்தவேளை முதல் இரவு வரை ஒவ்வொரு கர்மமும் அலௌகீகமாக இருக்கட்டும், சாதாரணமாக இருக்கலாகாது. அப்பொழுது உயர்ந்த சற்குணவான் ஆகி விடுவாய்.

## சேவையில் இறைவனுடைய மந்திர சக்தியை வெளிப்படுத்தும் இறைத் தொண்டர் ஆவாய் !

சேவை களத்தில் வெவ்வேறு விதமாக தடைகள் தனக்கும் சேவைக்கும் வரும் போது தன்னை சேவாதாரி மட்டுமல்ல, ஈஸ்வரிய சேவாதாரி இறைத் தொண்டர் நான் என்ற வரதானத்தை நினைவில் வைத்து சேவை செய். அப்பொழுது சேவையில் தன்னைத்தானே ஈஸ்வரிய மந்திரம் நிரம்பி விடும். பகவானை பணியில் இருந்து பிரிக்காமல் இருந்தால் சுலபமாக வெற்றி மூர்த்தி ஆகி விடுவாய்.

## செய்பவர்-செய்விப்பவர் என்ற எண்ணம் மூலம் தடைகளின் விதையை நீக்கிடும் உறுதியான ஆத்மா பவ !

சேவை களத்தில் தடைகள் வர இரண்டு வாயில்கள் உள்ளன. <1> அபிமானம், <2> அவமானம். ‘நான் செய்தேன்’ என்பது அபிமானம். எனக்கு சொல்லவில்லையே, என்னை ஏன் முன்னால் வைக்கவில்லை என்பது அவமான எண்ணம். இந்த இரு விஷயங்களே தடைகள் என்ற ரூபத்தில் வருகின்றன. ஆனால் செய்வது-செய்விப்பது பாபா. நான் செய்தேன் இப்படியில்லை. பகவான் என் மூலம் செய்வித்தார். இந்த நினைவு என்ற வரதானம் ஒருவரை சக்திசாலி ஆக்குகிறது. தடைகளின் விதை ஒழிந்து போகிறது.

### போர் சம்ஸ்காரத்தை விடுத்து, ஆட்சி செய்யும் சம்ஸ்காரத்தை தாரணை செய்யும் உயர்ந்த பாக்யசாலி பவ !

இப்பொழுது போர் செய்யும் சம்ஸ்காரத்தை நீக்கி மன ஆசனத்தில் அமரும் அதிர்ஷ்டசாலி ஆவாய். மேலும் ஆட்சி செய்யும் சம்ஸ்காரத்தை தாரணை செய். அதனால் அதிக காலத்திற்கு ஆட்சி செய்யும் பாக்யம் கிடைக்கும். கடைசி வரை போர் செய்து கொண்டிருந்தால், சந்திர வம்சத்தில் வர நேரிடும். அதிக காலத்திற்கு ஆட்சி செய்யும் பாக்யம் தேவை என்றால் சங்கம யுகத்தின் பாக்யத்தை அனுபவம் செய். அதாவது அவ்வப்போது முயற்சியாளன், அவ்வப்போது பாக்யவான். உழைப்பை அன்பாக மாற்றி பசுமையான (புதிய) பழங்களை உண்பாய்.

## ஆன்மீக போதையில் இருக்கக் கூடிய பாக்யசாலி ஸ்வரூப் பவ !

ஆன்மீக போதை என்றால் நடக்கும்போதும், அமரும்போதும் ஆத்மாவைப் பார்ப்பது. ஆத்ம அபிமானி ஆவது. இந்த ஆன்மீகப் போதை மூலம் சர்வ பாக்யமும் அனுபவம் ஆகிறது. ஸ்தூலத்தில் குடி போதையில் உள்ளவன் தன்னை பாக்யவான் என நினைப்பதைப் போல, இந்த ஆன்மீக போதையில் இருப்பவர் எல்லா பாக்யத்தையும் பெற்றவர் ஆகின்றார். இந்த போதையில் இருந்தால் எல்லா வித துக்கமும் அசாந்தியும் விடை பெற்றுக் கொள்ளும்.

## ஆல்ரவுண்ட் பங்கு ஆற்றும் சதா பறக்கும் பறவை பவ !

பாபா ஆல்ரவுண்ட் நடிப்பு செய்பவர், துணையாக தந்தையாக பொறுப்பை நிறைவேற்றுபவர். அப்படி பறக்கும் கலை என்ற வரதானங்களைப் பெற்ற குழந்தை எந்த நேரத்தில் எந்த சேவை அவசியம் ஆகின்றதோ அதில் முழுமையான நடிப்பை நடிக்கின்றார். எங்கு சேவை தேவையோ அங்கு தடையின்றி அடைந்து விடுகின்றார். ஒவ்வொரு விதமான சேவையில் வெற்றி மூர்த்தியாகி விடுவார். அவருக்குத்தான் ஆல்ரவுண்ட் பறக்கும் பறவை என்று பெயர்.

**சிறப்பு என்ற விதை மூலம் திருப்தி என்ற பழத்தை உண்ணும் சதா திருப்தி உள்ள ஆத்மா பவ !**

சங்கம யுகம் சிறப்பான யுகம். இதில் நடிக்கும் ஆத்மாக்கள் சிறப்புகள் நிரம்பியவர்கள். ஆனால் அந்த சிறப்புகளை சேவையில் ஈடுபடுத்தினால் அந்த சிறப்புகள் விருத்தி அடையும். சிறப்பு என்ற விதையின் சிரேஷ்டமான பழம் திருப்தி. திருப்தியாகி மற்றவரையும் திருப்தி படுத்தும் கலை 'திருப்தியாய் இரு' என்ற வரத்தைப் பெறும் வழியாகும். எனவே சிறப்புகள் என்ற விதையில் சர்வ சக்திகள் என்னும் நீரை வார்த்தால் அந்த விதை பயன் தரும்.

**சிறப்புகளை பார்ப்பதன் மூலம் உலக மாற்றம் என்ற காரியத்தில் வெற்றி மூர்த்தி பவ !**

பிராமணக் குடும்பம் சிறந்த ஆத்மாக்களின் குடும்பம்; ஆகவே ஒவ்வொரு ஆத்மாவின் சிறப்பைப் பார்க்கும் கண்ணாடியை அணிவாய். அதாவது சிறப்பைப் பார்க்கும் பார்வையை தாரணை செய், மற்றவை எதுவும் பார்வையில் பார்க்கக் கூடாது. அனைவருடைய விசேஷங்களை மட்டும் பார். அவைகளை செயலில் கொண்டு வா. சிறந்த யுகத்தின் சிறந்த ஆத்மா என்று புரிந்து சிறந்த எண்ணம், சிறந்த சொல், சிறந்த செயலைச் செய். அதனால் சிறந்த காலமும் வரும், உலக மாற்றம் என்ற வேலையில் வெற்றி மூர்த்தியும் ஆவாய்.

**சாந்தி என்ற சக்தியை மஹாதானமாக வழங்கிடும் சாந்தி தேவன் ஆவாய் !**

உலகில் மிகவும் பிரியமான சக்திசாலியான பொருள் சாந்தி. குழந்தைகள் உடைய சுய தர்மம் சாந்தி. எனவே எப்பேற்பட்ட அசாந்தியான ஆத்மாவுக்கும் சாந்தி சொரூபத்தில் இருந்து அசாந்தி நீங்கும் படியான சாந்தியின் கிரணங்களை வழங்கிடு. எங்கு சாந்தி இருக்குமோ அங்கே எல்லா விஷயங்களும் தானே நடக்கும். பாபாவுக்கு புகழ் 'சாந்தி தேவா' என்பது. அதுபோல குழந்தைகளும் சாந்தி தேவா. ஆகவே சுயம் சாந்தியில் இருந்து அனைவருக்கும் சாந்தி கொடுப்பது அனைத்திலும் பெரிய தானம்.

## உலகிற்கு லைட் கொடுக்ககூடிய உண்மையான ஆன்மீக லைட்-ஹவுஸ் ஆவாய் !

லைட் ஹவுஸ் என்றால் ஒளியுள்ள வீடு என்று அர்த்தம். அதனுள் எந்த விதமான அஞ்ஞானம் என்ற இருள் வர முடியாது. உலகம் முழுதுக்கும் ஒளி கிடைத்துக் கொண்டே இருக்கும் அளவுக்கு அதில் ஒளி சேமிப்பாக இருத்தல் வேண்டும். லைட் ஹவுஸ் ஆகி உலகிற்கு ஒளி கொடுப்பதுதான் பிராமணர்கள் உடைய தொழில். உண்மையான ஆன்மீக சேவாதாரி, மஹாதானி என்பவர், லைட் ஹவுஸாக இருப்பார். எவ்வளவு மற்றவருக்கு வழங்கிடுவீரோ அவ்வளவு வளர்வீர்கள்.

## எண்ணுவது-செய்வது இரண்டையும் சமமாகக் கொண்ட தானி, மஹா புண்ணிய ஆத்மா ஆவாய் !

இப்போது எண்ணம்-செயல் இரண்டும் சமமாக இருக்க வேண்டும். அதாவது இவை இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நீக்கிவிடு. இது தான் ‘உடன் தானம் மஹா புண்ணியம்’ என்று கூறப்படுகிறது. எண்ணுவது மிகவும் அதிகம்; செய்வதை கொஞ்ச நேரம் கழித்து என்றால் அந்த இடை நேரத்தில் எண்ணத்தில் தீவிரம், உற்சாகம், உல்லாசம் முதலியவை சில சதவிகிதம் குறைந்து விடுகிறது. இதனால் உழைப்பு அதிகம் செய்ய தேவைப்படுகிறது. எனவே உடன் தானம் மஹா புண்ணியம் என்ற வரதானம் மூலம் இப்பொழுது முழுமை அடைவாய்.

## ஒவ்வொரு எண்ணம் ஒவ்வொரு செயல் மீதும் கவனம் செலுத்தும் ஹீரோ நடிகர் ஆவாய் !

என் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு செகண்டும் உலகிற்கு முன்னால் மேடை மீது பார்க்கப்படுவதாக சதா நினை. ஓய்வு எடுத்தாலும் மேடை மீது தூங்கும் பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறேன்; எப்படி தூங்குகிறேன் என்று அனைவரும் பார்க்கிறார்கள் என்று நினை. அமிர்தவேளை முதல் இரவு வரை தன்னை சேவை என்ற ஸ்டேஜில் இருப்பதாக நடந்தால் ஒவ்வொரு எண்ணம் மீதும் செயல் மீதும் இயல்பான கவனம் இருக்கும். அதன் மூலம் ஹீரோ நடிகர் ஆகி விடுவீர்.

## மாயாஜீத் ஆவதற்கான எளிய சாதனம் – சுய தர்சன சக்ரதாரி பவ !

பாபா சமமான சுயதர்சன சக்ரதாரி குழந்தைகள் ஒரு பொழுதும் சாதாரண கர்மங்களை செய்வதில்லை. எப்படி பாபாவின் ஒவ்வொரு கர்மமும் வரலாற்றின் ரூபத்தில் புகழப்படுகின்றதோ அப்படி அவர்களது ஒவ்வொரு கர்மமும் ஒழுக்கத்திற்கு சமமாய் இருக்கும். எனவே சுதர்சன சக்ரதாரி மாயாஜீத் ஆகின்றனர். எவர்கள் மாயாஜீத் ஆக இருக்கின்றனரோ அவர்களது ஒவ்வொரு கர்மத்திலும் வெற்றியே கிட்டும். இம்மாதிரி வெற்றியாளர்கள் ஒவ்வொரு அடியிலும் பத்மாபதம் பாக்யசாலி ஆகின்றனர்.

## இருளில் ஒளியை பிரகாசிக்கும் அகண்ட ஜோதிக்கு சமமாகி சதா ஜாகந்தி (விழித்த) ஜோதி பவ !

எப்படி பாபா சதா ஜாகந்தி ஜோதியோ, அகண்ட ஜோதியோ, அமர ஜோதியோ அப்படியே குழந்தைகளாகிய நீங்களும் சதா ஜாகந்தி ஜோதி ஆகுங்கள். எவ்வளவுதான் புயல் வீசினாலும் சதா ஏக்ரஸ், அகண்ட ஜோதிக்கு சமமாய் ஒளிர் விடும் தீபம். இப்படிப்பட்ட தீபங்களையே உலகினர் நமஸ்கரிக்கின்றனர். பாபாவும் இப்படிப்பட்ட தீபங்களுடன் கூடவே இருக்கின்றார். அவர்கள் இருட்டைக்கூட பிரகாசிக்கச் செய்பவராய் இருக்கின்றனர்.

**பிந்துவின் மகத்துவத்தை உணரக்கூடிய சகஜ யோகி பவ !**

பாப்தாதா பிந்துவின் கணக்கைப் பற்றியே விளக்குகிறார். நீங்கள் சுயம் பிந்து ரூபம் ஆகுங்கள். நினைவும் பிந்துவையே செய்யுங்கள். நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் அறிந்து நடந்தபின் பிந்து வைத்து விடு. ஒரு பிந்துவின் உருவத்தில் நீங்களும், பாபாவும், படைப்பும் வந்து விடுகிறது. அனைத்திலும் எளிமையான மாத்திரை பிந்து. விதையான பிந்துவில் மரமே அடங்கி உள்ளது. எனவே இந்த பிந்துவின் மகத்துவத்தை உணர்ந்து எளிய சகஜ யோகி ஆகுங்கள்.

**ருஹானி நஷாவில் இருக்கும் நமர்சித் (பணிவு) சுக வள்ளல் பவ !**

ஆன்மீக போதை எவ்வளவு அதிகமோ அவ்வளவு பணிவு ஏற்படுத்தும். உண்மையான ஆன்மீக போதையில் இருப்பவர் சதா பணிவுடன் இருப்பார். பணிவுள்ள ஆத்மாக்கள் சுகத்தின் வள்ளலாக சேவாதாரி பவ. சேவாதாரியுடைய விசேஷம் – வளைதல் அதாவது பணிவுடன் இருத்தல். தான் சுயம் வளைவாரே பிறரையும் வளைக்க முடியும். ஆனால் எவரிடம் ஆன்மீகம் இருக்கிறதோ அவர்களே வளைந்து கொடுக்க முடியும். நிற்றல், நடத்தல், அமருதல், பேசுதல் ஆகிய ஒவ்வொரு செயலிலும் ஆன்மீகம் தென்படட்டும். அப்பொழுதே பணிவுடைய சுகத்தின் வள்ளல் ஆக முடியும்.

**மாயாவின் ராயல் ரூபத்தை பகுத்து அறியக்கூடிய சாந்தி சக்தியின் அனுபவி பவ !**

பரமார்த்த குழந்தைகளின் முன்னர் மாயா ராயல் ரூபத்தை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. அதனை பகுத்தறிய ஏகாக்ரதாவின் சக்தி வேண்டும். அந்த ஏகாக்ரதா சக்தியை அமைதி சக்தியின் மூலமே அடைய முடியும். இப்போது சாந்தி சக்தியின் அனுபவி ஆகுங்கள். அதாவது, ஏகாக்ரதாவின் மூலம் பகுத்தறிதல் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தியை அடையுங்கள். அப்போது விவகார மற்றும் பரமார்த்தத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு கிடைத்து விடும். மேலும் மாயாஜீத் ஆகி விடுவீர்கள்.

**சாட்சாத் மூரத் ஆவதற்கு சிரேஷ்ட ஸ்திதியின் வாகனதாரி மற்றும் அலங்காரி பவ !**

மாஹாவீர் குழந்தைகளின் வாகனம் சிரேஷ்ட ஸ்திதி மற்றும் அலங்காரம் சர்வ சக்திகள். யார் சதா இப்படிப்பட்ட வாகனதாரி மற்றும் அலங்காரி ஆகி இருக்கின்றனரோ, அவர்கள் தானாகவே சாட்சாத் மூரத் ஆகி விடுகின்றனர். இப்படிப்பட்ட சாட்சாத் மூரத் குழந்தைகள் பறக்கும் கலையில் பறந்து கொண்டே இருக்கின்றனர். அவர்களுக்கு அனைத்து பரஸ்திதிகளும் விளையாட்டுப் பொம்மை போன்று அனுபவமாகின்றன. அவர்கள் சாட்சாத் பாபா வசமாகி அனைவருக்கும் பாபாவின் சாட்சாத்காரத்தை செய்வித்துக் கொண்டே இருக்கின்றனர்.

## சம்பூர்ண நிலையை அடையக்கூடிய பிரம்மா பாபாவின் சமீப துணை பவ !

இப்போது புருஷார்த்தி குழந்தைகள் தமது சம்பூர்ண நிலையை சுயம் தாமே அடைய வேண்டும். அதாவது, சதா உற்சாகம், ஆர்வம் என்னும் வரமாலையை அறிய வேண்டும். எப்போது நீங்கள் சம்பூர்ண நிலையை அடைகிறீர்களோ அப்போதே சம்பூர்ண பிரம்மா மற்றும் பிராமணர்களுடன் பிரம்மா வீட்டிற்கும் போக முடியும், பிறகு ராஜ்ய அதிகாரியும் ஆக முடியும். அதற்கு வியக்தத்தில் இருந்து அவ்யக்த ரூபத்தின் அனுபவத்தைச் செய்வியுங்கள். எதிரில் வரக்கூடிய ஆத்மாக்கள் வியக்த உணர்வை மறந்து அவ்யக்த ஸ்திதியை அனுபவம் செய்வர்.

## சோம்பேறித்தனத்தின் குட்டிச் சேட்டையை விட்டு பொறுமை சக்தியின் கவசதாரி பவ !

அநேக குழந்தைகள் உயர்ந்ததிலும் உயர்ந்த பாபாவின் செல்லமாய் இருப்பதால் மிகவும் நாஸூக் ஆகி விடுகின்றனர். பிறகு பாபாவின் விஷயத்தை பாபாவிற்கே கூற ஆரம்பித்து விடுகின்றனர். இதற்குக் காரணம் பொறுமை சக்தியின் குறைவே. எனவே இந்த வரதானத்தை ஸ்மிருதியில் வைத்து பொறுமை சக்தியை தாரணை செய்க. இதுவே அனைத்து தடைகளில் இருந்தும் காத்துக் கொள்வதற்கான கவசமாகும். இந்த கவசத்தை அணிவதால் சோம்பேறித்தனத்தின் குட்டி சேட்டைகள் அனைத்தும் முடிந்து போகின்றன.

## ஈஸ்வர்ய சம்பாத்தியத்தை சேமிக்கும் ஆழமான ரகசியத்தை அறியும் ராஸ்யுக்த், யுக்தியுக்த், அனாசக்த் பவ !

ஈஸ்வர்ய சம்பாத்தியத்தின் சேமிப்பிற்கான ரகசியத்தை அறியும் குழந்தைகள் எளிமையாக உண்கின்றனர், எளிமையாக நடந்து கொள்கின்றனர். முதலில் அலௌகீக சேவையின் விசேஷ கணக்கை முதலில் திறக்கின்றனர். அவர்கள் தமது அனைத்து கஜானாக்களையும் சமயம், சக்தி, ஸ்தூல செல்வத்தையும் லௌகீகத்தில் தாராள மனதுடன் ஈடுபடுத்துகிறார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு ராஜ்யுக்த், யுக்தியுக்த், அனாசக்த் பவ என்னும் வரதானம் தானாகவே கிடைத்து விடுகிறது.

## தியாகத்தையும் தியாகம் செய்யக்கூடிய மஹாதியாகி சிரேஷ்ட பாக்யவான் ஆத்மா பவ !

குப்த மஹா தானத்தின் விசேஷதா – தியாகத்தையும் தியாகம் செய்து மஹா தியாகி ஆவது. ஏனெனில் சிரேஷ்ட கர்மத்தின் பிரத்யக்ஷ பலன் அனைவரின் மூலமாகவும் மகிமை ஏற்படுகிறது. சேவாதாரிக்கு சிரேஷ்ட புகழ் என்ற சிம்மாசனம் கிடைக்கிறது. பெருமை, பதவி என்ற சிம்மாசனம் கிடைக்கிறது. இந்த ஸித்தி அவர்களுக்கு அவசியம் பிராப்தி ஆகின்றது. ஆனால் இந்த ஸித்தி நிலைகள் பயண வழியில் இருக்கும் தங்கும் இடங்கள் ஆகும், இறுதி லட்சியமாக இருப்பது இல்லை. ஆகையால் இதையும் தியாகம் செய்து பாக்யவான் ஆகுக.

**சதா சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக் கூடிய சதா எல்லையற்ற சேவாதாரி பவ !**

நம்முடைய ஒவ்வொரு செகண்டும், ஒவ்வொரு சங்கல்பமும் மற்றவர்களுடைய சேவைக்காக இருக்கிறது என்ற இந்த லட்சியம்தான் சதா இருக்க வேண்டும். வாழ்ந்தால் சேவை, நடந்தால் சேவை, பேசுவது, நினைப்பது எல்லாமே சேவைக்காக. ஒவ்வொரு நரம்பிலும் சேவையின் ஊக்கம் உற்சாகம் நிறைந்திருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு சங்கல்பமும் ஒவ்வொரு செகண்டும் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். குட்நைட் சொன்னாலும் சேவை, குட் மார்னிங் சொன்னாலும் சேவை, கனவில் கூட சேவை செய்து கொண்டே இருப்பது. அப்போதுதான் உண்மையான சேவாதாரி என்று சொல்லலாம்.

## சகஜ யோகி பவ என்ற வரதானத்தை சதா நிரந்தரமாக வைத்துக் கொள்வதற்காக அனைவருடைய யோகி பவ !

சேவையில் அனைவருடைய சகயோகி ஆகுவதே சகஜ யோகத்தின் விதி ஆகும். அமிர்தவேளை பாபாவை சந்தித்து பாப்சமான் விதை ரூபமாகி அனைத்து ஆத்மாக்களுக்கும் தான் பிராப்தியாக அடைந்த சக்திகள் மூலமாக ஆத்மாக்கள் முன்னேற்றம் மற்றும் வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்வதில் சகயோகி ஆகுக. தன் உடைய சுப எண்ணம் மேலும் சிரேஷ்ட ஆசையினால் அனைவருக்கும் சகயோகம் கொடுக்க வேண்டும் என்ற லட்சியமே முழு நாளிலும் எந்த காரியம் செய்து கொண்டிருந்தாலும் இருக்க வேண்டும். இந்த விதி மற்றும் வரதானத்தினால் சகஜ யோகி ஆகி விடுவோம்.

**சூட்சும சக்திகள் மூலமாக ஸ்தாபனை காரியத்தில் வெற்றி அடையக்கூடிய மாஸ்டர் படைப்பவர் பவ !**

முன்னோடி ஆத்மாக்களாகிய உங்களுடைய சக்தி அலௌகீக சூட்சும சக்தி மேலும் சொல்லின் சக்தி அனைவரிடமும் இருக்கிறது; ஆனால் சிரேஷ்ட சங்கல்பத்தின் சக்தி, சுப எண்ணத்தின் சக்தி, ஸ்நேகம் மற்றும் சகயோகத்தின் சக்தி – இது மாஸ்டர் படைப்பவர்களாகிய உங்களுடைய விசேஷம். இந்த விசேஷத்தினால் மேலும் வரதானத்தினால் உங்களுடைய வம்சாவளியினரின் பிராப்திகள் என்ற ஆசை தீபத்தை ஏற்றி அவர்களை யதார்த்த லட்சியம் வரை அடையச் செய்யுங்கள்.

## தன்னுடைய ஒவ்வொரு கர்மம், ஒவ்வொரு பேச்சு மூலமாக படிப்பு தரக்கூடிய நடமாடும் மாஸ்டர் ஆசிரியர் பவ !

தற்காலத்தில் எப்படி நடமாடும் நூலகம் இருக்கிறதோ, அப்படி நடமாடும் மாஸ்டர் ஆசிரியர். நீங்கள் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தாலும், கற்றுக் கொடுக்காவிட்டாலும் உங்களுடைய ஒவ்வொரு கர்மமும் ஒவ்வொருவருக்கும் படிப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் தனியாக இல்லை. சதா மாணவர்களுக்கு முன்னால் இருக்கின்றீர்கள். சதா படித்துக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களையும் படிக்க வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த நினைவு இருந்தாலே கவனக்குறைவு தானாகவே நீங்கி விடும்.

## அனைவரையும் நல்லவர்களாக ஆக்குவதற்கான தூண்டுதல் தரக்கூடிய சைதன்ய லைட் ஹவுஸ் மேலும் ஜ்வாலா சொரூப பவ !

இப்பொழுது தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களை நல்லவர்கள் நல்லவர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் எப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் சைதன்ய லைட் ஹவுஸ் அதாவது ஜ்வாலா சொரூபம் ஆவீர்களோ, அப்போது நல்லவர்கள் ஆவதற்கான தூண்டுதல் கிடைக்கும். சேவாதாரி, சிநேகி, ஒருவரின் பலம், ஒருவரிடத்தில் நிச்சயம் உடையவர்களாக இருக்கின்றீர்கள் – அதே சமயம் உங்கள் ஒவ்வொருவரிடமும் அலௌகீகதாவின் அனுபவம் இருக்க வேண்டும். அதாவது மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற நிலை, மேடைக்கு வெளிப்படையாக வந்து விட்டால் அனைவரும் உங்கள் முன்னால் விட்டில் பூச்சிக்கு சமமாக சுற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

**மகிழ்ச்சி என்ற பிராப்தியின் பிரசாதம் மூலமாக சதா மகிழ்ச்சி பவ !**

எந்தெந்த யக்ஞ சேவை செய்வதால் சக்திகள், சுகம், சாந்தி என்ற பற்பல பொக்கிஷங்கள் இருக்கின்றதோ, அந்த அனைத்து பொக்கிஷங்களின் அனுபவம் ஏற்படுகின்றது. இந்த அனுபவம்தான் யக்ஞ பிரசாதம். மேலும் அனைத்தையும்விட பெரிய பொக்கிஷம் மேலும் பிரசாதம் மகிழ்ச்சி எனும் பிராப்தி. யார் இங்கு மகிழ்ச்சி பவ என்ற வரதானி ஆகி விடுகின்றார்களோ அவர்கள் எந்த விதமான சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்க முடிகின்றது. அவர்களை எந்த விதமான சூழ்நிலையும் தன் பக்கம் இழுக்க முடியாது.

## தன்னுடைய சக்திசாலி ஸ்வரூபம் மூலமாக அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கக்கூடிய சத்திய தீர்த்தம் பவ !

எப்போது ஆதார மூரத் ஆத்மாக்களாகிய நீங்கள் உங்களுடைய சக்திசாலி சொரூபத்தில் நிலைத்து விடுவீர்களோ அப்போது தூரத்தில் அமர்ந்து இருந்தாலும் பலருடைய மன அழுத்தத்தையும் நீக்கக் கூடிய சகஜமாக கவனத்தை ஈர்க்கக் கூடிய சத்திய தீர்த்தம் ஆகி விடுவீர்கள். பிறகு தானாகவே அனைவரும் தேடித்தேடி உங்களிடம் வந்து சேர்ந்து விடுவார்கள். இதற்காக முதலில் நீங்கள் சுயம் சக்தி சொரூபம் ஆகுங்கள். அப்பொழுது சத்திய தீர்த்தம் ஆகி அநேக ஆத்மாக்களுக்கும் முக்தி அல்லது இனிமையான வீடு எனும் பிராப்தியை அடைய வைக்க முடியும்.

## தொடங்கும் மற்றும் நிறுத்தும் சக்தியின் மூலமாக கர்ம இந்திரியங்களின் ராஜ்ய அதிகாரி பவ !

எப்பொழுது தொடங்குவதற்கான மேலும் நிறுத்துவதற்கான இரண்டு சக்திகளும் சமான ரூபத்தில் ஏற்படுகின்றதோ அப்போது கர்ம இந்திரியங்களின் ராஜ்ய அதிகாரி என்று சொல்லலாம். நீங்கள் நிற்க என்று சொல்லும் போது அவை தொடங்கி விடுவது என்பது இருக்கக்கூடாது. ஒவ்வொரு கர்ம இந்திரியங்களின் சக்திகளுக்கும் கண்களின் மூலம் சைகை காட்டுங்கள். மேலும் சைகையினாலேயே எப்படி விரும்புகின்றீர்களோ அப்படி இயக்கி விடுங்கள் – அதாவது எப்போது அப்படிப்பட்ட கட்டுப்படுத்தும் மேலும் ஆளும் சக்தி இருக்கின்றதோ அப்போது கர்ம இந்திரியங்களை வெற்றி அடைந்தவர்களாக, இயற்கையை வெற்றி அடைந்தவர்களாக ஆகி கர்மாதீத் ஸ்திதி என்ற ஆசனத்தில் அமர்பவர்களாக ஆக முடியும்.

**அன்பின் வழிமுறையில் (ரீதி) ஈடுசெய்யக் கூடிய ஒளிவிளக்கின் மனம் கவர்ந்த விட்டில்பூச்சி ஆகுக !**

ஒளிவிளக்கு மற்றும் விட்டில்பூச்சியின் அன்பானது அழிவற்றது. அன்பின் வழிமுறையில் ஈடுசெய்வது என்றால் அர்த்தம் அனைத்தையும் அடைவது ஆகும். அன்பின் ரீதிகூட இரண்டு விஷயங்கள் மட்டும் உடையதாக இருக்கின்றது – ஒன்று பாட்டு பாடுவது, இரண்டாவது நடனமாடுவது. அமிர்த வேளையிலிருந்து பாபாவின் மீதும் உங்களுடைய சிரேஷ்ட வாழ்க்கை என்னும் மகிமை என்ற அனைத்து பிராப்திகள் என்ற பாட்டு பாடுங்கள் மேலும் மகிழ்ச்சியில் நடனமாடிக் கொண்டே ஒவ்வொரு கர்மமும் செய்யும்போது ஒளிவிளக்கின் உள்ளம் கவர்ந்த விட்டில்பூச்சி ஆகி விடுவீர்கள்.

**சேவையில் முன்னேற்றம் அடைவதற்காக நிமித்தம் மற்றும் பணிவுத்தன்மை உடையவர்களாகுக !**

சேவை செய்யும்போது எப்போதுமே நான் செய்தேன், நான் டீச்சர் என்ற இந்த உணர்வு வரக்கூடாது. இந்த நான் என்ற பாவனை சேவையில் நிற்கும் கலைக்கான ஆதாரமாக இருக்கின்றது. நிமித்தம் என்பதற்கு பதிலாக நான் என்ற தன்மை வருவதால் சேவை மந்தமாகி விடுகிறது. பிறகு மகிழ்ச்சி மற்றும் போதை கூட மறைந்து விடுகின்றது. ஆகையால் நிமித்தம் மேலும் பணிவுத்தன்மை உடையவனாக இருக்கிறேன் என்ற இரண்டு வரதானத்தை நினைவில் வைத்து நடக்கும்போது சேவையில் சகஜமாக முன்னேற்றம் அடைந்து கொண்டு இருப்பீர்கள்.

## கோபத்தின் சூட்சும அம்சம் வெறுப்பையும் நீக்கி விடக்கூடிய சுப எண்ணம் மற்றும் சிரேஷ்ட ஆசையினால் நிறைந்தவர்கள் ஆகுக !

பிறருடைய சுபாவத்தைப் பார்த்து அவர்களிடமிருந்து ஒதுங்கி விடுவதுகூட வெறுப்பு அதாவது கோபத்தின் அம்சம் ஆகும். இவர் இப்படிப்பட்டவர், இவர் மாறவே மாட்டார் என்று யாருக்குமே அப்படிப்பட்ட இறுதி சர்டிபிகேட் கொடுத்து சாபம் கொடுத்து விடாதீர்கள். ஆனால் சுப எண்ணம் மற்றும் சுப ஆசை எனும் வரதானி ஆகி இந்த அம்சத்திற்கும் விடை கொடுத்து விடுங்கள். விசேஷமானவர்களாகி மற்றவர்களையும் இதிலிருந்து காத்து விடுங்கள்.

## தந்தையைப் பார்ப்பது, தந்தையைப் பின்பற்றுவது என்ற பாடம் மூலமாக ஆடாத, அசையாத ஒரே நிலையில் இருப்பவர்களாகுக !

ஆன்மீக பரிவாரத்தில் (நம்மிடையே) வெவ்வேறு விதமான சம்ஸ்காரம் சுபாவம் உடையவர்கள் இருப்பார்கள். ஆனால் தந்தையைப் பார்ப்பவர்கள் தந்தையை பின்பற்றக் கூடியவர்கள் சதா பாப்தாதாவின் அருகில் இருக்கின்றனர். யார் தந்தையைப் பார்ப்பதன் கூடவே சகோதர, சகோதரிகளைப் பார்க்கின்றார்களோ அவர்கள் சமீபத்தில் இருப்பதற்குப் பதிலாக தூரமாகி விடுகின்றனர். ஆகையால் எங்கே இருந்தாலும் இந்த பாடத்தை உறுதிப் படுத்துங்கள் ‘தந்தையைப் பார்ப்பது, தந்தையைப் பின்பற்றுவது’. அப்போது எந்த பிரச்சினையிலும் உங்களின் மனநிலை கீழும் மேலும் போகாது. ஆடாத அசையாத மேலும் ஒரே நிலையில் உள்ளவர்களாக ஆகி விடுவீர்கள்.

## எண்ணத்தின் போக்கை தெளிவாக்கக் கூடிய ஸித்தி ஸ்வரூப் பவ !

இந்த புனர் ஜென்ம வாழ்வின் பொக்கிஷம் அல்லது சக்தியே சங்கல்பம் ஆகும். புனர் ஜென்மத்திற்கு ஆதாரம் சுத்த சங்கல்பமே. ஆகையால் எது அவசியமோ அந்த சங்கல்பத்தையே நினையுங்கள். எண்ணம் என்ற விதை, வெற்றி என்ற பலனால் நிறைந்திருக்க வேண்டும், அதாவது சக்தி நிறைந்து இருக்க வேண்டும். சக்திசாலியான எண்ணங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம் ஆனால் சக்தி நிறைந்ததாக இருக்கும். மேலும் வீணானவற்றின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம், பிராப்தி எதுவுமே ஏற்படுவது இல்லை. ஆகையால் எண்ணங்களின் போக்கை தெளிவானது ஆக ஆக்குங்கள். குறைவாக நினைக்கும் போது ஸித்தி சொரூபம் ஆகி விடுவீர்கள்.

### சதா அன்பில் மூழ்கி இருக்கக்கூடிய சகஜ பயிற்சியாளன் ஆகுக !

இப்பொழுது கஷ்டப்பட்டு முயற்சி செய்யக்கூடிய, யுத்தம் செய்யக்கூடிய சம்ஸ்காரத்தை நீக்கி விடுங்கள். பாப்தாதாவிற்கு குழந்தைகளின் முயற்சி செய்யக்கூடிய சம்ஸ்காரத்தைப் பார்த்து இரக்கம் ஏற்படுகிறது. இப்பொழுது வரையிலும் கஷ்டப்பட்டு முயற்சி செய்து கொண்டிருந்தால் பலனை எப்போது அனுபவிப்பீர்கள். ஆனால் இதனுடைய அர்த்தம் கவனக்குறைவு அற்றவர்களாக ஆகி விடக்கூடாது. அன்பில் மூழ்கி இருக்க வேண்டும். நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற நினைவில் இருந்து சங்கல்பம் செய்தாலே அனுபவம் ஏற்படும். சகஜ பயிற்சியாளனாக ஆகி விடுவீர்கள்.

**ஒவ்வொரு குணத்தின் ஆழம் மற்றும் புதுமையால் அனுபவம் செய்யக்கூடிய சதா ஏகாந்தவாசி பவ !**

எந்த ஒரு புதுமையையும் அனுபவம் செய்வதற்கு ஏகாந்தம் அவசியம். ஏகாந்தவாசி ஆவது என்றால் அர்த்தம் சதா ஸ்தூல தனிமையின் கூடவே ஒரே ஒருவருடைய நினைவில் நிலைத்து இருப்பது. ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தின் ஆழத்தில் சென்று விடுங்கள். தினந்தோறும் புதிய அனுபவம் அடையுங்கள். தினந்தோறும் புதிய ஞானக் கருத்துக்களைக் கண்டு பிடியுங்கள். புதுமையை அனுபவம் செய்வதனால் சோம்பேறித்தனம் ஓடி விடும். விதவிதமான கருத்துக்களாக இருப்பதால் ரமணீகரத்தில் வந்து விடுவீர்கள். எப்போதும் சோர்வு அடைய மாட்டீர்கள்.

**விஷ்வ கல்யாணகாரி நிலையில் நிலைத்து இருந்து பாப்சமான் விஷ்வத்தை சுற்றி வரக்கூடிய சக்ரவர்த்தி பவ !**

பாபாவுடன் உலகைச் சுற்றி வருவதற்கு எல்லை அற்ற விஷ்வ கல்யாணகாரி நிலை, விதை ரூப நிலையில் நிலைத்து இருக்க வேண்டும். எப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரை பூமி உருண்டை மேல் அமர்ந்து இருப்பது போல் காட்டியிருக்கின்றனரோ அதுபோல உலக உருண்டை மேல் அமர்ந்திருக்கிறேன் என்ற அனுபவம் ஏற்படும். இதனால் தானாகவே உலகத்தைச் சுற்றி வர ஆரம்பித்து விடலாம். உலகம் ஒரு சிறிய பந்து போல உங்களுக்குத் தென்படும்.

## சேவையின் கூடவே தன் மேல் கவனம் தரக்கூடிய அமரநாதனின் குழந்தைகள் சதா அமர்பவ !

சங்கமயுகத்தில் அமர் பாபா மூலம் விசேஷமாக 'அமர பவ' என்ற வரதானம் அனைத்துக் குழந்தைகளும் பிராப்தியாக அடைந்து இருக்கின்றன. ஆனால் சதா அமரர்களாக கீழ்க்கண்டவர்கள்தான் இருக்கின்றனர் : <1> சேவையின் கூடவே தன் மீது முழு கவனம் வைக்கின்றவர்கள், <2> தன்னுடைய சம்ஸ்காரத்தை மாற்றிக் கொள்வதுடன் மற்றவர்களோடு ஏற்படும் சம்ஸ்கார மோதலையும் தவிர்ப்பவர்கள்.

## தனது நிலையில் நிலைத்திருப்பதற்கு அனைத்து பிராப்திகளிலும் நிறைந்தவர்கள் ஆகுக !

கடைசி நேரத்தில் வரதானம் கொடுக்கக்கூடிய பாகம் உள்ளது. ஏனெனில் கடைசியில், அனைத்து விஷயங்களிலும் யார் பலஹீனம் அடைந்து விடுகின்றார்களோ, அவர்களே வருவார்கள். அவர்களுக்கு வரதானம் கொடுப்பதற்காக அனைத்து பிராப்திகளிலும் நிறைந்து இருக்க வேண்டும். தன் இடத்தில் ஏதாவது பலஹீனம் இருந்தால் மற்றவர்களைப் பார்த்தாலும் தன் பக்கம் கவனம் சென்று விடும். ஆகையால் சுயம் அனைத்து பிராப்திகளிலும் முழுமையாகும் போது வரதானி ஆக முடியும்.

## ஒவ்வொரு சக்தியையும் செயல் மூலம் வெளிப்படுத்தக்கூடிய சிரேஷ்ட காரியம் செய்பவர்கள் ஆகுக !

சாகார உலகத்தின் விசேஷம் செயல். இங்கு செயல் சிரேஷ்டமாக இருந்தால் பிராப்தி சிரேஷ்டமாக இருக்கும். செயலே ஆத்மாவின் தரிசனத்தை நிகழ்த்தக்கூடிய கண்ணாடி. செயல் மூலமாக தன்னுடைய சக்தி சொரூபத்தை அறிந்து கொள்ள முடியும். எப்படி சமயமோ, அப்படி சக்தியை காரியத்தில் பயன்படுத்த வேண்டும். இதுதான் செயலின் சிரேஷ்டம். விஷ்வத்தின் அனைத்து ஆத்மாக்களுக்கும் முன்னால் உங்களுடைய செயல் தான் உங்களை அறிமுகப்படுத்தும். சிரேஷ்ட செயல் செய்யக்கூடியவர்களாகி சக்தி சொரூபத்தின் தரிசனம் செய்வியுங்கள்.

**தாய் தந்தை சொரூபத்தில் இருந்து தன்னுடைய பிரஜைகளை பாலனை செய்யக்கூடிய ஆட்சியாளன் ஆகுக !**

ஆட்சியாளன் என்றால் உரிமை சொரூபம், அனைத்து பொக்கிஷங்களிலும் நிறைந்தவர், தாய் தந்தைக்குச் சமமாக பாலனை செய்யக்கூடிய விசேஷமானவர்கள். எப்படிப்பட்டவர்கள் உங்கள் உடைய தொடர்பு சம்பந்தத்தில் வந்தாலும் அனுபவம் செய்வார்கள், இவர்கள் வாழ்வின் மூலம் வாழ்க்கையின் உண்மையான அன்பு மேலும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சாதனத்தை பிராப்தியாக அடைய முடியும் என்றும் உணர்வர். ஆக ஆட்சியாளன் பவ. வரதானி ஆகி அப்படிப்பட்ட பாலனை கொடுப்பதன் மூலம் அன்புக்கடல் பாபா மூலம் அளவு கடந்த உண்மையான அன்பின் அனுபவம் செய்து கொண்டு இருங்கள்.

## பிராமண குலத்தின் தாரணைகள் நிறைந்திருக்கும் தர்மத் தலைவர் ஆகுக !

தர்மத் தலைவர் என்றால் ஒவ்வொரு தாரணை சக்தியும் தன்னிடத்தில் அனுபவம் செய்யக் கூடியவர்கள். பிராமண குலத்தின் முக்கிய தாரணை தூய்மை. பவித்ரதா சக்தியினால் பதீத உலகத்தை மாற்றக் கூடியவர்கள். விகாரம் எனும் அக்னியில் எரிந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை சீதளமாக ஆக்கக் கூடியவர்கள். ஆத்மாக்களை அநேக ஜென்மத்தின் பாவ கர்மங்கள் என்ற பந்தனத்தில் இருந்து விடுபட வைப்பவர்கள். அப்படிப்பட்ட பவித்ரதா அல்லது ஒவ்வொரு குணத்தின் தாரணை ஆத்மாவில் அமைந்திருக்க வேண்டும். அப்போது தர்மத் தலைவர் ஆத்மா என்று சொல்லலாம்.

## தன் உடைய பணிவு ஸ்திதி மூலம் ஒவ்வொரு குணத்தையும் வெளிப்படுத்திக் காட்டக்கூடிய பலன் நிறைந்தவர்கள் ஆகுக !

ஒவ்வொரு கர்மத்திலும் பணிவுடையவர்களாக ஆவது இது மஹான் ஆத்மாக்களாகிய உங்கள் உடைய விசேஷத் தன்மை. எந்த அளவு தன் இடத்தில் அனைத்து குணங்களின் தாரணை ஏற்படுமோ, அதாவது குணங்கள் என்ற பலனினால் நிறைந்தவர்களாக ஆவீர்களோ, அந்த அளவுதான் பணிவு உடையவர்களாகி தன்னுடைய பணிவு ஸ்திதி மூலம் ஒவ்வொரு குணத்தையும் பிரத்யட்சம் செய்ய முடியும். பணிவு உடையவர்கள் ஆக ஆவதால் சேவையிலும் சதா லேசாக இருப்பீர்கள். பெயர், புகழின் ஆசை இருக்காது. பணிவுதான் ராஜ்ய அல்லது தர்மத் தலைவர் ஆத்மாக்களின் விசேஷம் ஆகும்.

**மனத்தூய்மையின் மூலம் அனைத்து குழப்பங்களில் இருந்தும் விடுபட்டு, சுகம், சாந்தி நிறைந்து சதா மகிழ்ச்சியோடு இருக்கக் கடவீராக !**

தூய்மைதான் சுகம் சாந்தியின் தாய். மனதின் எண்ணத்தில் கூட தூய்மை இருக்கும் போது அவர்களுக்கு சுகம், சாந்தி நிறைந்திருப்பதற்கான, சதா மலர்ந்த முகம் உடையவர்களாக இருப்பதற்கான வரதானம் பிராப்தியாக ஆகி விடுகின்றது. ஏன், என்ன என்ற குழப்பத்தில் இருந்து விடுபட்டு விடுகின்றனர். சதா சுகம், சாந்தி என்ற படுக்கையில் ஓய்வாக வீற்று இருக்கின்றனர். அவர்களுக்கு விகாரம் கூட குடை நிழலாகி சேவைக்கு நிமித்தமாகி விடுகின்றது. அவர்கள் உடைய மனதில் ஏன், என்ன, எப்படி என்ற குழப்பம் ஏற்படுவதில்லை.

## விஸ்தாரத்தில் வந்தாலும் சார ஸ்வரூபத்தில் நிலைத்து சாட்சாத் ஆத்ம சொரூபத்தின் அனுபவி மூரத் பவ !

எங்கே சாட்சாத் சொரூபம் இருக்கிறதோ அங்கே சாட்சாத்காரத்தின் அவசியம் கிடையாது. யார் சாட்சாத் ஆத்ம சொரூபத்தின் அனுபவம் செய்யக் கூடிய வரதானி குழந்தைகளாக இருக்கின்றனரோ, அவர்கள் நான் ஆத்மாவைப் பார்த்ததால் என்ன அனுபவம் செய்தேன் என்பதை அதிகாரத்தோடும் நம்பிக்கையோடும் சொல்கின்றனர். அவர்கள் நடமாடினாலும் தன்னுடைய ஜோதி சொரூபத்தின் அனுபவம் செய்கின்றனர். ஆனால் இதற்காக சார சொரூபத்தில் நிலைத்து இருப்பதற்கான பயிற்சி வேண்டும். சேவையின் விஸ்தாரத்தில் சார ரூபத்தில் இருக்கும் ஆத்மாவின் அனுபவம் செய்வதை மறக்கக் கூடாது.

## ஒரே வெட்டில் பாபாவிடம் பலி ஆகக் கூடிய மர்ஜீவா பவ !

யார் பாபாவிடத்தில் ஒரே வெட்டில் பலி ஆகின்றனரோ அந்த குழந்தைகளுக்கு மர்ஜீவா பவ என்ற வரதானம் பிராப்தி ஆகின்றது. என்னுடைய பாபா, நான் பாபாவினுடையவன் என்று சங்கல்பத்தில் நினைத்த மாத்திரத்திலேயே பலி ஆகி விடுகின்றனர். அதாவது மர்ஜீவா அடைந்து விடுகின்றனர். பக்தி மார்க்கத்தில் கூட ஒரே வெட்டில் துண்டு இரண்டாக ஆனால் தான் ஜட சித்திரத்திற்கு பிரசாதமாகப் படைக்கின்றனர். வெட்டும் போது கத்திகத்தி உயிரை விட்டால் அது பிரசாதமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. யார் ஒரே வெட்டில் பலி ஆகக் கூடியவர்களோ அவர்களே பாபாவிற்கு முன் பிரசாதமாக ஆவார்கள்.

**அனைத்து சம்பந்தங்களின் அனுபவத்தை ஒரு பாபாவோடு செய்து-செய்விக்கக் கூடிய உண்மையான ஆன்மீக சேவாதாரி பவ !**

யார் அனைத்து சம்பந்தங்களின் ரசனையை ஒரே ஒரு பாபாவிடம் வைக்கின்றனரோ, அவர்களுக்கு உண்மையான ஆன்மீக சேவாதாரி என்ற வரதானம் கிடைக்கின்றது. உங்களோடு தான் சாப்பிடுவேன், உங்களோடு தான் அமர்வேன், உங்களுடையதையே கேட்பேன். . . எந்த சம்பந்தம் வேண்டுமோ அந்த சம்பந்தத்தில் பாப்தாதா சதா நேரில் ஆஜராகின்றார். ஆகையால் அனைத்து ரசனைகளின் அனுபவம் செய்து மற்றவர்களுக்கும் செய்வியுங்கள். சுயம் தான் அனுபவம் செய்யும் பொழுது தான் மற்றவர்களையும் செய்விக்க முடியும்.

## குஷியை தானம் செய்யக் கூடிய மஹாதானி சிரேஷ்ட பிராமண ஆத்மா பவ !

பிராமணர்களுடைய காரியம் குஷியின் தானம் செய்து மஹாதானி ஆவது. குஷி என்ற பொக்கிஷம் அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷம். எனவே மஹாதானி ஆகி குஷி என்ற பொக்கிஷத்தை தானம் செய்து கொண்டே இருங்கள். யாருக்கு குஷி கொடுக்கின்றீர்களோ, அவர்கள் பல முறை உங்களுக்கு நன்றி சொல்வார்கள். துக்கத்தில் இருப்பவர்களுக்கு குஷியை தானம் கொடுத்து விடும் போது உங்களுடைய குணத்தை அவர்கள் பாடுவார்கள். அதனால் யாருக்காவது தானம் கொடுத்துக் கொண்டே இருங்கள். தானம் செய்யாமல் தூக்கம் வரக் கூடாது.

## எல்லோருடைய நல்ல குணங்களையும் கிரகித்துக் கொள்கின்ற குண மூர்த்தியும் உண்மையான வைஷ்ணவனும் ஆவீராக !

ஒவ்வொரு ஆத்மாவும் குணமுடைய மூர்த்திதான் என்ற எண்ணத்தோடு பார்க்கின்ற குழந்தைகளுக்கு இந்த வரதானம் பொருத்தமாக இருக்கும். அவர்கள் அசுத்தத்தில் இருந்து தன்னை வெகு தூரத்தில் நிறுத்திக் கொள்வர். அவர்கள் எல்லோருக்கும் சுப சிந்தனையாளராகவும் இருப்பார்கள். மற்றவர்களிடம் தென்படுகின்ற அவகுணம் என்ற உருவத்தில் இருக்கும் அழுக்கை கிரகிக்க மாட்டார்கள், வர்ணனை செய்ய மாட்டார்கள், மனதில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களுடைய மனம் 'மன்மனாபவ' என்ற நிலையில் இருப்பதற்கு அவர்கள் ஒரு விக்ன சொரூபமாக இருக்க மாட்டார்கள். அவகுணங்கள் தென்பட்டாலும் ஞான சூரியனாக மாறி அழுக்கை எல்லாம் எரித்து சாம்பலாக்கி விடுவார்கள்.

**சிரேஷ்டமான சங்கல்பத்தின் மூலமாகவும் சிரேஷ்டமான கர்மத்தின் மூலமாகவும் பாக்ய ரேகை வரைந்து கொள்கின்ற சிரேஷ்டமான பாக்யசாலி ஆவீர்களாக !**

சிரேஷ்டமான பாக்ய ரேகையின் ஆதாரம் சிரேஷ்டமான எண்ணமும் சிரேஷ்டமான கர்மமும் ஆகும். நாடக திட்டத்தின்படி இந்த சங்கம யுகத்தில் விரும்பினால் யார் வேண்டுமானாலும் சிரேஷ்டமான ஒரு பாக்யசாலி ஆக முடியும். ஜென்மம் எடுத்த உடன் பாப்தாதா எல்லோருக்கும் சிரேஷ்டமான பாக்யவான் ஆவீர்களாக என்ற வரதானம் அதாவது பாக்யத்தின் ஆஸ்தி கொடுத்து விடுகிறார். ஆனால் பாக்யம் என்ற உருவத்தில் இருக்கின்ற ஒரு பொக்கிஷத்தை பாதுகாப்பதிலும், அதாவது அதை சுயத்தில் பின்பற்றுவதிலும் பாக்யத்தின் பொக்கிஷத்தை பெருக்கிக் கொள்வதிலும், அதாவது மனம்-வாணி-கர்மம் மூலம் சேவைக்கு பயன்படுத்துவதிலும் வரிசைப்படி தரம் உள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள்.

**சகன் சக்தியும் உள் அடக்கும் சக்தியும் கொண்டு தாரணா ஸ்வரூபம் ஆவீர்களாக !**

ஒரு குணத்தோடு தக்க சமயத்தில் மற்ற குணத்தையும் பின்பற்றி நடக்கத் தெரிந்தவர்கள் தான் தாரணா ஸ்வரூபமாக ஆக முடியும். சகன் சக்தியை பின்பற்றுபவர்கள் ஆனால் உள்ளடக்கும் சக்தி அல்லது அந்த குணத்தையும் சேர்த்து உபயோகிப்பதில்லை. இங்குமங்குமாக வர்ணனை செய்து தீர்த்து விடுகிறீர்கள். அதாவது இவர் இதைச் செய்தார், நான் இப்படிச் செய்தேன், நான் எவ்வளவு தூரம் சகித்துக் கொண்டேன் என்பது எனக்குத் தான் தெரியும் – இது மாதிரி வர்ணனை செய்வது மூலம் அபிமானமும் பரசிந்தனையும் இரண்டும் இரண்டு உருவத்தில் வந்து விடுகின்றன. அதனால் தாரணா சொரூபம் ஆவதில்லை. அதனால் சகன் சக்தியோடு உள் அடக்கும் சக்தியையும் கூட உபயோகிக்க வேண்டும்.

## ‘என்னுடைய’ என்ற வாக்கினை தியாகம் செய்து விருந்தாளியாக நினைத்து உயர்ந்த காரியம் செய்கின்ற சிரேஷ்டமுள்ள மஹான் ஆத்மா ஆவீர்களாக !

தன்னை ஒரு விருந்தாளியாக நினைத்து மஹான் காரியம் செய்கின்ற ஆத்மாவை மஹான் ஆத்மா என்று சொல்லலாம். தன்னுடைய உண்மையான வீட்டை நினைவு வைத்திருப்பவர்களும், பழைய சரீரம் என்ற உருவத்தில் இருக்கும் வீட்டில் ஒரு போதும் அகப்பட்டுக் கொள்ளாமல், கர்மம் செய்வதற்காக மட்டும் சரீரத்தை ஆதாரமாக எடுத்துக் கொள்ளவும், கர்மத்தை நிறைவேற்றிய உடன் தன்னுடைய சூட்சுமமான அல்லது நிரகாரியான சொரூபத்தில் நிலைத்து இருப்பதற்கு பயிற்சி உள்ளவர்களும் உயர்வார்கள். இதுபோல பற்றற்ற ஒரு உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு சாகார கர்ம இந்திரியங்களின் மூலமாக கர்மம் செய்விக்கின்றவர்கள் விருந்தாளிகள் ஆகவும் மஹான்கள் ஆகவும் ஆவார்கள்.

## பழைய உலகத்தின் தேக சுமையை விட்டு விடுகின்ற டபுள் லைட் பரிஸ்தா பவ !

டபுள் லைட் ஸ்திதியை அனுபவம் செய்வதற்காக முதலில் எடுத்துக் கொண்ட உறுதி மொழியை ஞாபகம் செய்ய வேண்டும். முதல் உறுதி என்ன என்றால் இந்த உடலும்கூட தங்களுடையது அல்ல என்பதுதான். ஆகவேதான் தேகத்துடன் தேக சம்பந்தங்களையும் தியாகம் செய்ய வேண்டும். தேக சுமையை தியாகம் செய்வது என்பது தேகத்தை மறந்து விட வேண்டும். பிறகு எந்த ஒரு கர்ம இந்திரியமும் வசீகரிக்கப்பட்டு விடாது. யார் பழைய தேக சுமையை விட்டு கர்ம இந்திரியங்களை ஸ்ரீமத்படி நடத்துகிறார்களோ அவர்களுக்கு டபுள் லைட் பரிஸ்தா என்னும் வரதானம் கிடைத்து விடுகிறது.

## அஹங்காரத்தை தியாகம் செய்து விட்டு ஆன்மீகத்தை நடைமுறைப்படுத்தும் உண்மையான சேவாதாரி பவ !

யார் ஆன்மீக நிலையில் இருக்கின்றார்களோ அவர்கள் பணிவுடன் இருப்பார்கள். அவர்களிடம் சிறிதும் அகம்பாவம் இருக்காது. மேலும் ஆன்மீகத்தின் சிறப்பு அமைந்திருக்கும். எவ்வாறு தந்தை பணிவோடு குழந்தைகளுக்கு சேவை செய்கின்றாரோ அவ்வாறு தந்தையை பின்பற்ற வேண்டும். சேவையில் எப்போது அஹங்காரம் இருக்காதோ அப்போதுதான் உண்மையான சேவாதாரி என்று சொல்ல முடியும். மாறாக அஹங்காரம் வந்தால் சேவை முடியாமல் போய் விடும்.

**சிரேஷ்ட சுய கௌரவத்தின் நினைவில் ஒவ்வொரு அடியிலும் புண்ணியம் செய்யக்கூடிய சிரேஷ்ட புண்ணிய ஆத்மா பவ !**

நான் மிக உயர்ந்த பிராமண ஆத்மா, மஹான் ஆத்மா, நான் ஒவ்வொரு அடியிலும் புண்ணிய கர்மம் செய்யக்கூடிய புண்ணிய ஆத்மாவாக இருக்கிறேன் – இந்த சிரேஷ்ட ஸ்மிருதி என்னும் ஸ்வமான் ஆசனம் என்பது அந்த ஆசனத்தில் நிலைத்து இருந்து ஒவ்வொரு எண்ணமும் பேச்சும் செயலும் இருந்தால் புண்ணிய ஆத்மா ஆகி விடலாம். ஒருபோதும் தன்னை சாதாரணமானவன் என்று நினைக்கக் கூடாது. நான் யாருடையவராகி விட்டேன், எப்படி ஆகி விட்டேன் என்ற ஸ்மிருதி என்னும் ஆசனத்தில் வீற்று இருந்து வெற்றி கொள்பவர் ஆகுங்கள்.

## எல்லா சம்மந்தங்களையும் ஒருவரிடமே வைத்துக் கொள்ளக்கூடிய பந்தன் முக்த், யோக யுக்த் பவ !

ஒரு தந்தையிடம் எல்லா சம்மந்தங்களையும் வைத்துக் கொள்வதன் மூலம் என்னுடையது என்பது எளிதாகவே இல்லாமல் போய் விடும். எப்போது தந்தையினுடையவர்களாக ஆகி விட்டோமோ அப்போது தந்தையைத் தவிர வேறு எந்த ஒரு நினைவும் வர முடியாது. ஏன் என்றால் எப்போதும் பிரியமான சிறப்பான பொருள் தான் ஞாபகத்துக்கு வரும். ஆகவே எப்போது புத்தியில் தந்தையைத் தவிர வேறு யாரும் சிரேஷ்டமானவர் இல்லை என்பது தெளிவாகி விடுகின்றதோ அப்போது எல்லா சம்மந்தங்களும் தானாகவே தந்தையிடம் வந்து விடும். மேலும் எல்லா சம்மந்தங்களும் ஒருவருடன் வைத்துக் கொள்வதன் பொருள் பந்தனத்தில் இருந்து விடுதலை ஆவது மற்றும் யோகத்தில் நிலைத்து இருப்பவர் ஆதல்.

## அருகாமையின் அனுபவத்தின் மூலம் குணம் மற்றும் சக்திகளில் பாப்சமான் பவ !

ஒருவர் இன்னொருவரின் அருகாமையில் இருக்கும் போது அந்த தொடர்பின் சாயல் தானாகவே வந்து விடுகிறது. அதாவது தந்தைக்குச் சமீபமாக இருத்தல் என்பது தந்தைக்கு சமமாக ஆவதாகும். தந்தையின் குணம் எதுவோ அதுவே குழந்தையின் குணம் ஆகும். தந்தையின் கடமை எதுவோ அதுவே குழந்தையின் கடமையாகும். தந்தை விஷ்வ கல்யாணகாரி என்றால் குழந்தையும் கூட விஷ்வ கல்யாணகாரி தான். ஆதலால் ஒவ்வொரு செயலும் சொல்லும் பாப்சமானாக இருக்கிறதா? என்று சோதித்துப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். தந்தையை தன் உடன் வைத்துக் கொண்டே ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்தால் தந்தை சமானம் ஆகி விடலாம்.

## விகர்மங்களை தியாகம் செய்வதன் மூலம் சுகர்மம் மற்றும் விகர்மாஜீத் பவ !

விகர்மாஜீத் என்றால் விகர்மம் மற்றும் வீணான கற்பனைகளைத் தியாகம் செய்தல். எந்த கர்மத்தோடு கர்ம இந்திரியங்கள் சம்மந்தம் உடையனவாய் இருக்கின்றனவோ அந்த கர்மத்தின் கணக்குப்படி விகர்மத்தை தியாகம் செய்வது. இப்படிப்பட்ட தியாகிதான் சுகர்மம் மற்றும் விகர்மாஜீத் பவ என்னும் வரதானத்தை அடைகிறார். இத்தகைய வரதானி ஆத்மாக்கள் விகர்மம் மட்டுமல்ல, சாதாரணம் என்று கருதக்கூடிய கர்மத்தையும் செய்ய மாட்டார்கள். ஆதலால் அமிர்தவேளை முதல் செய்யக் கூடிய ஒவ்வொரு செயலும் ராயல் ரூபத்திலோ அல்லது சூட்சும அம்சம் மாத்திரத்தில் கூட எந்த ஒரு வகையான விகாரத்திற்கும் வசப்பட்டு இருந்ததா, இல்லையா என்பதை சோதிக்க வேண்டும். சுகர்மம் என்றால் சதா ஸ்ரீமத்படி செயல் இருக்க வேண்டும் என்பதாகும்.

## மஹாதியாகி, நிஷ்வார்த்தி (சுயநலமற்ற) ஸ்வரூபத்தின் மூலம் மஹாதானி, வரதானி பவ !

மஹாதானி என்பதன் பொருள் அடையப் பெற்ற பொக்கிஷங்களை சுய நலமில்லாமல் எல்லா ஆத்மாக்களுக்கும் கொடுப்பவர்கள். வரதானி என்றால் தனக்குள் குணங்கள், சக்திகள் மற்றும் ஞான பொக்கிஷங்கள் நிரம்பி இருப்பவர்கள். சதா எல்லா ஆத்மாக்களுக்காகவும் சிரேஷ்டமான சுபபாவனை மற்றும் எல்லோருக்கும் நன்மை விரும்பிகள். இத்தகைய சிரேஷ்டமான அபிலாஷைகளை உடையவர்கள், சதா ஆன்மீக இரக்க சுபாவம் உடையவர்கள், பெருந்தன்மை ஆன ஆத்மாக்கள் ஆவர். ஆனால் இதற்காக மஹாதியாகி அதாவது நிஷ்வார்த்தி மற்றும் நஷ்ட மோஹா ஸ்திதி அவசியம். யாரிடமும் வெறுப்பு இருக்கக் கூடாது. ஆகர்ஷிக்கப் படாதவர்களாகவும் மற்றும் தலை குனிவுக்கு ஆளாகாமலும் இருக்க வேண்டும்.

## சதா சேவையில் வெற்றி அடையக் கூடிய சிரேஷ்ட கமல் ஆசன்தாரி பவ !

நியாரா-பியாரா ஸ்திதியில் பேலன்ஸாக இருப்பது தான் கமல் ஆசனம் ஆகும். யார் ஒருவர் கமல் ஆசனத்தில் வீற்றிருந்து சேவை செய்கிறார்களோ, அவர்களுக்கு எப்போதுமே வெற்றிதான். சேவையில் எல்லோரும் பங்கு எடுத்துக் கொண்டு உழைக்கிறார்கள். ஆனால் நியாரா பியாரா என்ற இந்த இரண்டிலும் பேலன்ஸ் அவசியம். சேவையில் அன்பு இல்லாவிட்டாலும் சரியல்ல. மேலும் அன்பிலேயே சிக்கிக் கொண்டு சேவை செய்தாலும் சரியல்ல. அதனால் நியாரா ஸ்திதியில் நிலைத்து இருந்து அன்போடு சேவை செய்தல் வேண்டும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும்.

## உண்மையான மனதோடு திலாராம் (மனதிற்கு சுகம் அளிக்கக்கூடிய) தந்தையை தன் உடையவர் ஆக்கிக் கொள்வதில் தில்தக்த் நஷீன் பவ !

உண்மையான மனம் இல்லாமல் ஒரு விநாடி கூட திலாராம் தந்தையின் நினைவில் நிலைத்திருக்க முடியாது. உண்மையான மனம் உடையவர்களுக்கு சர்வ சிரேஷ்டமான விருப்பங்கள் பூர்த்தி ஆகின்றன. உண்மை ஆனவர்கள் சாகார்(ஸ்தூலம்)–ஆகார்(சூட்சுமம்) –நிராகார்(அசரீரி) என்ற மூன்று ரூபத்திலும் தந்தையுடன் அனுபவம் செய்கின்றனர். 'சச்சி தில்பர் சாஹேப் ராசி' என்பது பழமொழி (உண்மையான மனதில் பகவானுடைய ஆட்சி இருக்கும்). ஆதலால் எந்த குழந்தைகளுக்கு நல்ல மனமுள்ளதோ அவர்கள் தில் தக்த் நஷீன் (பாபாவின் மனம் எனும் சிம்மாசனத்தில் அமருவதற்கு அருகதை உடையவர்கள்) ஆகி விடுகின்றனர். திலாராம் பாபாவை தன் உடையவராக்கிக் கொள்கின்றனர்.

## சதா ஞான ரத்தினங்களை பொறுக்குபவர்கள் மற்றும் தாரணையில் கொண்டு வரும் ஹோலி ஹன்ஸ் பவ !

எந்தக் குழந்தைகள் சதா கடற்கரையில் இருக்கின்றார்களோ, சதா கடல் அலைகளில் விளையாடுகின்றார்களோ, சதா ஞான ரத்தினங்களைப் பொறுக்குகின்றார்களோ, தாரணை செய்கின்றார்களோ அவர்களுக்கு வீணான விஷயங்கள், வீணான காட்சிகள் எல்லாமே கல்லுக்குச் சமமாகத் தெரியும். அவர்களை ஒருபோதும் வீணான விஷயங்கள் பிரபாவப்படுத்தி விடாது. அவர்கள் ஒருபோதும் வீணானவற்றைக் கேட்கவும் மாட்டார்கள். அதைப் பற்றியே சிந்திப்பது, வர்ணிப்பது மூலமாக வாயுமண்டலத்தை கறைப்படுத்த மாட்டார்கள். அப்படிப்பட்ட விஷயங்கள் ஏதேனும் இருந்தால் அதனை தனக்குள் அடக்கிக் கொள்வார்கள்.

## பெக்கர் டு பிரின்ஸ் (யாசிக்கும் நிலையில் இருந்து இளவரசன் ஆதல்) ஆகக்கூடிய சங்கமயுக ஸ்வராஜ்ய அதிகாரி பவ !

சங்கம யுகத்தில் குழந்தைகளாகிய நீங்கள் இந்த பழைய உலகம், பழைய சம்ஸ்காரம் ஆகியவற்றில் பிச்சைக்காரனாகவும் ஞான பொக்கிஷம், குணம் மற்றும் சக்திகள் எனும் பொக்கிஷத்திற்கு எஜமானராகவும் ஆகின்றீர்கள் (மாலிக்) ராஜ்ய அதிகாரி அதாவது இளவரசன் ஆகிறீர்கள். இப்போது உடல், மனம், பொருள் ஆகியவற்றிற்கு அடிமையாவதில் இருந்து விடுதலை அடைந்தால் பிச்சைக்காரத்தனம் இருக்காது, அதிகாரி ஆகி விடுவீர்கள். எப்போது சங்கம யுகத்தில் ஸ்வராஜ்ய அதிகாரி ஆவதற்கான வரதானத்தைப் பெறுகின்றீர்களோ அப்போது வரும் காலத்தில் விஷ்வத்தை ஆளுவதற்கான ராஜ்ய அதிகாரம் கிடைக்கிறது.

## தந்தையின் நினைவில் லவ்லீன் (அன்பில் லயித்திருத்தல்) ஆக இருக்கக் கூடிய கர்ம யோகி மற்றும் கர்ம பந்தன் முக்த் பவ !

எந்தக் காரியம் செய்தாலும் தந்தையின் அன்பில் மூழ்கி இருங்கள். நினைவில் நிலைத்து இருந்து ஒவ்வொரு காரியமும் செய்தால் கர்ம பந்தனத்தில் இருந்து விடுதலை அடைந்து விடுவீர்கள். அப்போது காரியம் செய்து கொண்டு இருந்தாலும் செய்யாதது போலவே அனுபவம் ஆகும். மேலும் விளையாட்டு போலவும் இருக்கும். எந்த ஒரு விதமான சுமையோ, களைப்போ அனுபவம் ஆகாது. கர்மயோகி என்றால் கர்மத்தை விளையாட்டு போல விலகிய நிலையிலிருந்து செய்பவர். இத்தகைய நியாரா குழந்தைகள் கர்ம இந்திரியத்தின் மூலம் கர்மம் செய்து கொண்டே தந்தையின் அன்பில் மூழ்கி இருப்பதன் காரணமாக பந்தன் முக்த் ஆகி விடுகின்றனர்.

## சேவையில் எளிதாக வெற்றி பெறக்கூடிய சிவ-சக்தி கம்பைண்டு ஸ்வரூபதாரி பவ !

சதா தன்னுடைய சிவசக்தி கம்பைண்டு சொரூப ஸ்மிருதியில் இருந்தால் சதா சக்திசாலி ஆத்மாக்கள் விருத்தி ஆகிக் கொண்டே இருப்பார்கள். ஏனெனில் பூமியைப் பொறுத்து தான் பலன் கிடைக்கும். ஆதலால் எவ்வளவு தனக்குள் சக்திசாலி ஸ்டேஜ் கொண்டு வருகிறோமோ அப்போது வாயுமண்டலம் சக்தி சொரூபமாகி விடும். பிறகு அதிகமான ஆத்மாக்களும் கூட வருவார்கள். ஆகவே சிவசக்தி கம்பைண்டு சொரூபம் என்ற வரதானத்தை நினைவில் வைத்தால் சேவையில் விருத்தி எளிதாகவும் சிரேஷ்டமாகவும் ஆகிக் கொண்டே இருக்கும்.

## கர்ம பந்தன் முக்த் ஸ்திதியை அனுபவம் செய்யக் கூடிய கர்ம யோகி பவ !

சதா ஒவ்வொரு காரியம் செய்யும் போதும் கர்ம பந்தனத்தில் இருந்து விலகியும் பாபாவுக்கு அன்பானவர்களாகவும் இருக்க வேண்டும். கர்மயோகி ஒருபோதும் நல்லது அல்லது கெட்ட கர்மம் செய்யக் கூடிய மனிதரின் பிரபாவத்தில் வர மாட்டார். நல்ல காரியம் செய்கின்றார்களே என்று அவர்களுடைய தொடர்பில் குஷியோடு வருவதோ அல்லது கெட்ட கர்மம் செய்யக் கூடியவர்கள் உடைய சம்மந்தத்தில் கோபப்படுவதோ அல்லது அவர்களை வெறுப்பதோ, மனதில் பொறாமைப்படுவதோ இவற்றில் எதுவாயினும் கர்ம பந்தனமாகும். கர்ம யோகியின் முன்னே எப்படிப்பட்டவர் வந்தாலும், சதா சுயம் நியாரா, பியாரா மற்றும் கர்ம பந்தனத்தில் இருந்து விடுபட்டு இருப்பார்.

## பலவீனங்களே இல்லாமல் இருக்கக்கூடிய சாட்சாத்கார் மூரத் பவ !

இப்போது சாட்சாத்காரத்தின் அலைகள் பரவுவதற்காக எந்த ஒரு பலவீனமும் இல்லாமல் இருப்பதற்கான திட்டம் தயாரியுங்கள். தந்தை எப்படி இருக்கின்றாரோ அதே மாதிரி தந்தையைப் போன்று ஆகி விடுவீர்களானால் தானாகவே சாட்சாத்காரம் ஆகும். தந்தையைப் போன்று சமானமாகி விட்டால் சாட்சாத்காரத்திற்கான சாவி கிடைத்து விட்டது போலாகும். இந்த திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்தால் சேவை உங்கள் பாதங்களில் சரணடையும். இப்போது கொஞ்சம் கொஞ்சம்தான் அனுபவம் ஆகிறது. ஆனால் இந்த அலைகளை நாலா பக்கமும் பரவச் செய்யுங்கள்.

## சேவையில் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் அனுபவத்தைச் செய்யக்கூடிய தியாகி மற்றும் தபஸ்வி மூரத் பவ !

தியாகி என்றால் எப்படிப்பட்ட நேரமாக இருந்தாலும், எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும், எப்படிப்பட்ட மனிதர் வந்தாலும் அதற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு தனக்கும் மற்றவருக்கும் நன்மை செய்யக் கூடிய விதத்தில் சதா இலகுவாக இருப்பர். தனது பெயர், தனது சம்ஸ்காரம் மற்றும் அல்பகால சாதனங்களை தியாகம் செய்து சூழ்நிலை மற்றும் சமயத்துக்கு ஏற்றவாறு சிரேஷ்டமான ஸ்திதியை தாரணை செய்து கொள்ள வேண்டும். தியாகம் செய்து விட்டோம் என்ற அபிமானமும் வரக்கூடாது மற்றும் தபஸ்யா என்றால் ஒரு தந்தையைத் தவிர வேறு எவரும் இல்லை. இத்தகைய தியாகி மற்றும் தபஸ்வி மூரத் என்னும் வரதானத்தை பிராப்தி செய்யக்கூடிய ஆத்மா ஒவ்வொரு அடியிலும் வெற்றியை அனுபவம் செய்யும்.

## பெரியவர்களுடைய அறிவுரைகளை நடைமுறையில் கொண்டு வரும் சிரேஷ்ட ஸ்வமான் அதிகாரி மற்றும் மானனீய (கௌரவத்திற்குரிய) பவ !

உலக ஒற்றுமைக்காக எந்த ஒரு அறிவுரை கிடைத்தாலும் அதைப் பற்றி சரிதானா இல்லையா என சிந்திப்பதற்குப் பதிலாக ஆம், தயாராக இருக்கின்றேன் என்பதுதான் சிரேஷ்ட சேவாதாரியின் விசேஷத்தன்மை ஆகும். இது பணிந்து விடுவதையோ, கீழே தள்ளப்பட்டு விடுவதையோ குறிப்பதாகாது, ஆனால் உயர் நிலையை அடைவதாகும். ஏனெனில் அப்படியே ஏற்றுக் கொள்வது என்பதன் பொருள் கௌரவத்திற்கு உரியவர்கள் ஆவதாகும். பெரியோர்களை மரியாதை செய்வது என்பது சுய கௌரவத்தைப் பெறுவதாகும். அதிகாரி ஆதல் என்பதன் பொருள் சதா காலத்திற்கும் மானம் மரியாதை பெறுவதாகும். பெரியோர்கள் சொன்னவுடன் செய்வது; இத்தகைய சேவாதாரிகள் தந்தைக்குப் பிரியமானவர் மற்றும் அனைவருடைய மதிப்பிற்கும் உரியவர்கள் ஆகி விடுவர்.

## சிரேஷ்ட அதிர்வுகள் (VIBRATIONS) சிரேஷ்ட வாயுமண்டலத்தின் மூலம் பாபாவின் ஜொலிப்பைக் காண்பிக்கக் கூடிய சிரேஷ்ட யோகி பவ !

இப்போது சகஜ யோகியின் அலையை மாற்றுங்கள். எளிய என்னும் வார்த்தையை பவித்ர பிரவிருத்தியில் (இல்லறம்) உபயோகிக்காதீர்கள். சிரேஷ்ட யோகியின் அலை, மஹாதபஸ்வி, அல்லது சாட்சாத்கார் மூரத் ஆகும் அலை, ஆன்மீக அலையைப் பரப்புக. சிரேஷ்ட யோகி ஆகி சிரேஷ்ட அதிர்வலைகள், சிரேஷ்ட வாயுமண்டலத்தின் மூலம் சாட்சாத் பாபாவின் ஜொலிப்பை அனுபவம் செய்வியுங்கள். வாணியின் மூலம் செய்தியைத் தருவதற்குப் பதிலாக அனுபவம் செய்விப்பதற்கான, அனுபவி ஆக்குவதற்கான போட்டியில் இருங்கள்.

## ஒவ்வொரு விநாடியும் பாபாவின் வளர்ப்பில் இருக்கும், அனைவருக்கும் பாலனையை கொடுக்கக்கூடிய சிநேகி ஸ்வரூப் பவ !

சக்திகளை (தேவிகளை) சதா பாலனையை எடுத்துக் கொள்ளும் சங்கல்பத்தால் தாயின் ரூபத்தில் நினைவு செய்கின்றனர். ஆக இப்போது சிநேகி சொரூபத்தின் வரதானத்தின் மூலம் விசேஷ பாலனையைக் கொடுங்கள். பாலனையின் அர்த்தமே அவர்களை சக்திசாலி ஆக்குவது. அவர்களது சங்கல்பம் மற்றும் சக்திகளை வெளிக் கொணர்வது, உற்சாகம்-ஆர்வமாய் இருக்கச் செய்வது. யார் தொடர்பில் வந்தாலும் நாம் ஈஸ்வரிய பாலனையின் கீழ் இருக்கிறோம் என்ற அனுபவம் செய்ய வேண்டும்; இவர்கள் பிரபுவின் பாலனையின் திருஷ்டியை தந்து கொண்டு இருக்கின்றனர். இதுவே சம்பந்தத்தில் கொண்டு வருவதாகும்.

## பிரவிருத்தியில் இருந்தாலும் நிவிருத்தியில் (சந்யாசம், பற்றற்ற) இருக்கக் கூடிய பாப்சமான் விஷ்வ சேவாதாரி பவ !

பிரவிருத்தியில் இருந்து கொண்டே நிவிருத்தியில் இருக்க வேண்டும். இந்த பாடத்தைத் தினமும் தங்களுக்குத் தானே படிப்பியுங்கள். ஒவ்வொருவரும் தத்தம் சேவையில் சுறுசுறுப்பாகி விட்டீர்கள். ஆனால் தற்பொழுது எல்லையற்ற உலக சேவையின் நஷா வேண்டும். அதிகரித்துக் கொண்டு இருக்கும் பிரவிருத்தியில் சமாளித்துக் கொண்டே புத்தி எல்லையற்ற சேவைக்காக தயாராக வேண்டும். எப்படி பிரம்மாபாபா காரியங்களை செய்து கொண்டே தனக்குத்தான் லேசாக இருந்தாரோ, ஒரு போதும் வேலையின் பளு அவரது முகத்தில் தென்படவில்லையோ, சதா எல்லையற்ற விஷயத்திலும் புத்தி இருந்ததோ அவ்வாறே தந்தையை பின்பற்றுங்கள்.

## அனைத்து விதமான போராட்டங்களில் இருந்தும் பாதுகாப்பாக லைட் ரூபதாரி, சக்தி ஸ்வரூப் பவ !

இப்பொழுது மிகவும் மோசமான காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இதில் அநேக விதமான போராட்டங்கள் இருக்கும். துஷ்ட ஆத்மாக்களின் (EVIL SOULS) தொந்தரவு இருக்கும், கெட்ட திருஷ்டி உடையவர்களின் கொடிய நோக்கம் இருக்கும், இயற்கையின் சோதனை மற்றும் நோய்களின் விளைவு பயங்கரமாய் இருக்கும். ஆனால் இவை அனைத்தில் இருந்தும் தப்பித்து பாதுகாப்பாக இருப்பதற்கான சாதனம் லைட் ரூபத்தில் இருக்கும் அப்பியாசம். இது ஏதோ லைட் போய்க் கொண்டு இருக்கிறது என்று பிறர் எண்ணும் அளவு அப்பியாசம் செய்க. சரீரம் மற்றும் சாதாரண ரூபம் தென்பட வேண்டாம். சக்தி ரூபத்தின் ஜொலிப்பு மட்டுமே தெரியட்டும்.

## தனது சிரேஷ்ட ஸ்திதியின் மூலம் பரஸ்திதி மற்றும் விக்னங்களைக் கடந்து செல்லும் தீவிர புருஷார்த்தி பவ !

ஏதேனும் பரஸ்திதியோ தடைகளோ வந்தால் அவைகளைக் கண்டு பயப்படாது அவைகளை சாலை ஓரக் காட்சிகளாய் உணர்ந்து, தனது உயர்ந்த ஸ்திதியில் இருந்து, பெரிய விஷயங்களையும் சிறிதாக்கி விட வேண்டும். அந்த சமயம் கடந்த பிறகு, தடைகள் முடிந்த பிறகு, அவைகளை உட்கார்ந்து திரும்பவும் சிந்திக்கக் கூடாது. சதா குஷியில் ஆடிக் கொண்டே இரு. இடையிலேயே ஏதேனும் நடந்து விட்டாலும் கூட அதைப் பற்றி ஆழமாய் நினைக்காது புத்தியில் நடந்து முடிந்தவைகளை கடந்து விட்டதாகக் கருதி கவலை அற்று இரு. சதா உற்சாகம் ஆர்வத்தில் இரு. தீவிர புருஷார்த்தி ஆகி விடுவாய்.

**ஞானத்தின் பிரகாசத்தின் மூலம் துக்கத்தை சுகமாக்கக் கூடிய மாஸ்டர் சுகதாதா பவ !**

துக்கத்தின் அலைகளை உற்பத்தி செய்யக் கூடிய பரஸ்திதிகளிலும் கூட என்ன இனிமையான டிராமா இது, ஆஹா என்னே அருமை ஒவ்வொரு பாகதாரியின் பாகம்... இந்த ஞானத்தின் பிரகாசத்தின் மூலம் துக்கத்தை சுகமாக மாற்ற வேண்டும். மாஸ்டர் சுகதாதாவாகி சுயம் தான் சுகம் என்னும் ஊஞ்சலில் ஆட வேண்டும். பிறருக்கும் சுகத்தின் அலைகளை கொடுப்பதற்கு நிமித்தமாக வேண்டும். இம்மாதிரி சுகத்தை வழங்கும் அதிகாரத்தின் கோடு எவரும் அழிக்க முடியாத அளவு தெளிவாகவும் ஆழமாகவும் இருக்கட்டும். அப்போதே மாஸ்டர் சுகவள்ளல் என்று கூற முடியும்.

## சதா தனது ஸ்வதர்மத்தில் ஸ்திரமாய் இருக்கும் மாஸ்டர் சாந்தி தேவா பவ !

ஆத்மாவின் ஸ்வதர்மம் சாந்தி. மேலும் தர்மத்தைப் பற்றி சொல்லும் போது கூட 'அடியே(தான் நிற்கும் இடமே) அதிர்ந்தாலும் தர்மத்தை விடக் கூடாது' என்று சொல்லப்படுகிறது. தலையே போனாலும் சரி தர்மம் போகக் கூடாது. ஆக சுகம் சாந்தியின் ஆஸ்தியின் அதிகாரி ஒரு போதும் சாந்தியின் தர்மம், சாந்தியின் அதிகாரத்தை விட்டுவிட முடியாது. அவர்கள் அசாந்தியைக் கூட சாந்தி ஆக்குபவர்கள். சதா சாந்தியின் கிரணங்கள் தன் மூலம் பிறருக்கு வழங்கக் கூடிய மாஸ்டர் சாந்தி தேவா ஆகி அனைவருக்கும் சுகம் மற்றும் சாந்தியின் தானத்தை வழங்குகின்றனர்.

**ரத்னவியாபாரி பாபாவோடு ரத்னம் வியாபாரம் செய்யக் கூடிய மாஸ்டர் ரத்னக்காரர் பவ !**

ரத்னக்காரரான பாபா ரத்னங்களை தட்டுதட்டாக நிரப்பி கொண்டிருக்கிறார். அந்த ரத்னங்களோடு கூடவே விளையாடிக் கொண்டு நடந்து வாருங்கள். நாள் முழுவதும் ரத்னங்களின் வியாபாரத்தையே செய்து வாருங்கள். புத்தியில் ஞான ரத்னங்களின் கருத்துக்களை எண்ணிக் கொண்டிருங்கள், அப்பொழுது ரத்னவியாபாரி, ரத்னசுரங்கத்தின் எஜமானர் ஆகி விடுவீர்கள். இந்த ரத்னங்களை எவ்வளவு காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். மேலும் மாஸ்டர் ரத்னக்காரராகி பிறரையும் நிரம்பி வழியச் செய்யுங்கள்.

## அனைத்து ஆத்மாக்களுக்கும் ஞான அருமருந்து கொடுத்து உண்மையான வழியைக் காண்பிக்கக் கூடிய உண்மையான சேவாதாரி பவ !

இப்பொழுது ஏதேனும் உதவி, புதிய வழி கிடைக்க வேண்டும் என்று அனைத்து ஆத்மாக்களுக்கும் சங்கல்பம் எழுகிறது. அவர்களுக்கு உண்மையான வழியைக் காண்பிப்பது, ஞானத் துளிகளை வழங்குவது உண்மையான சேவாதாரியான உங்களது வேலை ஆகும். ஏக்தா(ஒருமைநிலை) மற்றும் திடத்தன்மை இந்த இரு சாதனங்களே வழி காண்பிப்பவைகள் ஆகும். குழந்தைகளாகிய உங்களின் ஒற்றுமை நிறைந்த சுப பாவனை இப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு பாவனையின் பலனை அளிப்பதற்கு நிமித்தம் ஆகும். அனைவரின் சுப சங்கல்பமும் அந்த ஆத்மாக்களிடமும் சுப காரியத்தைப் புரியும் சங்கல்பத்தை உற்பத்தி செய்யும்.

## ஞான யோகத்தை பிரத்யக்ஷம் செய்யும் குஷியின் கஜானாவினால் குஷியின் கஜனாவின் சம்பன்ன பவ !

அனைத்திலும் பெரிய கஜானா குஷி. ஞானம் இருந்து, யோகம் இருந்து, குஷி இல்லை என்றால் எந்த யோகமும் யதார்த்தமானதல்ல. ஞானி, யோகியின் முன்னர் எந்தவித பரஸ்திதி வந்தாலும் சரி குஷி மட்டும் மறைந்து போகவே கூடாது. உங்களுடைய குஷியைப் பார்த்து உங்களுக்கு என்ன கிடைத்துள்ளது என்று பிறர் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் குஷியின் கஜானாவால் நிரம்பியுள்ள ஆத்மா எனலாம். இதுவே ஞான யோகத்தின் பிரத்யக்ஷதாவின் சகஜ சாதனமாகும்.

## விக்னங்களின் பிரபாவத்தில் இருந்து சதா பாதுகாப்பாய் இருக்கும் பிரபாவஷாலி ஆத்மா பவ !

விக்னங்கள் வரலாம், ஆனால் அதன் பிரபாவம் படக்கூடாது. சுயம் நீங்களே பிரபாவஷாலி ஆத்மாவாகும் போது பிறர் எவரது பிரபாவமும் ஏற்பட முடியாது. சூரியனை எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் மறைக்க முடியாது. இப்படிப்பட்ட பிரபாவஷாலி ஆத்மாக்களை எந்த வித பிரபாவமும் தன் பக்கம் கவர்ந்து ஈர்க்க முடியாது. ஒரே ஒரு தந்தை, இரண்டாவது வேறு எவரும் இல்லை – இந்த லகனிலேயே மூழ்கி இருப்போரின் மீது எந்தவித தடையும் பிரபாவத்தை ஏற்படுத்த முடியாது.

## ஞானக் கடல் அலைகளில் நீந்தி சமாளிக்கக் கூடிய அனுபவி மூரத் பவ !

சதா பாப்தாதாவின் அன்பிலே மூழ்கி இருப்போர் மாஸ்டர் அன்புக் கடலாகி விடுகின்றனர். எவ்வளவு ஞான சூரிய கிரணங்களின் பிரகாசத்தை அனுபவம் செய்கின்றனரோ அவ்வளவு அன்பின் அலைகள் தாமாகவே வந்து மோதுகின்றது. தினமும் அமிர்தவேளை ஞானசாகரரின் ஞான முரளியின் ஞான அலைகள், அன்பு, சுகம், சாந்தி மற்றும் சக்தியின் அலைகள் ஆரவாரிக்கின்றன. இந்த அலைகளிலேயே நீந்துவதும் சமாளிப்பதுமான இந்த அனுபவத்தின் ஆஸ்தியை அதாவது வரதானத்தை அடைய வேண்டும். இதுவே அலௌகீக பிராமண பிறவியாகும்.

## வீணானவைகளின் கணக்கை முடிக்கச் செய்யும் சதா ஸ்மிருதி ஸ்வரூபத்தில் இருந்து ஸமர்த்தி ஸ்வரூப் பவ !

எப்படி சூரியன் இருட்டையும் அழுக்குகளையும் போக்குகிறதோ அப்படி சமர்த்த ஆத்மாக்கள் வீணானவைகளை அகற்றுகின்றனர். எப்பொழுது வரதானம் (நாம் ஸமர்த் ஆத்மாக்கள் என்ற) நினைவில் இருக்கிறதோ அப்பொழுது சதா சிரேஷ்ட சங்கல்பம், சிரேஷ்ட பேச்சு, சிரேஷ்ட சம்பந்தம், தொடர்பு ஆகியவை அதிகரித்துக் கொண்டே போகும். ஏனெனில் ஸ்மிருதி இயல்பாகவே ஸ்திதியை ஏற்படுத்துகிறது. எனவே ஸ்மிருதி சொரூபத்திலிருந்து சமர்த்தி சொரூபமாகும் பயிற்சியை செய்து வாருங்கள். இதே நினைவில் மூழ்கி இருப்பது சிரேஷ்ட வாழ்க்கையாகும்.

## ஒரே ஒருவரில் முழு உலகையும் அனுபவம் செய்யக் கூடிய சதா ஏக்ரஸ்-அச்சல்-அடோல் பவ !

எவர்கள் சதா ஒரே ரசனை என்னும் ஸ்திதியில் இருகின்றனரோ ஒரே ஒருவரில் முழு உலகத்தின் அனுபவத்தை செய்கின்றனரோ அவர்களின் ஸ்திதி ஆடாது, அசையாது, உறுதியாக இருக்கிறது. ஏனெனில் எங்கு ஒரே ஒருவரோ அங்கு தொந்தரவு கிடையாது. எங்கு இருவரோ அங்கு குழப்பம் ஏற்படுகிறது. ஆனால் ஒரே ஒருவரிடமே அனைத்தும் கிடைக்கும்போது அடுத்தவரிடமும் ஏன் செல்ல வேண்டும்? ஒரே இடம், ஒருவரிடமிருந்து அனைத்து பிராப்தியும் கிடைக்கிறது என்றால் வேறு என்ன வேண்டும். பாபா கிடைத்தார், அனைத்தும் கிடைத்து விட்டது. இந்த குஷியில் சதா நாட்டியமாடிக் கொண்டே இருங்கள்.

## முரளிதரன் முரளியின் கீதத்தின் மூலம் எல்லையற்ற பாதுஷா ஆகக் கூடிய ஸ்வராஜ்ய அதிகாரி பவ !

முரளிதரின் முரளி தேகத்தின் சுக துக்கங்களை மறக்கச் செய்கிறது. எவருக்கு முரளிதரின் முரளியின் போதை ஏறுகிறதோ அவர்கள் இந்த தரணி மற்றும் தேகத்திலிருந்து மேலே பறக்கும் அனுபவம் செய்கின்றனர். முரளியின் ராகத்தின் மூலம் அவிநாசி ஆசீர்வாதத்தின் மருந்து கிடைத்த உடனேயே சரீரம் ஆரோக்கியம் அடைகிறது. விதி பூர்வமாய் முரளியைக் கேட்போர் சதா அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடுகின்றனர்.

## முரளியின் ஒவ்வொரு வார்த்தையையும் விதி பூர்வமாய்க் கேட்டு சிரேஷ்ட கதியை அடையக் கூடிய ஸித்தி ஸ்வரூப் பவ !

முரளியின் ஒவ்வொரு மஹாவாக்கியமும் 2500 வருட சம்பாத்தியத்திற்கான ஆதாரமாகும். ஒரே மஹா வாக்கியம் பொக்கிஷத்தின் சுரங்கமாக்கி விடுகிறது. முரளியின் ஒவ்வொரு கருத்தையும் விதிப் பூர்வமாய்க் கேட்டு, அதன் மூலம் கிடைத்த ஸித்தி நிலையின் கணக்கின் போக்கை அறியக் கூடியவர்கள் சிரேஷ்ட நிலையை அடைகின்றனர். எப்படி கர்மத்தின் கதி ஆழமானதோ அவ்வாறே விதிப்பூர்வமாய்க் கேட்பதும், தனக்குள் அடக்கிக் கொள்வதும் மிக சிரேஷ்டமானது ஆகும். முரளியே பிராமண வாழ்வின் சுவாசம் ஆகும். அமிர்தவேளை விதி பூர்வமாயும், மகத்துவ பூர்வமாயும் முரளியைக் கேட்கும்போது நாள் முழுவதும் ஒவ்வொரு கர்மத்திலும் ஸித்தி சொரூபம் தானாகவும், எளிதாகவும் ஆகி விடுவீர்கள்.

## சதா ஒருவரின் ஆழத்தில் போய்விடும் ஏகாந்தவாசி ஏகாக்ரசித் பவ !

எப்போது நாலா புறமும் கலாட்டாவாக இருக்குமோ அச்சமயத்தில் ஒரே ஒருவரின் ஆழத்தில் மூழ்கிப் போனால் கூச்சலுக்கு நடுவிலும் ஏகாந்தத்தை அனுபவம் செய்வீர்கள். ஏகாக்ரசித் ஆவது என்றால் ஒரே ஒரு பாபாவைத் தவிர வேறு எவரும் சங்கல்பத்தில் கூட வரலாகாது. ஒரே ஒரு பாபாவில் முழு உலகின் அனைத்து பிராப்திகளும் அனுபவம் ஆக வேண்டும். இப்படிப்பட்ட சிரேஷ்ட ஸ்திதியின் ஒரு சங்கல்பம்கூட பாபா சமமான அனுபவத்தை செய்விக்கிறது. இதற்கு சுய அப்பியாசம் மிகவும் அவசியமாகும். முதல் பிரிவில் வர ஏகாக்ரதா சக்தியின் விசேஷ பயிற்சி செய்க.

## நியாரா-பியாரா நிலையின் சமநிலையின் மூலம் சர்வ புருஷர்களிலும் (ஆத்மாக்கள்) மேலான பரிஸ்தா பவ !

பரிஸ்தா யார் என்றால் தேகம், தேக உலகம் இந்த இரண்டோடும் உறவும் இல்லாதவர்கள். சரீரத்தில் சேவை பொருட்டு இருக்கின்றனர், உறவின் ஆதாரத்தில் அல்ல. எப்படிப்பட்ட ஆத்மா ஆயினும் சரி, சேவையின் சம்பந்தம் அன்பானதாய் இருக்கிறது. எங்கு சேவையின் பாவனை உள்ளதோ அங்கு சதா சுப பாவனை இருக்கும். இப்படிப்பட்ட சுப பாவனை உடையோரே சதா அதி நியாரா மற்றும் பியாரா தாமரை மலர் போன்று இருக்கின்றனர். அவர்களே அனைவரிலும் மேலான பரிஸ்தாவில் இருந்து தேவதை ஆகின்றனர்.

## கிரீடம் மற்றும் சிம்மாசனத்துடன் திரிமூர்த்தி திலகதாரி சிரேஷ்ட சேவாதாரி பவ !

விஷ்வ கல்யாணத்தின் கிரீடம், பாப்தாதாவின் இதயமெனும் சிம்மாசனத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு சுய ராஜ்யத்தின் திலகம் கிடைக்கிறது. கூடவே பிறவி எடுத்த உடனேயே குடும்பத்தில் அனைவரின், பாப்தாதாவின் சிநேகி மற்றும் சகயோகியின் திலகம் மற்றும் சேவை செய்யும் திலகமும் கிடைத்து விடுகிறது. இப்படி திரிமூர்த்தி, திலகதாரி குழந்தைகள் விசேஷ சேவாதாரி ஆகி அநேக ஆத்மாக்களுக்கு உற்சாகம், ஆர்வத்தைக் கொடுப்பதற்கு நிமித்தமாகி விடுகின்றனர்.

## திரிமூர்த்தி லட்சியத்தை அடையக் கூடிய பிரபு பிரேமி பவ !

பிரபுவுக்கு பிரியமானவர்கள் எவரோ அவர்கள் எளிதில் <1> தேக உணர்விலிருந்து, <2> தேகத்தின் அனைத்து உறவுகளில் இருந்து, <3> தேகம், தேக உறவின் அற்பகால பிராப்தியின் கவர்ச்சியில் இருந்து விடுதலை ஆகின்றனர். அதாவது, இந்த திரிமூர்த்தி லட்சியத்தை எளிதில் அடைகின்றனர். அவர்கள் தியாகம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் சிரேஷ்ட சர்வ பிராப்தியின் பாக்யம் தானாகவே தியாகத்தை செய்விக்கிறது. இந்த பிரபு அன்பே பிராமண வாழ்வின் ஆதாரமாகும். புதிய வாழ்வின் உயிர்ப்பிச்சை ஆகும்.

## ஒரே ஒரு பாபா அடுத்தது வேறு எவரும் இல்லை – இந்த ஸ்திதியில் இருக்கக் கூடிய மஹா தபஸ்வி பவ !

ஒரே ஒரு பாபா வேறு எவரும் இல்லை – இதுவே மஹா தபஸ்யா. இப்படிப்பட்ட தபஸ்யாவின் பலமே சிரேஷ்ட பலம் என்று வர்ணிக்கப்பட்டு உள்ளது. யார் இந்த தபஸ்யாவில் இருக்கின்றனரோ அவர்களிடம் மிகுந்த பலம் இருக்கிறது. இந்த தபஸ்யாவின் பலம் உலகத்தை மாற்றுகிறது. ஹட யோகிகள் ஒரே காலில் நின்று தவம் செய்கின்றனர். ஆனால் குழந்தைகள் ஒரு காலில் இல்லை, ஒரே நினைவில் இருக்கின்றனர். ஒரே ஒருவர் அவ்வளவே. இப்படிப்பட்ட தபஸ்யா உலக மாற்றத்தைச் செய்விக்கிறது.

**தாயையும் தந்தையையும் பின்பற்றி சதா சக்திசாலி ஆகும் மஹாபுண்ணிய ஆத்மா பவ !**

எப்படி நினைத்த உடன் செய்து முடிக்கும் விசேஷம் பிரம்மாபாபாவிடமும் ஜகதம்பா விடமும் இருந்ததோ அப்படி அவர்களைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு கர்மத்திலும் சிரேஷ்ட பலனை சுடச்சுட உண்ண வேண்டும். அதாவது எந்த ஸ்ரீமத் அச்சமயத்தில் கிடைக்கிறதோ அதை உடன் நடைமுறையில் கொண்டு வந்தால் பிரம்மாபாபா சமமாய் தானும் மஹாபுண்ணிய ஆத்மாவாகி முதல் நம்பரில் வர முடியும். பிறகு ஒருபோதும் எவ்வித பலஹீனமோ வியாதியோ வர முடியாது.

## சுயதர்ஸனத்தின் மூலம் சதா பிரசன்னசித் (மகிழ்ச்சி) ஆக இருக்கும் சர்வ பிராப்தியின் அதிகாரி பவ !

சுதர்ஸன சக்கரம் சதா ஒரே விரலால் காண்பிக்கப்படுகிறது. ஒரே ஒரு விரல் என்றால் ஒரே சங்கல்பம் – நான் பாபாவினுடையவன், பாபா என்னுடையவர் – இந்த ஒரே சங்கல்பம் என்னும் விரலில் சுதர்ஸன சக்கரம் சுற்றுகிறது. அப்போது பிரசன்னசித் ஆக இருக்க முடிகிறது. பிரசன்னசித் என்றால் எந்தவித கேள்வியும் கிடையாது. இப்படிப்பட்ட மகிழ்ச்சி ஆன ஆத்மாவே சர்வ பிராப்திகளின் அதிகாரி ஆவார். சொப்பனத்தில்கூட பாபாவின் முன்னர் பிச்சைக்கார ரூபம் கூடாது. சர்வ கஜானாவின் பண்டகசாலை நிரம்பி வழியும். அனைத்தையும் அடைந்தாகி விட்டது என்ற பாடலையே பாடிக் கொண்டிருப்பார்.

## ஒரே ஒரு லகனில் மூழ்கிப் போகக் கூடிய சதா மலர்ச்சியான சுக ஸ்வரூப் பவ !

ஒரே ஒரு லகனில் மூழ்கிப் போவோர் நிரந்தர யோகிகள். நிற்கும்போதும், நடக்கும்போதும் நான் ஒரு சிரேஷ்ட ஆத்மா, இந்த எண்ணத்தில் இருக்கிறார்கள். எவ்வாறு தந்தையோ அவ்வாறு குழந்தை; எது பாபாவின் குணமோ அது குழந்தையின் உடையது. இவ்வாறான யோகி எப்போதும் புன்சிரிப்புடன் இருப்பார்கள். மனதின் மகிழ்ச்சி சரீரத்தின் மீதும் வருகிறது. எப்போது எல்லாவித பிராப்தி சொரூபமாக இருக்கின்றோமோ எங்கு எல்லாவித பிராப்தி இருக்கிறதோ அங்கு மகிழ்ச்சி இருக்கும். துக்கத்தின் பெயர் அடையாளம் இல்லை. சிறிதளவுகூட துக்க கவர்ச்சியின்மைதான் சுகமான சொரூபம்.

## எப்பொழுதும் ஒரு ரசனையில் இருக்கும் அழிவு இல்லாத யுகத்தின் ஆத்மா அவிநாசியாக இருப்பீர்களாக !

அவிநாசி என்றால் எப்பொழுதும் ஒரே ரசனையில் இருப்பது. சிலசமயம் மேலும், சிலசமயம் கீழும் என்ற நிலை இல்லை, ஏனென்றால் அவிநாசி ஆத்மாக்கள். ஆக இந்த அவிநாசி பவ என்ற வரதானம் எல்லாவற்றிலும் சிரேஷ்டமான வரதானமாகும். ஆகவே எப்பொழுதும் உயர்ந்த ஸ்திதியில் இருங்கள். பாபாவின் குழந்தையான பிறகு விசேஷமான ஆத்மா ஆகி விட்டோம். ஆகவே விசேஷ ஆத்மாவின் ஒவ்வொரு சங்கல்பம், சொல் மற்றும் செயல் விசேஷமாக இருக்கும். அவ்வாறான, விசேஷமான சொல், செயல் மற்றும் சங்கல்பம் இருப்பின் இதன் மூலம் மற்ற ஆத்மாக்களுக்கும் விசேஷமாக பிரேரணை கிடைக்கும்.

## சோம்பல்தன்மை மற்றும் கவனக்குறைவின் தியாகத்தின் மூலம் ஸித்தி ஸ்வரூப சகஜ யோகி ஆகுக !

சங்கம யுகம் சகஜமான ஸித்தி அடையக்கூடிய பிராப்தியின் யுகம். தற்போது சகஜமான பிராப்தி பெறும் சமயம் (சீசன்); பெரிய உள்ளமுள்ள வள்ளல், பாக்யத்தை வழங்கக்கூடிய வள்ளல் பாபா விசால மனம் கொண்டவர். பாபாவின் உள்ளம் என்ற ஆசனத்தில் அமரும் குழந்தைகளுக்கு முயற்சி செய்யத் தேவை இல்லை. பிறகு எந்த விஷயத்திற்காவது முயற்சி செய்யத் தேவைப்பட்டால் அதற்குக் காரணம் சோம்பலும் கவனக்குறைவும். யார் எப்பொழுதும் நினைவு சொரூபம் என்ற கோட்டைக்குள் இருக்கிறார்களோ அவர்கள் ஸித்தி சொரூபமாக சகஜ யோகிகளாக இருப்பார்கள்.

## திட சங்கல்பம் மற்றும் டபுள் லைட் ஸ்திதியின் மூலம் எல்லோர் உடைய விக்னத்தை போக்குபவர்களாக ஆகுக !

எப்பொழுதும் நாம் விக்னத்தை (தடையை) விநாசம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறோம் என்ற வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும். விக்னம் இருக்கிறது, விக்னம் இருக்கிறது என்று சொல்வதன் மூலம் விக்னம் முடிந்து போவதில்லை. பலஹீனமான எண்ணத்தின் மூலம் பலஹீனமான சிருஷ்டி படைக்கப்படுகிறது. ஆகவே எப்பொழுதும் சக்திசாலி மற்றும் திட சங்கல்பம் வையுங்கள். நான் சிரேஷ்ட ஆத்மா, விக்னத்தைத் தீர்ப்பவன் - இதன் மூலம் விக்னங்கள் மறைந்து விடும். என்னுடையது என்ற பளுவை பாபாவிடம் அர்ப்பணித்து விட்டு டபுள் லைட் ஆகி விடுங்கள். காரணம் எங்கு என்னுடையது என்று உள்ளதோ அங்கு விக்னத்தின் வலை இருக்கும்.

## குஷி என்ற பொக்கிஷத்தில் நிரம்பியுள்ள புண்ணிய ஆத்மா பவ !

எந்த குழந்தைகள் சங்கம யுகத்தில் புண்ணிய ஆத்மாவாக இருக்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் பூஜிக்கத் தகுந்தவர்களாகிறார்கள். ஆகவே தன்னை புண்ணிய ஆத்மா என்று புரிந்து கொண்டு அவ்வாறு ஒவ்வொரு சங்கல்பம், சொல், செயல் செய்து கொண்டே செல்லுங்கள். எப்பொழுது புண்ணியத்தின் பேலன்ஸ் அதிகமாகின்றதோ அங்கு பாவங்கள் குறைந்து கொண்டே போகும். எவ்வளவு புண்ணியத்தின் செயல் செய்கிறோமோ அவ்வளவு குஷியும் இருக்கும்; காரணம் புண்ணிய செயலின் குஷியின் பொக்கிஷம் பெருகிக் கொண்டே செல்கின்றது மற்றும் பாவ கர்மத்தால் குஷி இல்லாமல் போகிறது. ஒருவேளை குஷி மறைந்து போனால் தன்னை சோதனை செய்து கொள்ளுங்கள்; காரணம் நிச்சயமாக கடுகு அளவாவது பாவம் கண்டிப்பாக இருக்கும்.

## கர்மத்தின் கட்டிடத்தை ஆடாமல் செய்யும் நிச்சய புத்தி விஜயி (வெற்றி) ஆத்மா ஆகுக !

நிச்சயத்தின் அடையாளம் வெற்றி. நிச்சய புத்தியாக இருப்பவர்களை மாயா ஒருபோதும் அசைக்க இயலாது. இவர்கள் மாயாவை அசைப்பவர்களாக இருப்பார்கள், தான் அசைய மாட்டார்கள். நிச்சயத்தின் அஸ்திவாரம் ஆடாமல் இருப்பது; ஆக தானும் ஆடாமல் இருப்பவர்கள். எவ்வாறு அஸ்திவாரம் உள்ளதோ அவ்வாறு கட்டிடம் வலுவாக அமையும். நிச்சயத்தின் அஸ்திவாரம் ஆடாமல் இருந்தால் கர்மத்தின் கட்டிடமும் ஆடாமல் இருக்கும். ஆகவே தன் மீது, பாபா மீது, ஞானத்தில் சம்பூர்ண நிச்சய புத்தியாக இருங்கள்.

## குணதானத்தின் மூலம் எல்லோருக்கும் உற்சாகத்தை, உல்லாசத்தை நிரப்பும் மஹாதானி மற்றும் அனுபவ மூர்த்தியாக இருக்கக் கடவீர் !

ஞான தானத்தின் கூடவே குண தானத்திற்கும் மிகவும் மகத்துவம் உள்ளது. குணங்களில் மஹாதானியாக இருக்கும் அனுபவசாலி ஆத்மா எப்பொழுது சிலரின் அவகுணத்தைப் பார்த்தாலும் தாரணை செய்ய மாட்டார்கள். யாருடைய அவகுணத்தின் சங்க தோஷத்தில் வர மாட்டார்கள் மற்றும் குண தானத்தின் மூலம் மற்றவர்களின் அவகுணத்தை நல்ல குணமாக மாற்றுவார்கள். எவ்வாறு யோக தானம், சேவையின் தானம் புகழ் வாய்ந்ததாக இருக்கிறதோ அவ்வாறே குண தானமும் விசேஷமான தானமாகும். குண தானத்தின் மூலம் ஆத்மாவில் உல்லாசம் உற்சாகம் என்ற பிரகாசத்தின் (ஜலக்) அனுபவத்தை செய்விக்க முடியும்.

## இரண்டு சேவையின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் இரண்டு ஆஸ்தியின் அதிகாரி, இரண்டு கிரீடத்தை அணிபவர்கள் ஆகுக !

டபுள் லைட், இரண்டு கிரீடத்தை அணிபவர்கள், இரு பூஜிக்கத்தக்க வரதானம் எந்த குழந்தைகளுக்குப் பிராப்தி ஆகிறது என்றால் யார் இரண்டு சேவையில் பிஸியாக இருக்கிறார்களோ அவர்களுக்கு; கர்மம் செய்தாலும், வாயின் மூலம் பேசினாலும் ஆனால் மனதுடன்கூட கர்மம் செய்பவர்களுக்கு டபுள் சேவாதாரி என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறான டபுள் சேவாதாரி மாயாவை வெற்றி கொண்டவர்களாக இருப்பார்கள். மனது என்றால் நினைவு, பாபாவின் உதவி. எங்கு பாபா எப்பொழுதும் உடன் இருக்கிறாரோ உதவியாளராக இருக்கிறார்; அங்கு மாயா நம்முடன் இருக்க இயலாது.

## சுய ராஜ்யத்தின் மூலம் விஷ்வத்தின் ராஜ்யத்தை பிராப்தி செய்யும் டபுள் ராஜ்ய அதிகாரி ஆவீர்களாக !

சுய ராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை. பல முறை நீங்கள் சுயராஜ்யத்தின் மூலம் விஷ்வத்தின் ராஜ்யத்தைப் பிராப்தியாக பெற்று உள்ளீர்கள். டபுள் ராஜ்ய அதிகாரியாக ஆகி இருக்கிறீர்கள். சுய ராஜ்யம் எப்பொழுதும் ராஜ யோகி மூலம் ராஜ்யஅதிகாரி ஆகச் செய்கிறது. சுய ராஜ்யத்தின் மூன்று கண்கள், திரிகாலதரிசி மூன்று லோகத்தின் அதிகாரி ஆகச் செய்கிறது. எல்லா பிராப்திகளின் பொக்கிஷத்தின் அதிகாரி ஆகச் செய்கிறது. தற்போது சுயராஜ்ய அதிகாரி ஆனால் பிறகு உலகத்தின் ராஜ்ய அதிகாரியாக பிராப்தி ஆகி விடும்.

## சந்துஷ்டமணி (திருப்தி) ஆகி எல்லோருக்கும் சந்தோஷத்தை கொடுக்கக் கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக !

நீங்கள் வள்ளலின் குழந்தை மாஸ்டர் வள்ளலாகி தன்னுடைய சகோதரர்களின் மீது தயை மற்றும் கருணை என்ற திருஷ்டியை அருளுங்கள். மஹாதானி வரதானி ஆகுங்கள். சந்துஷ்டமணி ஆகி எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுங்கள். காரணம் திருப்தி மற்றும் சந்தோஷம் எல்லா பிராப்திகளுக்கும் ஆதாரமான சொரூபமாக உள்ளது. எங்கு திருப்தி உள்ளதோ அங்கு பிராப்தி இல்லை என்ற விஷயமே இல்லை. திருப்தியின் ஆதாரத்தின் மூலம் ஸ்தூலமான செல்வத்தின் முழுமையை அனுபவம் செய்ய முடியும். ஆகவே சந்துஷ்டமணியாகி எல்லோருக்கும் சுகம், சாந்தி என்ற அஞ்சலி கொடுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தன்னுடைய சிரேஷ்டமான பெருமையின் நினைவைக் கொடுங்கள்.

## சுவாசம், சங்கல்பம், செல்வம் மற்றும் சரீரத்தின் வில் செய்யக்கூடிய எல்லாவித சிதையில் இருந்து யுக்தியாக இருப்பவர்கள் ஆகுக !

எந்தக் குழந்தை தன்னுடைய எல்லாவற்றையும் முதலிலேயே வில் செய்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் கவலையற்ற அல்லது சிதையில் இருந்து முக்தி பெறக்கூடிய வரதானம் பெறுவார்கள். காரணம் அவர்களின் மொத்தமும் பலனைப் பெற்றுள்ளதாக அமைந்து உள்ளது. தன்னுஆடைய எல்லாவற்றையும் இன்ஷூர் செய்வதன் மூலம் சிறிதளவுகூட வீணாவது இல்லை. அவர்களுக்கு காகிதம் காகிதமாகும், மண் மண்ணாகிப் போகும்; ஆனால் தனது உரிமையானவை எல்லாம் அளவிட முடியாத சொத்துக்கள் ஆகும் என்று தெரியும், வீணானதாக ஆகாது.

## எல்லோருக்கும் சாந்தியின் அனுபவம் செய்விக்கும் மற்றும் சாந்திக் கடலினுள் மூழ்கிப் போகும் யோக்ய ஆத்மாக்களாக இருப்பீர்களாக !

நான் சாந்தி சொரூபமான ஆத்மா, சாந்திக் கடலின் குழந்தை, சாந்தியின் பிரியமான ஆத்மா என்ற இந்த எண்ணத்தை வைப்பதனால் மற்றும் தனது தொடர்பில் வரும் ஆத்மாக்களுக்கு இந்த சுபமான செய்தியைக் கொடுக்க வேண்டும். இதுதான் எல்லாவற்றிலும் சிரேஷ்டமான கர்மம் ஆகும். இதன் மூலம் எப்பொழுதும் சிரேஷ்டமான பிராப்தியை செய்விக்கும். இதுதான் தற்காலம் மற்றும் எதிர் காலத்திற்கு சிரேஷ்டமாகச் செய்கிறது. இந்த அலௌகீக தொழில் எப்பொழுதும் நினைவில் இருந்தால் சாந்தியை அனுபவம் செய்யும் யோக்ய ஆத்மாவாகி சாந்தியின் கடலில் மூழ்கி இருக்கச் செய்யும்.

## எல்லோருடைய அவசியத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய அன்னபூரணியின் பண்டாரா ஆகக் கடவது !

தற்காலத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் உண்மையான குஷி மற்றும் உண்மையான சாந்தி அவசியமாக உள்ளது. குஷிக்காக எவ்வளவு சமயம், செல்வம் மற்றும் சரீர சக்தியை தீர்த்து விடுகிறார்கள். அவ்வாறான ஆத்மாக்களுக்கு எல்லா அவசியங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய அன்னபூரணியான பொக்கிஷம் ஆகுங்கள். பாபா மூலம் கிடைக்கும் சாந்தி மற்றும் குஷி என்ற பொக்கிஷத்தை எல்லா ஆத்மாக்களுக்கும் நிறைய வழங்குங்கள். தானும் சாந்தியாக இருந்து மற்றும் சர்வ ஆத்மீக அல்லது அழிவில்லாத சாந்தியும் குஷியும் கொடுங்கள். இதுதான் எல்லாவற்றையும் காட்டிலும் மிகப் பெரிய புண்ணியம்.

## தானும் தந்தையும் இணைந்த சொரூபத்தின் அனுபவத்தின் மூலம் சமாதானமான சொரூபம் ஆகுங்கள் !

இந்த அலௌகீக விசித்திரமான இணைந்த ரூபத்தின் அனுபவத்தின் மூலம் எப்பொழுதும் வெற்றியாக விக்னங்களை விநாசம் செய்யக் கூடிய மற்றும் ஒரே நொடியில் எல்லா சமாதான சொரூபமாகி விடுவீர்கள். எவர் இந்த இணைந்த ரூபத்தில் ஸ்திரமாக உள்ளார்களோ அவர்கள் சகஜமாக நினைவு மற்றும் சேவையின் ஸித்தி சொரூபமாகி விடுவார்கள். இந்த இணைந்த சொரூபம் எப்பொழுதும் சுப பாவனை, சிரேஷ்டமான மன ஆசைகளை பூர்த்தி செய்தல், சிரேஷ்டமான வாணி, சிரேஷ்டமான திருஷ்டி, சிரேஷ்டமான கர்மத்தின் மூலம் உலக நன்மைக்கான சொரூபத்தை அனுபவம் செய்விப்பார்கள்.

## வியக்த பாவத்தின் சுபாவம் அல்லது சம்ஸ்காரத்தை மாற்றக் கூடிய பிராமணனில் இருந்து பரிஸ்தா ஆகுங்கள் !

பிராமணனில் இருந்து பரிஸ்தா ஆகிறோம். இந்த நினைவின் மூலம் உலகத்தின் சாட்சாத்கார மூர்த்தி ஆகின்றோம். நடக்கும்போதும், செல்லும்போதும் சரீரத்தின் மூலம் இந்த வியக்தமான தேசத்தில் பார்ட் செய்து கொண்டிருந்தோம். வியக்த பாவத்தில் இருந்து விலகி அவ்யக்த ரூபத்தின் அனுபவம் செய்வீர்கள். இந்த அவ்யக்தமான அதாவது பரிஸ்தாவின் பாவனை வியக்தமான பேச்சு, வியக்தமான சுபாவம், சம்ஸ்காரத்தை சகஜமாக மாற்றி விடும். ஆகவே பிராமணனில் இருந்து பரிஸ்தாவாக இந்த எண்ணத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள்.

## எல்லோருக்கும் மனதார மரியாதை அளிக்கும் எப்பொழுதும் விக்னமற்ற நிர்சங்கல்பம் மற்றும் கவலை அற்றவர்களாக ஆகுக !

மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்தலே மரியாதை பெறுதல் ஆகும். யார் எல்லோருக்கும் உளமாற மரியாதை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு எல்லோர் உடைய உள்ளத்தின் மூலம் மரியாதை கிடைக்கும். இந்த ஸ்லோகன் எப்பொழுதும் நிர்விக்னமற்ற நிர்சங்கல்பமான கவலை அற்றவர்களாக செய்து விடுகிறது. எனக்கென்ன ஆகும் என்ற சிந்தனை இருப்பதில்லை. இந்த ஆத்மாவின் சிரேஷ்டமான பிராப்தி (பிராலப்த்) தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் நிச்சயிக்கப் பட்டுள்ளது; எவரும் இவரை அசைக்க இயலாது, வேறு எவரும் இவரது ஆசனத்தை எடுக்க இயலாது, அவருக்கு நிச்சயிக்கப்பட்டு உள்ளது. ஆகவே அவர் கவலை அற்றவராக இருப்பார்.

## ‘நான் அவதரித்த சிரேஷ்ட ஆத்மா’ இந்த எண்ணத்தின் மூலம் எப்பொழுதும் உயர்ந்த இடத்தில் (உபராம்) இருப்பீர்களாக !

நாம் சிரேஷ்ட ஆத்மாக்கள் பரமாத்மாவின் செய்தியைக் கொடுப்பதற்காக, பரமாத்மாவை சந்திக்கச் செய்வதற்காக அவதரித்து உள்ளோம். பிராமண வாழ்க்கை அவதாரம் செய்த வாழ்க்கை, நான் உலக மங்களம் செய்விப்பவன், எப்பொழுதும் சேவை செய்யக் கூடிய அவதாரமான சிரேஷ்ட ஆத்மா – இந்த எண்ணத்தில் இருப்பதன் மூலம் ஒவ்வொரு செயலும் கர்ம பந்தனத்தில் இருந்து விடுபட்டு கர்மாதீத் நிலையை அனுபவம் செய்வீர்கள். இந்த நினைவு உயர்ந்த (உபராம்) மற்றும் எல்லையற்ற பிராப்தியை அனுபவம் செய்விப்பவர்களாக இருப்பீர்கள்.

**தேகபானத்தின் கவர்ச்சியில் இருந்து விலகி பறக்கக் கூடிய பறக்கும் பறவைகளாக ஆகுக !**

எல்லாவற்றிலும் அதிகமாக தன்னை கவர்ச்சி செய்யக் கூடியது இந்த தேகத்தின் பளு. சிறிது பழைய சம்ஸ்காரம், சுபாவம் தன்னை கவர்ச்சி செய்கிறதென்றால் அது தேகபானமாகும். எனது பழக்கம், ரஹன்சஹன் இவை தேகபானத்தின் அடையாளமாகும். இந்த கோட்டையிலிருந்து விலகி பறக்கும் பறவை ஆகுங்கள்; அப்பொழுது தான் கர்மாதீத் நிலை என்று சொல்லப்படும். கர்மத்தில் மூழ்கி இருப்பவர்கள் கர்மாதீத் ஆக இயலாது. அதனால் கர்ம பந்தனத்தில் இருந்து அதாவது அந்த பழக்கத்திலிருந்து விலகி இருங்கள்.

## மனதில் அபவித்ர சங்கல்பத்தை தியாகம் செய்யக் கூடிய உண்மையான வைஷ்ணவர்கள் பாலபிரம்மச்சாரி ஆகுங்கள் !

இந்த வரதானம் எந்த குழந்தைகளுக்கு பிராப்தி ஆகிறது என்றால் எந்த குழந்தை ஜென்மத்தில் இருந்தே அசுத்தமான அல்லது அவகுணம், வேண்டாத சங்கல்பத்தை புத்தி மூலம், மனதின் மூலம் ஒரு போதும் கிரகிக்க மாட்டார்களோ அவர்களுக்கு மனதின் மூலம் தனக்கும் மற்றவர்களுக்கும் வேண்டாத தூய்மையற்ற எண்ணத்தை செலுத்த மாட்டார்கள். அப்பொழுது தான் உண்மையான வைஷ்ணவர்கள் மற்றும் பாலபிரம்மச்சாரி என்று சொல்லப்படும்.

## சரளமான சுபாவம் அல்லது அப்பாவித்தனத்தின் மூலம் பகவானை கவர்ச்சி செய்யக்கூடிய சிரேஷ்டமான பாக்யவான் ஆகுங்கள் !

அப்பாவியான தந்தைக்கு அப்பாவியான குழந்தைகள் எல்லோரைக் காட்டிலும் பிரியமாக இருக்கின்றார்கள். அப்பாவி என்றால் எப்பொழுதும் சரளமான சுபாவம், சுப பாவனை மற்றும் உண்மையில் நிறைந்து இருத்தல்; மனம் செயல் இரண்டும் உண்மையாகவும் பரிசுத்தமாகவும் இருத்தல். இவ்வாறான அப்பாவி பாக்யமான குழந்தைகள் போலாநாத் பாபாவிற்கு அக்குழந்தை மீது கவர்ச்சி ஆகிறது. போலாநாத் பாபா அவ்வாறு சரள சுபாவமான குழந்தைகளின் குணத்தின் மாலையை எப்பொழுதும் வர்ணனை செய்கிறார். எவ்வளவு ஞானம் நிறைந்த சக்தி நிறைந்தவர்களாக உள்ளார்களோ அவ்வளவு அப்பாவித்தனம் இருக்கும். இந்த அப்பாவித்தனம் மூலம் பகவான் உடைய அன்பைப் பெறுகிறார்கள்.

## நினைவு மற்றும் சேவையில் சமநிலை மூலம் எல்லோருடைய ஆசீர்வாதத்தைப் பெறுபவர்கள் ஆகி மாயை மற்றும் ஜகத்தை வெற்றி அடைபவர்கள் ஆகுக !

நினைவு சேவையின் சமநிலை தான் இரட்டை பூட்டாகும். இதுதான் மாயையிலிருந்து வெற்றி பெறச் செய்கிறது. காரணம் இந்த சமநிலைதான் பாப்தாதா மற்றும் எல்லா ஆத்மாக்களின் ஆசீர்வாதத்தைப் பெறச் செய்கிறது. எவர் முயற்சியின் கூடவே மற்ற ஆத்மாக்களின் ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்களோ அவர்கள் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டிருப்பார்கள். காரணம் இந்த சமநிலைதான் பிராமண வாழ்க்கையில் உயர்வதற்கு(LIFT) செயல் புரிகிறது. ஆகவே இந்த சமநிலை மூலம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டே இருந்தால் மாயாவை வரச் செய்யாமல் இருக்கும், கதவை மூடி விடுகிறது. மாயாவை வெற்றி கொண்டு ஜகத்தை வெற்றி கொள்ளுங்கள்.

## உள்நோக்கு முகத்தின் பயிற்சியின் மூலம் எல்லா உறுப்புகளையும் சிநேகமாக்கக் கூடிய சுய ராஜ்ய அதிகாரி ஆகுக !

எப்பொழுது கர்ம இந்திரியங்கள் சோம்பலாக சஞ்சலமாக இருக்கிறதோ அதை உள்நோக்கு முகம் என்ற சூளையில் போடுங்கள். எந்த வித மந்திரி அல்லது மஹாமந்திரி ஏமாற்றவில்லை தானே என்று சோதனை செய்யுங்கள். இதுதான் உங்களின் ராஜ்யத்தில் உடன் இருப்பது. எவ்வாறு அரசர்கள் கட்டளை இடுவதை மற்றவர்கள் நொடியில் வணங்கி ஏற்கிறார்களோ அவ்வாறு கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் ஆட்சி செய்யும் சக்தி மூலம் கர்ம இந்திரியங்களை தன்னுடைய துணையாக்கிக் கொள்ளுங்கள். இப்பொழுதுள்ள ராஜ்ய தர்பார் தான் சத்யுகத்தை விட சிரேஷ்டமானது.

## சிரேஷ்டமான பாவனை என்ற விதைக்கு எப்போதும் நினைவு என்ற நீர் ஊற்றி சக்தி மற்றும் பிரத்யக்ஷமான பலனின் அதிகாரி ஆகுங்கள் !

பாவனைக்கான பலன் நிச்சயமாகக் கிட்டுகிறது. உங்களுக்கு மற்ற ஆத்மாக்களுக்காக சுபமான உள்நோக்கம் மற்றும் சிரேஷ்டமான பாவனை உள்ளது. நமது இந்த சகோதரர்களும் பாபாவின் ஆஸ்தியைப் பெற வேண்டும்; இந்த பாவனை சுய நலமற்றது, கருணை மற்றும் மங்கள பாவனையாகும். இவ்வாறான பாவனைக்கு பலன் கிடைத்தே தீரும். இந்த சிரேஷ்ட பாவனை என்ற விதைக்கு சதா நினைவு என்ற நீர் ஊற்றிக் கொண்டே இருங்கள். இதன் மூலம் நிறைவான பலன், பிரத்யக்ஷமான பலனிற்கு அதிகாரியாக இருப்பதற்கு அவசியமாக பிராப்தி பெறுவீர்கள்.

## உலகில் சாந்தியின் கிரணங்களைப் பரப்பும் சாந்தி வள்ளலின் குழந்தைகள் சாந்தியின் மஹாதானி, வரதனி ஆகுங்கள் !

சாந்தியின் வள்ளல் பாபா. நீங்கள் சாந்தி சொரூபம், தர்மம் சாந்தி. கர்மத்தின் மூலம் சாந்தியைக் கொடுக்க வேண்டும். நீங்கள் சாந்தி தேவதையான குழந்தைகள் எப்போதும் சாந்தியின் மஹாதானி வரதானி ஆகி சாந்தியின் கிரணங்களை உலகத்தில் பரப்புங்கள். ஆகவே சாந்திக்காக அலையும் உங்களுடைய ஆத்மீக சகோதரர்களுக்கு சகோதரத்துவமான திருஷ்டியைக் கொடுங்கள். இந்த திருஷ்டியின் மூலம் தான் அவர்களின் சிருஷ்டி மாறும். நொடியில் சுய தர்மத்தின் நிலையை அனுபவம் செய்வியுங்கள்.

## தனக்கும் எல்லோருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சமாதான ஸ்வரூபம் ஆகுங்கள் !

எந்தவித பிரச்சினையும் உண்மையில் தன் உடைய பலவீனத்தின் படைப்பாகும். எங்கு பலவீனம் உள்ளதோ அங்கு மனிதர்கள் மற்றும் சூழ்நிலை மூலமாக பிரச்சினைகள் சண்டை இடும். இந்த பிரச்சினைகளிடம் விளையாடுங்கள்; பயப்படாதீர்கள். தற்போது பிரச்சினைகளை உருவாக்காதீர்கள். சமயத்தை விரயம் செய்யாதீர்கள். இதில் இருந்து விலகி வானபிரஸ்த நிலையாகினால் சமாதான சொரூபமாகி விடுவீர்கள். வானபிரஸ்த நிலை என்றால் எல்லாவித பந்தனங்களில் இருந்து முக்தி பெறுதல், மேலும் பாபாவின் மற்றும் முழு வேகத்தின் சேவையில் அன்பாகி விடுதல்.

## தன்னுடைய சம்பூர்ண சக்திசாலி சொரூபத்தின் மூலம் எல்லோருக்கும் முக்திக்கான ஆஸ்தி கொடுக்கக் கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுங்கள் !

இப்போது சிறிது நேரத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் ஆஸ்தியைக் கொட்டக் கூடிய காரியத்தில் தீவிர கதியில் செயல்பட மாஸ்டர் சர்வ சக்திவான், சக்தியின் கஜானாவாக ஞானம் மற்றும் குணத்தின் கஜானாவாக நினைவு சொரூபம் ஆகுங்கள். எவ்வாறு விநாசத்தின் சாதனங்கள் சுத்திகரிக்கப் பட்டதன் காரணத்தால் முழு வேகத்தில் உலகை அழிக்கும் காரியத்தில் நிமித்தமாக உள்ளதோ அவ்வாறே நீங்களும் வரதானி மஹாதானி ஆத்மாக்களாகிய தன்னுடைய கர்மாதீத் பரிஸ்தாவின் சம்பூர்ணமான சக்திசாலி சொரூபத்தின் மூலம் எல்லோர் உடைய பிரார்த்தனைகளுக்குப் பதிலளித்து முக்திக்கான ஆஸ்தியைக் கொடுங்கள்.

## சங்கல்ப ரூபத்தின் விதையை பலன் கொடுக்கக் கூடியவர்களாகி எப்போதும் சக்திசாலி அறிவாளி ஆகுங்கள் !

எவ்வாறு சங்கல்பத்தை மிக தைரியத்துடன் மற்றும் திடத்துடன் செய்கிறீர்களோ அவ்வாறே சங்கல்பமான ரூபத்தின் விதை பலன் அளிப்பதற்காக தாரணைக்கான பூமி, ஞானத்தின் கங்கா ஜலம் மற்றும் நினைவின் தூபம் அல்லது வெப்பம் கொடுங்கள்; அடிக்கடி சுய கவனத்தின் மீது அக்கறை செலுத்தினால், சக்திசாலி புத்திசாலி ஆத்மா ஆகி விடுவீர்கள். எப்போதும் சின்னச்சின்ன விஷயங்களில் பயப்படாதீர்கள். ஏதாவது நடந்து விட்டால் அதைப் பற்றி சிந்தித்து சிந்தித்து பெரியதாக்கி விடாதீர்கள். ஞான சொரூபமாகி நொடியில் அந்த விஷயத்தை விட்டு விடுங்கள், துரத்தி விடுங்கள்; பறந்து செல்லுங்கள், ஞான மருந்து பெற்று ஆரோக்கியம் ஆகுங்கள்.

## சந்துஷ்டத்தின் சான்றிதழ் மூலம் வெற்றி ரத்னம் சிரேஷ்ட ஆத்மா பவ !

வெற்றி ரத்னமாக ஆக திருப்தியின் மூன்று சான்றிதழ் பெற வேண்டும். <1> தன்மீது தானே திருப்தி அடைதல், <2> பாபா மூலம் திருப்தி பெறுதல், <3> பிராமண பரிவாரத்தின் மூலம் சான்றிதழ் பெறுதல். இந்த சான்றிதழ் தான் தற்கால மற்றும் எதிர் காலத்திற்கு சிரேஷ்டம் அடைவதற்கு சாதனம். திருப்தி ஆன்மீகத்தின் சகஜமான விதியாகும். எவரிடம் திருப்தி உள்ளதோ அவர் எப்போதும் மகிழ்ச்சி சொரூபமாக இருப்பார். திருப்தி கவலையற்ற ராஜா (பாதுஷா) ஆக்குகிறது. திருப்தி எப்போதும் விகல்பமற்ற (நிர்விகல்ப) ஒரே ரசனையின், வெற்றிக்கான ஆசனத்தின் அதிகாரி ஆக்குகிறது.

## விசேஷத்தைப் பார்க்கும் விதி மூலம் சங்கத்தை (சங்கட்டன்) ஒற்றுமை எனும் நூலில் கட்டும் விசேஷ ஆத்மா பவ !

எந்தக் குழந்தை எப்போதும் ஒவ்வொருவரின் விசேஷத்தைப் பார்த்து, மேலும் அந்த விசேஷத்தை வர்ணனை செய்கிறார்களோ, அவர்கள் அந்த விசேஷத்தில் முழுமை அடைந்து விசேஷ ஆத்மாவாக ஆகி விடுகிறார்கள். விசேஷத்தைப் பார்ப்பதும், விசேஷத்தை வர்ணனை செய்வதும் தான் (சங்கட்டன்) மலர் சேர்ந்து ஒன்றாக இருக்கும் மாலைக்கான நூலாகும். இதன் மூலம் சங்கத்தின் ஒற்றுமை ஏற்படுகிறது. ஆகவே எப்போதும் விசேஷத்தைப் பார்க்கக் கூடிய கண்ணாடியை அணியுங்கள். எப்போதாவது சில பலவீனமான விஷயத்தைப் பார்த்தாலும் அதை வர்ணனை செய்யாதீர்கள்; வர்ணனை செய்தால் பாக்யம் போய் விடும்.

## எப்போதும் மகிழ்ச்சி மற்றும் தூய்மையின் நிலையில் இருக்கும் மிகமிக உண்மையான தூய்மையான அன்னப்பறவை ஆகுக !

யார் தூய்மையான அன்னப்பறவையாக இருக்கிறார்களோ அவர்கள் ஒருபோதும் தனது நிலையில் இருந்து இறங்க மாட்டார்கள்; அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக, இலகுவாக, தூய்மையின் நிலையில் இருப்பார்கள். தூய்மையான நிலையில், மற்ற எந்தவித நிலையும் நிற்காது. தூய்மையான நிலையில் உள்ளவர்கள் எப்போதும் இலகுவாக, எப்போதும் கவலையற்ற மற்றும் எப்போதும் எல்லா பொக்கிஷங்களிலும் நிறைந்தவர்களாக இருப்பார்கள். அவர் நிலை எப்போதும் மாறுவது இல்லை. சில நேரம் மகிழ்ச்சியாகவும், சில நேரம் அதிகமான சிந்தனையில் ஆழ்ந்து போதலும், சில சமயம் இலகுவாகவும், சில சமயம் பளுவான நிலையும் ஒரு போதுமே ஏற்படுவதில்லை. இவ்வாறான நிலை மாறி எப்போதும் மகிழ்ச்சியாக இலகுவான நிலையில் இருந்தால் அவர்களைத்தான் தூய்மை நிறைந்த பாபாவின் தூய்மையான அன்னப் பறவையான குழந்தை என்று சொல்ல முடியும்.

## எல்லா சம்பந்தங்களின் அனுபவத்தை ஒரு தந்தையிடம் செய்பவர்களாகி கர்ம பந்தனங்களில் இருந்து முக்தியாகி கர்மாதீத் நிலையை அடைவீர்களாக !

பிராமண வாழ்க்கை சிரேஷ்ட சம்பந்தத்தின் வாழ்க்கையாகும். ஒருக்கால் எந்த விதமான பந்தனங்கள், அதாவது தேகத்தின், சுபாவத்தின், சம்ஸ்காரத்தின், மனதின், கவர்ச்சியில் இருந்தால் இந்த பந்தனங்கள் பாபாவிடம் சர்வ சம்பந்தங்களை எப்போதும் வைக்க முடியாமல் இருப்பதற்கான பலவீனம் என்று நிரூபனம் ஆகிறது. இந்த எல்லைக்கு உட்பட்ட ‘என் உடையது’ என்பது மோகத்தின் நூலாகும். எப்போது எல்லா வித சம்பந்தங்களும் பாபாவிடம் இருக்கிறதோ, அனைத்தும் பாபா உடையது. இதை ஏற்படுத்திக் கொண்டால் பந்தனம் சமாப்தி ஆகி விடும் மேலும் கர்ம பந்தனில் இருந்து முக்தி அடைந்து கர்மாதீத் ஸ்திதியின் சகஜமான அனுபவம் ஆகும்.

## பாபா மற்றும் பிராமண குடும்பத்தின் ஆசீர்வாதத்தை பிராப்தம் செய்யக் கூடிய சதா சந்துஷ்ட ஆத்மா பவ !

பிராமண வாழ்வில் சதா சந்துஷ்டதா மற்றும் அலௌகீக ருஹானி ஆனந்தத்தை அனுபவம் செய்ய பாபா மற்றும் அனைத்து பிராமண குடும்பத்தினரின் ஆசீர்வாதத்தை எடுத்துக் கொண்டிருங்கள். ஆசீர்வாதம் என்றால் சுப பாவனைகள், சுப ஆசைகள். பாபா கூறினார் – 'நீங்கள் பாக்யவான் சிரேஷ்ட ஆத்மா' – இதே ஸ்மிருதி ரூப ஆசீர்வாதம் மற்றும் வரதானத்தினால் பிராமண பிறவி ஏற்பட்டது. பிராமண வாழ்வில் சதா ஆசீர்வாதத்தை எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இதுவே சங்கம யுகத்தின் விசேஷமாகும்.

## கர்ம சித்திரத்தின் மூலம் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தை அனுபவம் செய்விக்கக் கூடிய அதிர்ஷ்டசாலி பவ !

சங்கமயுகத்தில் அனைத்து பிராமணர்களுக்கும் எல்லையற்ற அதிர்ஷ்டம் கிடைத்து உள்ளது. பிராமணர்கள் என்ற அதிர்ஷ்டசாலி ஆத்மாவின் கண், நெற்றி, வாயின் புன்சிரிப்பு, அவரது ஒவ்வொரு கர்மம் அனைவருக்கும் சிரேஷ்ட அதிர்ஷ்டத்தின் அனுபவத்தை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு படத்திலும் நெற்றி மற்றும் கண்களில் படத்தின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றனர். இங்கு மன விருத்தியின் சக்தி, ஆன்மீக திருஷ்டியின் சக்தி மேலும் கர்மத்தின் மகத்துவம் உள்ளது. இதுவே அதிர்ஷ்டத்தின் படத்தை அமைத்துக் கொள்வதற்கான அஸ்திவாரமாகும்.

## பிரபுவின் அன்பிலே மூழ்கிப் போகும் சகஜ யோகி சிரேஷ்ட ஆத்மா பவ !

பிரபுவின் அன்பே குழந்தைகளாகிய உங்களின் சொத்தாகும். உலகம் இந்த அன்பின் ஒவ்வொரு சொட்டுக்கும் தாகமாய் இருக்கிறது. ஆனால் நீங்கள் இப்பிரபுவின் அன்பிலேயே வளர்ந்து கொண்டு இருக்கிறீர்கள், பிராமண வாழ்வில் முன்னேறிச் செல்கிறீர்கள். யார் பகவானுக்கு அன்பானவர்களாக இருக்கின்றனரோ அவர்கள் உலகின் அன்பானவர்கள் ஆகின்றனர். இப்படிப்பட்ட பிரபு அன்பிற்குப் பாத்திரம் ஆனவர்களே சகஜ யோகிகள் ஆவர். இந்த பரமாத்ம அன்புக் கடலிலே மூழ்கி இருங்கள், அப்போது எவ்வித பிரச்சினைகளின் பிரபாவமும் ஏற்படாது.

## விகல்பங்கள் மற்றும் விகர்மங்களில் இருந்து விலகி நிற்கும் விகரால் ரூபதாரி, காளி ரூப பவ !

யோகம் ஏற்படவில்லை எனில் ஏதேனும் மறைந்துள்ள விகர்மம் தன் பக்கம் இழுக்கிறது என்றே அர்த்தம். பிராமண ஆத்மாக்கள் ஆனால் யோகம் வரவில்லை, இது நடக்கவே முடியாது. பிராமணர்கள் என்றாலே ஒரே ஒருவரின் உடையவர்கள், ஒருவரானவர்கள்; ஆக புத்தி வேறு எங்கும் போக முடியாது. ஒருவேளை பரமாத்ம பிரபாவத்திலிருந்து விலகிச் சென்ற ஆத்மாக்களின் பிரபாவத்தின் வசப்பட்டால் குறிப்பிட்ட எவர் மீதும் பிரபாவம் அடைவதும் காம விகாரத்தின் அம்சமே ஆகும். இந்த காம இச்சை மீது காளி ரூபம் கொள்க. விகர்மத்தின் மீது விகரால் ரூபத்தை தாரணை செய்க. அப்போதே விகர்மங்களை விநாசம் செய்து பரிஸ்தா ஆக முடியும்.

## ஸ்ரீமத்தின் கரம் குடை நிழலின் ரூபத்தில் அனுபவம் செய்யக் கூடிய சதா சக்திசாலி ஆத்மா பவ !

யார் ஸ்ரீமத்தின் கரத்தை குடை நிழல் ரூபத்தில் அனுபவம் செய்கின்றனரோ அவர்கள் சர்வ பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே சக்திசாலி ஸ்திதியில் ஸ்திரமாய் இருக்கின்றார். அவர்களது ஒவ்வொரு கர்மமும் பேச்சும் தானாகவே எளிய சேவையை செய்விக்கிறது. எந்த காரியத்திலும் என்ன செய்வது? என்ன ஆகுமோ? என்பது சங்கல்ப அளவில்கூட கிடையாது. வெற்றி மாலை சதா வாழ்க்கையில் படிந்தே கிடக்கிறது. நான் வெற்றியாளன், வெற்றி மாலையின் மணி – இந்த அசைக்க முடியாத நம்பிக்கை தானாகவும் சதா காலத்திற்கும் இருக்கிறது.

## நியாரா மற்றும் பியாரா நிலையின் சமநிலையின் மூலம் பொறுப்பினை ஏற்று நடத்தும் டபுள் லைட் பவ !

லௌகீக், அலௌகீக் மற்றும் ஈஸ்வரிய சேவையின் பிரவிருத்தியின் பொறுப்புகளை ஈடு செய்து கொண்டே எவ்வளவு நியாரா-பியாரா நிலையில் சமநிலை இருக்கிறதோ அவ்வளவு டபுள் லைட் ஸ்திதி இருக்கிறது. என்ன செய்வது? பெரிய பொறுப்பு உள்ளதே – பெரும் கஷ்டம் என்கிற உணர்வு இருந்தாலே பாரம். டபுள் லைட் என்றால் நியாரா. எவ்வித பொறுப்பின் கர்மத்தின், அழுத்தத்தின் பாரம் இல்லை. ஒவ்வொரு பொறுப்பையும் நிறைவேற்றுவதும் அவசியம் தான், ஆனால் எவ்வளவு பெரிய பொறுப்போ அவ்வளவு டபுள் லைட்.

## சுவமான் மற்றும் நிர்மாண் ஆகியவற்றின் சமநிலையின் மூலம் சதா வெற்றி மூரத் பவ !

சேவை செய்து கொண்டே எவ்வளவு சுவமான் நிலை இருக்கிறதோ அவ்வளவு நிர்மாண் (பணிவு) நிலையும் வேண்டும். நிமித்தம் ஆனீர்கள், சேவை நன்றாக நடந்தது, விருத்தியும் ஆனது, வெற்றி சொரூபமானீர்கள். இந்த சுவமான் நிலை நல்லதுதான் ஆனால் வெறும் சுவமான் மட்டும் போதாது நிர்மாண் பாவனையின் சமநிலையும் வேண்டும். இந்த சமநிலை எளிதில் வெற்றி சொரூபம் ஆக்கி விடுகிறது. எங்கு சுவமான் மற்றும் நிர்மாண் நிலையின் சமநிலை இல்லையோ அங்கு சுவமான் தேக அபிமானமாக மாறி விடுகிறது. எனவே இந்த சமநிலையின் மூலம் வெற்றி மூரத் ஆகுக.

## ஆன்மீக விசித்திர மேளாவின் அனுபவத்தின் மூலம் கஜானாக்களினால் நிறைந்த சதா சுகி பவ !

சங்கமயுகத்தில்தான் விசித்திர ஆத்மாக்கள் பாபாவை சந்திக்கின்றனர். இந்த ஆன்மீக விழாவில் பாக்ய வள்ளலின் மூலம் பாக்யத்தை பிராப்தம் செய்யும் அதிர்ஷ்டசாலியான லாட்டரி கிடைக்கிறது. இந்த மேளாவில் சிறிய சிறிய சுகமான அனைத்தும் நிறையப் பெற்ற உலகின் பரிசு கிடைக்கிறது. பாபாவே அந்த உலகம். யார் சதா இந்த உலகத்தில் இருக்கின்றாரோ அவர்கள் அனைத்து பிராப்திகள், குஷிகளின் அலௌகீக ஊஞ்சலில் ஆடுகின்றனர். சர்வ கஜானாக்களினால் நிறைந்த, சதா சுகமாக ஆகி விடுகிறார்.

## நான் யார்? என்னும் கேள்விக்கு விடை காணும் சுயராஜ்ய திலகதாரி பவ !

நான் யார்? இந்த கேள்விக்கான விடை கண்டீர்களாயின் ஒருபோதும் சச்சரவில் குழப்பத்தில் வர மாட்டீர்கள். நாம் சிரேஷ்ட மஹான் ஆத்மாக்கள் என்கிற ஆன்மீக போதை இருக்க வேண்டும். நமது ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு சங்கல்பமும், கர்மமும் நினைவார்த்தங்கள் ஆகின்றன. நமது தலையில் பவித்ரதாவின் மஹான் தன்மையின் ஒளிக் கிரீடம் உள்ளது. முழு உலகின் பார்வை நம் மீதே உள்ளது. நான் என்ன செய்கிறேனோ அது உலகுக்கு முன்மாதிரியாக அமைகிறது. இவ்வளவு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். தில்தக்த் நஷீன், சுயராஜ்ய திலகதாரி ஆக வேண்டும்.

## அலௌகீக ருஹானி ஸித்தி அல்லது மாயா ஜாலம் காண்பிக்கும் ஸித்தி ஸ்வரூப் பவ !

தற்காலத்திற்குத் தகுந்தாற்போல சேவையின் விதி ஸித்தி சொரூபம் ஆவது. எனவே அலௌகீக ஆன்மீக ஸித்தி அதாவது ஆன்மீக மாயா ஜாலத்தைக் காண்பியுங்கள். கவலை என்னும் சிதையில் எரிந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை எழுப்புங்கள். புதிய வாழ்க்கை தாருங்கள். குருடர்களை திரிநேத்ரி ஆக்குங்கள்; தற்காலத்தையும் எதிர்காலத்தையும் காணும் கண்ணைத் தாருங்கள். பிச்சைக்காரர்களை ராஜா ஆக்குங்கள். இப்போது இம்மாதிரி ஆன்மீக ஒளியைக் காண்பியுங்கள் அதாவது விதி மூலம் ஸித்தி சொரூபம் ஆகுக.

**லகனின் அக்னியின் மூலம் சர்வ பந்தனங்களை பஸ்பம் செய்யக் கூடிய பறக்கும் பறவை பந்தன் முக்த் ஆத்மா பவ !**

பிரவிருத்தியில் இருந்து கொண்டே பிரவிருத்தி காரியத்தை ஈடு செய்பவர்களாகுக. பந்தனத்தில் மாட்டிக் கொண்டு இருப்பவர்களாக அல்ல. மனதின் பந்தனம் கூடாது. <1> உடல் பந்தனம், <2> மன பந்தனம், <3> உறவின் பந்தனம், <4> விவகார பந்தனம் – இந்த அனைத்து பந்தனங்களையும் லகனின் அக்னியில் பஸ்பம் ஆக்கி விடுங்கள். பந்தன்முக்த் ஆத்மாவாகி பறந்து கொண்டே இருங்கள். தங்கக்கூண்டாக இருந்தாலும் சரி, வைரத்தானாலும் சரி, கூண்டுப்பறவை ஆகக் கூடாது.

## எல்லையற்ற வைராக்ய விருத்தியின் மூலம் தன் அபிமானத்தை அழிக்கக் கூடிய பறக்கும் யோகி, நடமாடும் யோகி பவ !

எல்லையற்ற வைராகி அதாவது தன் அபிமானம் விலக வேண்டும். பாபா உணர்வு வர வேண்டும். ஒவ்வொரு சங்கல்பத்திலும் எல்லையற்ற தந்தை பதிந்து இருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கல்பமும் எல்லை அற்ற சேவையில் அர்ப்பணமாகி இருக்க வேண்டும். ஒவ்வொரு பேச்சிலும் சுயநலமற்ற தன்மை வேண்டும். ஒவ்வொரு செயலிலும் செய்பவர் செய்வித்துக் கொண்டு இருக்கிறார் என்கிற உணர்வு அலைகள் அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். எவ்வித அற்பகால விஷயமும் தன் பக்கம் ஆகர்ஷணம் செய்யக் கூடாது. அப்போதே பறக்கும்யோகி நடமாடும்யோகியின் வரதானி ஆத்மா எனலாம்.

## தேகமெனும் வீட்டிலிருந்தும் விலகி இருக்கக் கூடிய எல்லையற்ற வைராகி, ஸித்தி ஸ்வரூப் பவ !

இந்த தேகம்கூட பாபாவினுடையது, எனதல்ல. இவ்வளவு தூரம் தேக உணர்விலிருந்து விலகி இருத்தல் வேண்டும். தேகம் என்னும் வீட்டில் இருந்து நாடோடி ஆகுங்கள்; அப்போதே எல்லையற்ற வைராகி என்றழைக்க முடியும். வைராக்யமுடைய குழந்தைகள் ஒருபோதும் ஏதேனும் சம்ஸ்காரம், சுபாவம், சாதனங்களின் வசம் ஆவதில்லை; சாதனங்களின் மூலம் ஸித்தி சொரூபம் ஆவார்கள். நிமித்த ஆதாரத்தை எடுத்துக் கொள்வர், அடிமையாக மாட்டார்கள். அவர்கள் மயான வைராக்யம் உடையோருக்கு எல்லையற்ற வைராக்ய விருத்தியை அளிக்க முடியும்.

## சுய தர்ஸனத்தின் மூலம் திவ்ய தரிசனம் செய்விக்கக்கூடிய திவ்ய தர்ஸனிய (பூஜிக்கத்தக்க) மூரத் பவ !

ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு சங்கல்பத்திலும், சுயதர்ஸனத்தின் மூலமே திவ்ய தரிசனத்தை செய்விக்க முடியும். ஏனெனில் சுயதர்ஸன ஸ்திதியில் இருப்பதால் இங்கங்கு நடக்கும்போது தனது திவ்ய சங்கல்பம், திவ்ய திருஷ்டி, திவ்ய பேச்சு, திவ்ய கர்மத்தின் மூலம் பிற ஆத்மாக்களுக்கும் கூட திவ்ய மூரத் அனுபவம் ஏற்படும். சாதாரண தன்மை தென்படாது, திவ்ய தன்மையே தென்படும். எவ்வளவு தெய்வீகத் தன்மையின் சக்தியை ஒவ்வொரு கர்மத்தில் கொண்டு வருவோமோ அவ்வளவு அனைவரது மனதிலும், வாயிலும் இவர்கள் தர்ஸன்ய மூரத் என்பது வெளிப்படும்.

## ஜ்வாலா ஸ்வரூப் சக்திசாலி நினைவின் மூலம் சுய கல்யாணியில் இருந்து விஷ்வ கல்யாணி பவ !

சுய கல்யாணத்தின் மூலம் விஷ்வ கல்யாணம் செய்வதற்கு இப்போது சேவையின் தொல்லைகளில் இருந்து விலகிச் செல்லுங்கள். சேவைக்குப் பின்னால் சுவமான் தன்மையை மறந்து போகாதே. எச்சேவையில் சக்திசாலி நினைவு இல்லையோ அச்சேவையில் வெற்றி குறைவு, தொல்லைகள் அதிகம். எனவே பெயருக்கு சேவை அல்ல, வேலை அளவில் சேவை செய்க. இதுவே சக்தி நிறைந்த சேவை ஆகும். இப்படிப்பட்ட சேவை செய்து சக்திசாலி ஜ்வாலா ரூபத்தின் நினைவின் சூழ்நிலையை உருவாக்குங்கள். இதுவே பாதுகாப்பிற்கான சாதனமாகும்.

## இங்கங்கு அலைமோதும் ஆத்மாக்களுக்கு உண்மையான உதவியின் அனுபவத்தைத் தர வல்ல உண்மையான யோகி பவ !

எப்படிப்பட்ட துக்கம், வலி, அசாந்தியின் காட்சிகளைப் பார்த்தும், கேட்டும் அதன் பிரபாவத்தில் வருவதற்குப் பதிலாக தனது ஏக்ரஸ் ஸ்திதியின் சாந்தி சக்தியின் உதவியின் மூலம் துக்க அசாந்தி அக்னியின் மீது குளிர்ந்த நீரை விட வேண்டும். இதுவே உண்மையான சகயோகமாகும். மிகப் பயங்கரமான கொடிய விஷயங்கள் முன்னே நிற்கும் போது அலைமோதும் ஆத்மாக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு சாந்தி சக்தியின் மூலம் திருப்தியின் அனுபவத்தைத் தாருங்கள். அப்போதே சகயோகியான யோகி குழந்தைகள் என்று கூற முடியும்.

## விதை ஸ்வரூப ஸ்திதியின் மூலம் சங்கல்ப ரூப விதையை (முளைக்கச் செய்யும்) பயன் தரச் செய்யும் ஞானி ஆத்மா பவ !

யார் ஞானம் நிறைந்த ஆத்மாக்களோ அவர்கள் சதா சுயம் தனக்காகவும், சேவைக்காகவும் சிரேஷ்ட சங்கல்பம் என்னும் விதையை விதைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் எவ்வித சங்கல்ப ரூப விதையையும் நன்கு முளைக்கச் செய்வதற்கான எளிய சாதனம் சதா விதை ரூப தந்தையிடமிருந்து ஒவ்வொரு சமயத்திலும் சர்வ சக்திகளின் பலத்தை அந்த விதையில் நிரப்ப வேண்டும். கூடவே உற்சாகம், ஆர்வம் என்னும் நீரை நிரந்தரமான கவனத்துடன் ஊற்றி, சோதனை என்னும் சூரிய ஒளியைத் தர வேண்டும். இதுவே சங்கல்பங்களை முளைத்து துளிர்விடச் செய்வதற்கான விதியாகும்.

## சர்வ சக்திமான் ஆசிரியரின் படிப்பின் மூலம் எவரெடி ஆகும் சதா விஜயி பவ !

யார் சர்வ சக்திமான் ஆசிரியருடைய சிரேஷ்ட மாணவரோ அவர் ஆரம்ப முதலே எவரெடியாக இருப்பதன் காரணமாக வெற்றி அடைந்து விடுகின்றனர். ஆனால் சமயம் என்னும் ஆசிரியரின் (விநாசம், இறுதி நேரம் வந்து விட்டது எனத் தெளிவாக தெரிய வந்தபின்) ஆதாரத்தில் செல்லக் கூடியவர்கள் சரியான நேரத்தில் ஏமாந்து போகின்றனர். நேரம் வரும் போது செய்து விடுவோம் என்று அநேக குழந்தைகள் எண்ணுகின்றனர். ஆனால் சமயமோ அஞ்ஞானி ஆத்மாக்களுக்குக் கூடத்தான் ஆசிரியனாக இருக்கிறது. ஆனால் உங்களது ஆசிரியரோ சமர்த் பாபா. எனவே சமயத்திற்கு முன்னரே எவரெடி ஆகி வெற்றி அடையுங்கள்.

## உதார்சித் (பரந்த எண்ணம்) தின் விசேஷத்தின் மூலம் ஆதார மற்றும் உத்தார மூரத் பவ !

உதார்சித் என்றால் சதா ஒவ்வொரு காரியத்திலும் பரந்த உள்ளம் படைத்தோர், தனது குணத்தின் மூலம் பிறரை குணவான் ஆக்குவதில் உதவி செய்வது, சக்தி மற்றும் விசேஷத்தை நிரப்புவதில் சகயோகியாய் இருப்பது, அதாவது மஹாதானி, விரிந்த மனம் கொண்டிருப்பதே பரந்த மனப்பான்மை உடைய ஆத்மாக்களின் விசேஷமாகும். இப்படிப்பட்ட விசேஷம் நிறைந்த ஆத்மாக்களே ஆதார உத்தார மூரத் ஆவதில் வெற்றி அடையும் வரதானத்தைப் பெறுகின்றனர். ஏனெனில் சேவையின் ஆதார சொரூபம் ஆவது என்றால் சுயம் மற்றும் அனைவரின் உயர்வுக்கு நிமித்தமாகி விடுவதாகும்.

## சுபசிந்தனை மற்றும் சுபசிந்தக் ஸ்திதியின் அனுபவத்தின் மூலம் பிரம்மாபாபா சமமாய் மாஸ்டர் வள்ளல் பவ !

பிரம்மாபாபாவிற்கு சமமாய் மாஸ்டர் வள்ளல் ஆவதற்கு பொறாமை, வெறுப்பு, குறைகாணல் இம்மூன்று விஷயங்களில் இருந்தும் விடுபட்டு அனைவருக்காகவும் சுபசிந்தக் ஆகி சுப சிந்தனையின் அனுபவத்தைச் செய்யுங்கள். ஏனெனில் எவரிடம் பொறாமைத் தீ உள்ளதோ அதில் அவர்கள் எரிகின்றனர்; பிறருக்கும் தொந்தரவு தருகின்றனர். வெறுப்புடையோர் தாமும் கீழே விழுந்து பிறரையும் விழச் செய்கின்றனர். சிரிப்புக்காகவும் பிறரை குறை கண்டு, கேலி கிண்டல் செய்வோர் ஆத்மாவை அதைரியப்படுத்தி துக்கம் விளைவிக்கின்றனர். எனவே இம்மூன்று விஷயங்களில் இருந்தும் விடுபட்டு சுபசிந்தக் ஸ்திதியின் அனுபவத்தின் மூலம் வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் ஆகுக.

## ஏக்தா (ஒற்றுமை) மற்றும் ஏகாக்ரதா (ஒருமை நிலை) வின் விசேஷத்தின் மூலம் சதா வெற்றி ஸ்வரூப் பவ !

பாப்தாதாவை வெளிப்படுத்தும் காரியத்தில் வெற்றியின் வரதானத்தை அடைவதற்காக சதா ஒற்றுமையுடன் ஒருவரை வெளிப்படுத்த வேண்டும். ஒற்றுமையின் ஒரு விரல்தான் சக யோகத்தின் அடையாளமாகக் காண்பிக்கப்பட்டு உள்ளது. ஏகாக்ரதா என்றால் சதா வீண் சங்கல்பங்கள் அற்ற நிலை. நிர்விகல்ப ஸ்திதியின் மூலமே வெற்றி கழுத்தின் மாலை ஆகிறது. ஆனால் ஒரே ஒரு சுலோகனை நினைவில் கொள்ள வேண்டும் – பிரச்சினையின் உருவாக ஆக மாட்டோம், பிரச்சினைகளைக் கண்டு கலங்கவும் மாட்டோம், சதா சமாதான சொரூபமாகவே இருப்போம்.

## ஆம் சரி என்னும் பாடத்தின் மூலம் சேவையில் மஹான் ஆகக்கூடிய அனைவரின் ஆசீர்வாதங்களின் பாத்திர பவ !

எந்த சேவையையும் உற்சாகம் ஆர்வத்துடன் செய்வதுடன் கூடவே அனைவரின் ஆசீர்வாதமும் கிடைப்பதிலும் கவனம் வைக்க வேண்டும். ஏனெனில் எங்கு ஆசீர்வாதம் இருக்குமோ அங்கு முயற்சி இராது. எவரது சம்பந்தத்தில் வந்தாலும் அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் என்கிற லட்சியம் வேண்டும். ஆம் சரி என்று ஒத்துப் போகும் நிலையே ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான சாதனமாகும். ஏதேனும் தவறு இருந்தாலும் அதனைத் தவறு என்று தள்ளி விடாது சகயோகம் அளித்து நிற்கச் செய்யுங்கள். அப்போது அவர்கள் மூலமும் திருப்தியின் ஆசீர்வாதம் கிடைக்கும். யார் ஆசீர்வாதங்களைப் பெறுவதில் மகான் ஆகின்றனரோ அவர்கள் சுயம் தானாகவே மகான் ஆகி விடுகின்றனர்.

## நிற்கும்போதும், இங்கங்கு நடக்கும்போதும் பரிஸ்தா சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்விக்கும் சாட்சாத்கார மூரத் பவ !

எப்படி ஆரம்ப காலத்தில் பிரம்மா மறைந்து ஸ்ரீகிருஷ்ணராகத் தென்பட்டார். இந்த சாட்சாத்காரம் அனைத்தையும் கவர்ந்தது. இப்படி சாட்சாத்காரத்தின் மூலம் இப்போதும் கூட சேவை ஆக வேண்டும். சாட்சாத்காரத்தின் மூலம் பிராப்தி ஆகும் போது சேவை ஆகாமல் இருக்க முடியாது. எனவே நிற்கும்போதும் நடக்கும்போதும் பரிஸ்தா சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்வியுங்கள். சொற்பொழிவு ஆற்றக் கூடியவர்கள் அதிகம் உள்ளனர். நீங்கள் (ஆன்மீக) வாசனையையும், அலைகளையும் தாருங்கள்; அப்போதே இவர்கள் (அல்லாஹ் லோக்) இறைக் கூட்டத்தினர் என்று புரிந்து கொள்வர்.

**ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் கர்மத்தை சிரேஷ்டமாகவும், வெற்றி உடையதாகவும் ஆக்க ஞான ஸ்வரூப் சமஜ்தார் பவ !**

யார் ஞான சொரூப புத்திசாலிகளாகி எவ்வித சங்கல்பம், கர்மம் செய்கின்றனரோ அவர்களே வெற்றி மூரத் ஆகின்றனர். இதன் ஞாபகார்த்தமாகவே பக்தி மார்க்கத்தில் காரியங்களை ஆரம்பிக்கும்போது ஸ்வஸ்திக் சக்கரம் போடுகின்றனர் அல்லது பிள்ளையார் சுழி போடுகின்றனர். இந்த ஸ்வஸ்திகா சுய ஸ்திதியில் வருவதற்கும், பிள்ளையார் சுழி ஞானம் நிறைந்த நிலையின் அடையாளமாகும். குழந்தைகளாகிய நீங்கள் சுயம் ஞானம் நிறைந்தவர்களாகி ஒவ்வொரு சங்கல்பம் கர்மம் செய்கிறீர்கள் என்றால் மிக எளிதில் வெற்றியின் அனுபவம் ஏற்படுகிறது.

## பரமாத்ம நினைவின் மடியில் இருக்கக் கூடிய சங்கமயுகி சிரேஷ்ட பாக்யவான் ஆத்மா பவ !

சங்கமயுகம் சத்யுக சொர்க்கத்தைக் காட்டிலும் மிக சிரேஷ்டம் ஆனது. ஏனெனில் பிராமணர்களின் உலகில் கிடைக்காதது என்று எதுவுமே கிடையாது என்று பாடப்படுகிறது. ஒரு பாபா கிடைத்தவுடன் அனைத்துமே கிடைத்து விட்டது. குழந்தைகளாகிய நீங்கள் சில சமயம் அதீந்திரிய சுக ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். சில சமயம் குஷி, சில சமயம் சாந்தி, ஞானம், ஆனந்தம், சில சமயம் பரமாத்மாவின் மடி என்னும் ஊஞ்சலிலும் ஆடுகிறீர்கள். பரமாத்ம மடி என்பது நினைவின் அன்பில் (லவ்லீன்) மூழ்கிய நிலை. இந்த மடி அநேக பிறவிகளின் துக்கவலியை மறக்கச் செய்கிறது. ஆக இந்த சிரேஷ்ட சம்ஸ்காரத்தை சதா நினைவில் கொண்டு பாக்யவான் ஆத்மா ஆகுக.

## நிச்சயத்தின் ஆதாரத்தில் வெற்றி ரத்னமாகி அனைவருக்கும் மாஸ்டர் சகாரா (உதவி) வழங்கும் வள்ளல் பவ !

நிச்சய புத்தி குழந்தைகள் வெற்றி அடைவதின் காரணமாய் சதா குஷியில் ஆடுகின்றனர். அவர்கள் அவர்களது வெற்றியை வர்ணிப்பது கிடையாது, ஆனால் வெற்றி அடைவதின் காரணமாக பிறரது தைரியத்தை அதிகரிக்கின்றனர். எவரையேனும் குறைத்துக் கூற முயற்சி செய்வதில்லை. ஆனால் பாபாவிற்கு சமமாய் மாஸ்டர் உதவியின் வள்ளல் ஆகின்றனர். அதாவது மற்றவர்களை உயரே தூக்கி விடுகின்றனர். வியர்த்தத்தில் இருந்து சதா தூரமாய் இருக்கின்றனர். வியர்த்தத்தில் இருந்து விலகி இருப்பதே வெற்றி அடைவதாகும். இப்படிப்பட்ட வெற்றி குழந்தைகள் அனைவருக்கும் மாஸ்டர் சகாரா வள்ளல் ஆகின்றனர்.

**விலகிச் செல்வதற்குப் பதிலாய் ஒவ்வொரு அடியிலும் பாபாவின் உதவியை அனுபவம் செய்யக் கூடிய நிச்சய புத்தி விஜயி பவ !**

‘வெற்றி பவ’வின் வரதானி ஆத்மா ஒவ்வொரு அடியிலும் தன்னை சகாராவிற்கு கீழேயே அனுபவம் செய்கிறது. அவர்களது மனதில் சங்கல்பத்தில் கூட உதவி இழந்த, தனியாக நிற்கும் அனுபவம் ஏற்பட்டதில்லை. சில சமயம் மனச் சோர்வு அல்லது அற்பகால எல்லைக்குட்பட்ட வைராக்யம் ஏற்படுவது இல்லை. அவர்கள் ஒருபோதும் எக்காரியத்திலும், எப்பிரச்சினையிலும் தனி நபரிலிருந்து விலகிப் போவதில்லை. ஆனால் கர்மத்தைச் செய்து கொண்டே எதிர் நோக்குகின்றனர். சக யோகிகளாகிக் கொண்டே எல்லையற்ற வைராக்ய விருத்தியில் இருக்கின்றனர்.

## சதா பகவான் மற்றும் பாக்யத்தின் ஸ்மிருதியில் இருக்கக் கூடிய சர்வ சிரேஷ்ட பாக்யவான் பவ !

சங்கமயுகத்தின் சைதன்ய சொரூபத்தில் பகவான் குழந்தைகளுக்கு சேவை செய்கின்றார். பக்தி மார்க்கத்தில் அனைவரும் பகவானின் சேவை செய்கின்றனர். ஆனால் இங்கோ சைதன்ய டாக்டர்களுக்கு சுயம் பகவானே சேவை செய்கிறார் - அமிர்தவேளை எழுப்புகிறார், போக் வைக்கிறார், உறங்கவும் வைக்கிறார். பாட்டுக்கு உறங்கி, பாட்டுக்கு எழும் செல்லமான, சர்வ சிரேஷ்ட பாக்யவான்கள் நாம், பிராமணர்கள். இந்த பாக்யத்தின் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். ஒரே ஒரு பாபாவிற்கு செல்லம் ஆகுங்கள், மாயாவிற்கு அன்று. மாயாவிற்குச் செல்லமாவோர்கள் நிறைய சேட்டைகள் செய்கின்றனர்.

**ஓம் சாந்தி . . .**

* * * * *